விலை : 20.00 website : www.valampurii.lk
Registered as a Newspaper in Sri Lanka
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம் 1000/= மட்டுமே

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 பங்குனி 27 சனிக்கிழமை (09.04.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 112

# தீராத இனப்பிரச்சினையால் ஆயுத கிளர்ச்சி தலைதூக்கும்

## தீர்வின் அவசியத்தை ஜனாதிபதி வலியுறுத்து



(கொழும்பு)

இந்த யுகத்தில் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படா விடின் எதிர்காலத்தில் நாட்டை பிரிப்பதற்கான ஆயுதம் தாங்கிய கிளர்ச்சிகள் தலைதூக்கும். எனவே இனப்பிரச்சினைக்கு நாம் விரைந்த தீர்வை காணவேண்டியது அவசியம் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

(23-ம் பக்கம்)

## யானை தாக்கி ஒருவர் மரணம்

(பனிக்கன்குளம்)

வவுனியா நெடுங்கேணிப் பகுதியில் யானை தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 8 மணிக்கு நெடுங்கேணி சேனப்புலவில் இடம்பெற்றுள்ளது.

இதில் கணபதிப்பிள்ளை மனோகரசீலன் (வயது-42) என்பவரே

24 ஆம் பக்கம் பார்க்க....

## பாம்பு தீண்டியதில் குடும்பஸ்தர் மரணம்

(பனிக்கன்குளம்)

பாம்பு தீண்டியதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று அதிகாலை 5 மணியளவில் முல்லைத்தீவு அளம்பில் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

5 பிள்ளைகளின் தந்தையான எ.ஒஷ்தியாம்பிள்ளை (வயது-64) என்ற ஓய்வுபெற்ற தபால் ஊழி

24 ஆம் பக்கம் பார்க்க....

## தனிப்பட்ட வகையில் நான் பொறுப்பில்லை

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் குடிநீர் பிரச்சினையில் தமக்கு தனிப்பட்ட வகையில் பொறுப்பில்லை என வட மாகாண விவசாய அமைச்சர் பொன்னுத்துரை ஐங்கரநேசன் நீதிமன்றத்

24 ஆம் பக்கம் பார்க்க....

## இராணுவப் பிடியை அரசு தொடரவே முயற்சிக்கிறது

### சிறிதரன் எம்.பி சாடல்

(யாழ்ப்பாணம்)

நல்லாட்சி எனக் கூறுகின்ற இந்த அரசும் தமிழ் மக்களின் நிலங்களை அபகரித்து அவற்றை இராணுவப் பிடிக்குள் வைத்திருக்கவே முயற்சிக்கிறது என தமிழ்த் தேசியக கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

கடற்படையினரின் தேவைக்காக வேலணைப் பகுதியில் உள்ள பொதுமக்களின் காணிகளை சுவீகரிக்கும் நடவடிக்கைக்கு எதிர்ப்புத்

23 ஆம் பக்கம் பார்க்க....

## நேற்றும் தமிழ்மொழியில் தேசிய கீதம் இசைப்பு

### மகிந்த புறக்கணிப்பு

(கொழும்பு)

கொழும்பில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 60 ஆவது ஆண்டு விழாவில் தமிழ் மொழியில் தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

கொழும்பில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 60 ஆவது ஆண்டு விழாவில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும், அவரது ஆதரவு அணியை சேர்ந்தவர்களும் கலந்து கொள்ளவில்லை.

24 ஆம் பக்கம் பார்க்க....

## வவுனியா குருமன்காட்டு பகுதியில் ரயில் மோதி குடும்பஸ்தர் பலி



(குருமன்காடு)

வவுனியா குருமன்காட்டுப் பகுதியில் பயணித்த புகையிரத்தில் மோதுண்டு ஒருவர் பலியாகியுள்ளார்.

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி சென்ற புகையிரதம் குருமன்காடு பகுதியில் பயணித்துக்கொண்டிருந்த சமயம் குறித்த நபர தண்டவாளத்தில் திடீர் என ஏறி நின்றதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

இதில் முல்லைத்தீவு அளம்பில் தெற்கை சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான செபஸ்தியாம்பிள்ளை பீற்றர் என்பவரே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். இந் நிலையில்

23 ஆம் பக்கம் பார்க்க....

## அரசின் மீதான நம்பிக்கை குறைவடைந்து செல்கின்றது


### ஜேர்மன் எம்.பிகளிடம் யாழ்.ஆயர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

புதிய நல்லாட்சி அரசின் மீது வடபகுதி மக்கள் வைத்திருந்த நம்பிக்கை தற்போது குறைவடைந்து கொண்டு போகின்றது என யாழ் மறை மாவட்ட ஆயர் வண.ஜஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை, ஜேர்மனிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சுட்டிக்காட்டியுள்ளார்.

24 ஆம் பக்கம் பார்க்க....





பதில் பிரதம நீதியரசராக உயர் நீதிமன்ற நீதியரசர் சந்திரா எக்கநாயக்க, நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

## ஆணைக்குழு முன் பசில் ஆஜர்



(கொழும்பு)

முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, பாரிய நிதி மோசடிகள் மற்றும் அதிகார துஷ்பிரயோகம் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன்னிலையில் நேற்று ஆஜராகியுள்ளார்.

வாக்கு மூலமொன்றை பெற்

24 ஆம் பக்கம் பார்க்க....

## அடையாளத்தை அழிக்கும் திட்டத்தை கைவிடுங்கள்

### பழங்குடியின மக்கள் ஜனாதிபதிக்கு கடிதம்

(கொழும்பு)

சம்பூரில் அனல் மின் நிலையம் அமைப்பது இப்பிரதேசத்தின் பூர்வீக குடி மக்கள் என்ற அடிப்படையில் எமது வாழ்வாதாரத்தையும் இயல்பு வாழ்வையும் தமது அடையாளத்தையும் இல்லாமல் செய்யும் ஒரு நடவடிக்கையாகும்.

எனவே சம்பூரில் அனல் மின் நிலைய திட்டத்தை உடனடியாக கைவிட வேண்டும் என வலியுறுத்தி மூதூர் கிழக்கைச் சேர்ந்த பூர்வீக பழங்குடியின மக்கள் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை நேற்று அனுப்பி வைத்துள்ளனர்.

24 ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கண்ணீர் அஞ்சலி



பிறப்பு
21
03
1927

இறப்பு
06
04
2016

## தம்பையா பசுபதிப்பிள்ளை
## (பசுபதி)

ஐம்பது ஆண்டுகளாய் எம்முடன்
உண்மையாய் நேர்மையாய்
துணிவாய் பணியாற்றி - இன்று
இறைவனடி சேர்ந்தீரே!
ஆண்டுகள் ஓடி மறையும்
உம் நினைவுகள் எம்மைவிட்டு
ஒருகாலம் அழிந்திடாது

எமது ஸ்தாபனத்தில் கடந்த ஐம்பது ஆண்டுகளாக தன்னலமற்ற சேவையாற்றி 06.04.2016 புதன்கிழமை இறைபதம் அடைந்த தம்பையா பசுபதிப்பிள்ளை அவர்களின் மரணச் செய்தி அறிந்து துயரடைகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

**S.V.முருகேசு**
**உரிமையாளர் எம்.குனரட்ணம்,**
**ஊழியர்கள்.**

**S.V.முருகேசு**
**154, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
**S.V.M.(PVT) LTD 122, டாம் வீதி, கொழும்பு 12.**

**S.V.முருகேசு**
**கரடிப்போக்குச் சந்தி,**
**கிளிநொச்சி.**

## நல்லாட்சியிலும் காணி சுவீகரிப்பு தொடர்ந்தால்

# போராட்டங்கள் உக்கிரமடையும்

## வடமாகாணசபை உறுப்பினர்கள் எச்சரிக்கை

நல்லாட்சியிலும் தமிழ் மக்களின் காணிகளை சுவீகரிக்கும் நடவடிக்கை தொடர்ந்தால் அரசுக்கெதிரான போராட்டங்கள் உக்கிரமடையும் என மாகாணசபை உறுப்பினர்கள் எச்சரித்துள்ளனர்.

கடற்படையினரின் தேவைக்காக வேலணைப்பகுதியில் உள்ள பொதுமக்களின் காணிகளை சுவீகரிக்கும் நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்றையதினம் பொதுமக்களால் முற்றுகை போராட்டம் ஒன்று திருநெல்வேலி பலாலி வீதியில் அமைந்துள்ள பிரதேச நில அளவைத் திணைக்களத்தின் முன் முன்னெடுக்கப்பட்டது. அதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவிக்கையில்.

தமிழர்களின் வாக்குகளை பெற்று ஆட்சிக்கு வந்த புதிய ஆட்சியாளர்கள் கடந்தகாலத்திலே தமிழ் இனத்தைவேரோடு பல இலட்சக்கணக்கான மக்களை கொன்று குவித்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாதையிலே மிக கொடூரமாக தாயக பூமியை ஆக்கிரமிக்கும் செயற்பாட்டை சிரித்த முகத்துடன் செய்துவருகிறது.

இராணுவ மயமாக்கல் நீக்கப்படும் என சர்வதேச சமூகமும் எமது மக்களும் நம்பியதை பொய்யாக்குகின்ற விதத்தில் பல ஆயிரக்கணக்கான காணிகளை அபகரித்து விட்டு ஒரு சில பகுதிகளை மாத்திரம் விடுவித்துள்ளது. இன்னமும் தொடர்சியாக யாழ்.மாவட்டம் உட்பட வடகிழக்கு மாகாணங்களில் முப்படைமற்றும் பொலிஸாருடைய தேவைகளுக்காக தனியார் காணிகள் சுவீகரிக்கப்படுகின்றன. இச்செயற்பாடுகளை வன்மையாக கண்டிக்கிறோம்.

அன்னத்தை நம்பி வாக்களித்த எம்மக்களுக்கு அந்த அன்னப்பட்சி பாலாக சிங்கள பௌத்தத்தை குடித்து விட்டு தண்ணீராக தமிழ் மக்களை பிரித்து ஏமாற்றுகிறது. தொடர்ச்சியாக எமது மக்களின் காணிகள் அபகரிக்கப்படுகின்றன.

அரசு இதற்கு நடவடிக்கை எடுக்காவிட்டால் வடகிழக்கில் உள்ள அனைத்து மாவட்டச் செயலகங்களும் முடக்கும் நிலைக்கு தள்ளப்படுவோம். எமது மக்களின் காணிகளை சுவீகரிக்கும் நடவடிக்கைகளுக்கு எதிராக எமது போராட்டம் தொடரும் என தெரிவித்தார்.

இது தொடர்பாக வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் கருத்து தெரிவிக்கையில்,

கடந்த ஓராண்டுக்கு முன்னர் காணி அளக்கும் செயற்பாடுகளை தடுத்து நிறுத்துவதே எமது நாளாந்த கடமைகளில் ஒன்றாக இருந்தது. இப்போது புதிய அரசாங்கம் வந்ததில் இருந்து அவ்வாறான செயற்பாடுகள் சற்று குறைவடைந்தது போன்று காணப்பட்டது. ஆனால் கடந்த மாதம் இளவாலை பிரதேசத்தில் மக்களுக்கு சொந்தமான அவர்களின் தேவாலய காணியை அபகரிக்கும் முயற்சியில் ஈடுபட்டார்கள். மக்களின் எதிர்ப்பினால் கைவிட்டார்கள். அதற்குபின் சுழிபுரத்தில் மிகவும் நயவஞ்சகத்தனமாக மக்களை ஏமாற்றி அவர்களின் காணிகளை கடற்படைமுகாம் அமைக்க பெற்றுக் கொண்டார்கள். தற்போது தீவகத்தில் பல ஏக்கர் காணிகளை அளவிட உள்ளார்கள். 11 ஆம் திகதி ஆனைக்கோட்டை பகுதியிலும் அளவிடவுள்ளார்கள் என்றும் அறிகிறோம்.

முன்பெல்லாம் காணி எங்கு அளவீடு செய்கிறார்களோ அங்கு சென்றுதான் எமது எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்தோம் ஆனால் இப்போது காணி அளவிடுபவர்களின் அலுவலகத்தின் முன் வந்து அவர்களை தடுத்து நிறுத்த வேண்டும் என வந்துள்ளோம்.

நல்லாட்சி மூலம் தீர்வு கிடைக்கும் என நம்பிய மக்களை ஏமாற்றி இச்செயற்பாடுகள் தொடர்ச்சியாக நடைபெற்றால் மோசமான பின் விளைவுகளை ஏற்படுத்தும் என அவர் மேலும் எச்சரித்தார்.

இது தொடர்பாக மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரட்ணம் கருத்து தெரிவிக்கையில்.

வேலணைப்பகுதியில் ஏற்கனவே 1990 ஆம் ஆண்டுகளில் பொதுமக்களின் காணிகளை சுவீகரித்து வைத்துள்ள கடற்படையினர் தற்போது மேலதிகமாக உள்ள பொதுமக்களின் காணிகளையும் ஆக்கிரமிப்பதற்கு முயற்சித்துள்ளார்கள்.

போருக்கு பின்னரான காலப் பகுதியில் தற்போது நல்லாட்சி அரசை நம்பியிருந்த மக்களை ஏமாற்றும் செயற்பாடுகள் படிப்படியாக நடைபெறுகின்றன. வலி வடக்கில் சிறுகாணிகளை கையளித்து விட்டு அவற்றை பெரியவிழா வாக கொண்டாடி சர்வதேசத்துக்கு நல்லாட்சி என்ற நாடகத்தை அரங்கேற்றி கொண்டு வேறு விதமாக மக்களின் காணிகளை அபகரித்து கொண்டு இருக்கின்ற மோசமான ஆட்சியே தற்போது நடைபெறுகிறது.

ஜனநாயகம்.சமஉரிமை என்று சொல்லும் அரசு சிங்கள பௌத்த ஆதிக்கத்தை எம்மீது திணிப் பதற்கான நடவடிக்கையினையே செய்து வருகிறது. பௌத்தர்களே இல்லாத இடங்களில் விகாரைகளை அமைத்து எமது தாயக தேசத்தை எம்மிடம் இருந்து பறிக்கும் வேலைகளையே மேற்கொண்டு வருகின்றனர். நல்லாட்சியானது நாசமாக போகும் நடவடிக்கைகளை தொடர்ந்தும் மேற்கொள்ளுமேயானால் அந்த நல்லாட்சி அரசுக்கு எதிராக நாம் செயற்பட வேண்டிய அளவு எமது போராட்டங்கள் உக்கிரமடையும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## மீள்குடியேற்றுமாறு வலியுறுத்தல்



வலி வடக்கு காணி விடுவிப்பு தொடர்பாக யாழ்.மாவட்டத்தில் உள்ள நலன்புரி நிலையங்களில் இருந்து 20 பேர் கொண்ட குழுவினர் கடந்த 5 ஆம் திகதி மனித உரிமை ஆணைக்குழுவின் தலைமைப்பீட அதிகாரிகளை கொழும்பில் உள்ள மனித உரிமை ஆணைக்குழுவின் தலைமைக் காரியாலயத்தில் சந்தித்து கலந்துரையாடினர்.

சட்டத்துக்கும் மனித உரிமைகளுக்குமான கற்கை அமையத்தின் ஏற்பாட்டில் 3 பிரிவாக நடைபெற்ற இந்த சந்திப்பில் ஐரோப்பிய யூனியனின் தொடர்பாடல் மற்றும் மனித உரிமைகள் அதிகாரி ரைனா பெரேரா.ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான பிரதிநிதிகள். மற்றும் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின்தலைவிதீபிகா உடுகம மற்றும் ஆணையாளர்களை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர் .

இதில் வலி வடக்கில் இருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வாழும் மக்களின் சொந்த காணி விடுவிப்பு, மீள் குடியேற்றம், மீள் குடியேற்றம் செய்யப்பட்டவர்களின் பிரச்சினைகள் மற்றும் காணி இல்லாது இருப்பவர்களுக்கான காணிகளை வழங்குதல் தொடர்பான விடயங்களை அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியுள்ளனர்.

இக் கலந்துரையாடலில் 16 நலன்புரி நிலையங்களில் இருந்தும் நலன்புரி நிலைய பொது நிர்வாக உறுப்பினர்கள் உட்பட 20 பேர் கீலந்து கொண்டனர். (இ-9)

## தேசிய பிராந்திய பாதுகாப்பு தொடர்பில் இலங்கை அரசு அர்ப்பணிப்புடன் உள்ளது

### ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

தேசிய மற்றும் பிராந்திய பாதுகாப்பு தொடர்பில் இலங்கை மிகுந்த அர்ப்பணிப்புடன் உள்ளது எனத் தெரிவித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஒரு நாட்டுடனான உறவு, இன்னொரு நாட்டின் மீது எந்தவித மோசமான தாக்கத்தையும் கொண்டிருக்கக்கூடாது என்ற கொள்கையின் அடிப்படையிலேயே அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கை அமைந்திருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஜேர்மன் நாட்டின் நாடாளுமன்ற தூதுக்குழுவொன்று, ஜனாதிபதி செயலகத்தில் வைத்து, நேற்று முன்தினம் வியாழக்கிழமை சந்தித்தது. இச் சந்திப்பின் போது, இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை மற்றும் முக்கிய அயல் நாடுகளுடனான உறவுகள் தொடர்பில் தூதுக்குழுவினர் வினவியபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தியாவுடனான இலங்கையின் நட்புறவு பல நூற்றாண்டுகள் பழைமைவாய்ந்தது என்றும் அது இந்தியாவிலிருந்து பெற்றுக் கொண்ட புத்த பெருமானின் செய்தியின் உறுதியான அடித்தளத்திலேயே கட்டியெழுப்பப்பட்டுள்ளது என்றும் ஜனாதிபதி இதன்போது குறிப்பிட்டார். சீனா, உலகெங்கிலும் பெரும் முதலீடுகளைக் கொண்டுள்ள ஒரு முக்கிய வர்த்தக ஜாம்பவான் எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, இலங்கை பல்வேறு துறைகளில் சீனாவுடன் பலமான உறவுகளைக் கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார். (இ-5)

## போட்சிட்டி திட்டத்தை முன்னெடுக்க இலங்கையும் சீனாவும் இணக்கம்!

கொழும்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள போட்சிட்டி திட்டத்தை விரைந்து முன்னெடுக்க இலங்கையும் சீனாவும் இணங்கியுள்ளன.

சீனா சென்றுள்ள இலங்கையின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் சீன பிரதமர் லீ கெக்குயாங் ஆகியோருக்கு இடையில் இடம்பெற்ற சந்திப்பின்போதே இந்த இணக்கம் ஏற்பட்டுள்ளது.

ஏற்கனவே இந்த திட்டத்தை மீண்டும் முன்னெடுக்க இலங்கை அரசாங்கம் சீன நிறுவனத்துக்கு அனுமதியளித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இந்தநிலையில் போட்சிட்டி திட்டத்தை கடந்த ஒருவருடகாலமாக நிறுத்தி வைத்தமைக்காக 125 மில்லியன் டொலர்களை நட்டஈடாக வழங்கவேண்டும் என்ற சீன நிறுவனத்தின் கோரிக்கை தொடர்பில் இந்த சந்திப்பின் போது பேசப்பட்டதா? என்பது குறித்து தகவல்கள் வெளியாகவில்லை.

இதேவேளை ரணிலின் இந்த விஜயத்தின் போது 7 உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டுள்ளன. (இ-5)

## 25 சிங்களவர்கள், 13முஸ்லிம்கள், 5தமிழர்கள் சட்டவிரோதமாக பனாமாவில் பணம் பதுக்கல்

கணக்கில் காட்டப்படாத கோடிக் கணக்கான சொத்துக்கள் பனாமா நாட்டில் எவ்வாறு பதுக்கப்பட்டுள்ளது என்பது தொடர்பான தகவல்கள் கசிந்துள்ளன.

உலகம் முழுவதும் அரசியல் முக்கியஸ்தர்கள், திரை நட்சத்திரங்கள், விளையாட்டு வீரர்கள் என பிரபலங்கள் பலர் தங்கள் கணக்கில் வராத சொத்துக்களை பனாமா நாட்டில் எவ்வளவு பதுக்கி வைத்திருக்கிறார்கள், எப்படி எல்லாம்வரிஏய்ப்பு செய்துள்ளார்கள் என்ற தகவல் இதில் வெளியாகியுள்ளன.

இந்நிலையில் இலங்கையில் இருந்து 46 பேர் இந்த பணப் பதுக்கல் விவகாரத்தில் ஈடுபட்டுள்ளமை குறித்து தற்போது தெரிய வந்துள்ளது.

இவர்களில் இலங்கையின் பெரும் வர்த்தகர்களான போரா சமூக முஸ்லிம்கள் 13 பேர் மற்றும் ஐந்து தமிழர்கள் இடம்பெற்றுள்ளனர்.

அதேவேளை சிங்களவர்கள் 25 பேரில் லக்பிம பத்திரிகை மற்றும் சுமதி குரூப் நிறுவனங்களின் தலைவரும், அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் தலைவருமான ஜகத் சுமதிபாலவும் உள்ளடங்குவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் உரிமையாளர்களின் பெயர் வெளியிடப்படாத மூன்று நிறுவனங்களும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. (இ-5)

# ஐ.பி.எல் – 2016 இன்று ஆரம்பம்

இந்தியாவில் 2016-ம் ஆண்டு 9-வது ஐ.பி.எல் இருபது-20 போட்டிகள் இன்று ஆரம்பமாக வுள்ளன.

இதற்கான தொடக்க விழா நேற்று மும்பை வொர்லியில் உள்ள நேஷனல் ஸ்போர்ட்ஸ் கிளப் ஒப் இந்தியா அரங்கில் நடைபெற்றது.

இதனை தொடர்ந்து இன்று 9-ம் திகதி மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெறும் தொடக்க ஆட்டத்தில் நடப்பு சம்பியன் மும்பை இந்தியன்ஸ்-ரைசிங் புனே அணிகள் மோதுகின்றன.

**முழு அட்டவணை விபரம்**

ஏப்ரல் 9 : மும்பை-புனே, மும்பை இரவு 8 மணி.

ஏப்ரல் 10 : கொல்கத்தா-டெல்லி, கொல்கத்தா இரவு 8 மணி.

ஏப்ரல் 11 : பஞ்சாப்-குஜராத், மொஹாலி இரவு 8 மணி.

ஏப்ரல் 12 : பெங்களூரு-ஐதராபாத், பெங்களூரு இரவு 8 மணி.


ஏப்ரல் 13 : கொல்கத்தா-மும்பை, கொல்கத்தா இரவு 8 மணி.

ஏப்ரல் 14 : குஜராத்-புனே, ராஜ்கோட் இரவு 8 மணி.

ஏப்ரல் 15 : டெல்லி-பஞ்சாப், டெல்லி இரவு 8 மணி.

ஏப்ரல் 16 : ஐதராபாத்-கொல்கத்தா, ஐதராபாத் பிற்பகல் 4 மணி.

ஏப்ரல் 16 : மும்பை-குஜராத்,



மும்பை இரவு 8 மணி.

ஏப்ரல் 17 : பெங்களூரு-டெல்லி, டெல்லி இரவு 8 மணி.

ஏப்ரல் 18 : ஐதராபாத்-

மும்பை, ஐதராபாத் இரவு 8 மணி.

ஏப்ரல் 19 : பஞ்சாப்-கொல்கத்தா, மொஹாலி இரவு 8 மணி

ஏப்ரல் 20 : மும்பை-பெங்களூரு, மும்பை இரவு 8 மணி.

ஏப்ரல் 21: குஜராத்-ஐதராபாத், ராஜ்கோட் இரவு 8 மணி.

ஏப்ரல் 22 : புனே-பெங்களூரு, புனே இரவு 8 மணி.

ஏப்ரல் 23 : டெல்லி-மும்பை, டெல்லி பிற்பகல் 4 மணி

ஏப்ரல் 23 : ஐதராபாத்-பஞ்சாப், ஐதராபாத் இரவு 8 மணி.

ஏப்ரல் 24 : குஜராத்-பெங்களூரு, ராஜ்கோட் பிற்பகல் 4 மணி.

ஏப்ரல் 24 : புனே-கொல்கத்தா, புனே இரவு 8 மணி.

ஏப்ரல் 25 : பஞ்சாப்-மும்பை, மொஹாலி இரவு 8 மணி.

ஏப்ரல் 26 : ஐதராபாத்-புனே, ஐதராபாத் இரவு 8 மணி.

ஏப்ரல் 27 : டெல்லி-குஜராத், டெல்லி இரவு 8 மணி.

ஏப்ரல்28 : மும்பை-கொல்கத்தா, மும்பை இரவு 8 மணி.

ஏப்ரல் 29 : புனே-குஜராத், புனே இரவு 8 மணி.

ஏப்ரல்30 : டெல்லி-கொல்கத்தா, டெல்லி பிற்பகல் 4 மணி.

ஏப்ரல் 30 : ஐதராபாத்-பெங்களூரு, ஐதராபாத் இரவு 8 மணி.

மே 1 : குஜராத்-பஞ்சாப், ராஜ்கோட் பிற்பகல் 4 மணி.

மே 1 : புனே-மும்பை, புனே இரவு 8 மணி.

மே 2 : பெங்களூரு-கொல்கத்தா. பெங்களூரு இரவு 8 மணி

மே 3 குஜராத்-டெல்லி, ராஜ்கோட் இரவு 8 மணி.

மே 4 : கொல்கத்தா-பஞ்சாப், கொல்கத்தா இரவு 8 மணி.

மே 5 : டெல்லி-புனே, டெல்லி இரவு 8 மணி.

மே 6 : ஐதராபாத்-குஜராத், ஐதராபாத் இரவு 8 மணி.

மே 7 : பெங்களூரு-புனே, பெங்களூருபிற்பகல் 4 மணி.

மே 7 : பஞ்சாப்-டெல்லி, நாக்பூர் இரவு 8 மணி

மே 8 : மும்பை - ஐதராபாத், மும்பை பிற்பகல் 4 மணி.

மே 8 : கொல்கத்தா-குஜராத், கொல்கத்தா இரவு 8 மணி

மே 9 : பஞ்சாப்-பெங்களூரு, நாக்பூர் இரவு 8 மணி.

மே 10 : புனே-ஐதராபாத், புனே இரவு 8 மணி.

மே 11 : பெங்களூரு-மும்பை, பெங்களூரு இரவு 8 மணி.

மே 12 : ஐதராபாத்-டெல்லி, ஐதராபாத் இரவு 8 மணி.

மே 13 : மும்பை-பஞ்சாப், மும்பை இரவு 8 மணி

மே 14 : பெங்களூரு-குஜராத், பெங்களூரு பிற்பகல் 4 மணி.

மே 14 : கொல்கத்தா-புனே, கொல்கத்தா இரவு 8 மணி.

மே 15 : மும்பை-டெல்லி, மும்பை பிற்பகல் 4 மணி.

மே 15 : பஞ்சாப்-ஐதராபாத், நாக்பூர் இரவு 8 மணி

மே 16 : கொல்கத்தா-பெங்களூரு, கொல்கத்தா இரவு 8 மணி.

மே17 : புனே-டெல்லி, புனே இரவு 8 மணி.

மே 18 : பெங்களூரு-பஞ்சாப், பெங்களூரு இரவு 8 மணி.

மே 19 குஜராத்-கொல்கத்தா, ராஜ்கோட் / கான்பூர் இரவு 8 மணி.

மே 20 : டெல்லி-ஐதராபாத், ராய்பூர் இரவு 8 மணி.

மே 21 : புனே-பஞ்சாப், கொல்கத்தா பிற்பகல் 4 மணி.

மே 21 : குஜராத்-மும்பை, ரா்ஜ்கோட்/ கான்பூர் இரவு 8 மணி.

மே 22 : கொல்கத்தா-ஐதராபாத், கொல்கத்தா பிற்பகல் 4 மணி,

மே 22 : டெல்லி-பெங்களூரு, ராய்பூர் இரவு 8 மணி.

**நொக்-அவுட் சுற்று**

மே 24 : இறுதிப்போட்டிக்கான தகுதி சுற்று பெங்களூரு இரவு 8 மணி

மே 25 : எலிமினேட்டர் புனே இரவு 8 மணி.

மே 27 : இறுதிப்போட்டிக்கான தகுதி சுற்று புனே இரவு 8 மணி.

மே 29 : இறுதிப்போட்டி மும்பை இரவு 8 ம்ணி. (க)

## இன்றைய போட்டிகள்

தெல்லிப்பழை நாமகள் சன சமூக நிலையத்தின் 53 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் நாமகள் கிண்ணத்துக்கான வடக்கின் சமர் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் நாமகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இத் தொடரில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து சிவானந்தா விளையாட்டுக்கழகமும் மாலை 4.45 மணிக்கு நடைபெறும் போட்டியில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து திருக்குமரன் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன. (க)




"சஹஜ யோகா இலங்கை"

மத, மொழி, இன, வயது வேறுபாடுகளைக் கடந்த அனைவருக்கும் பொதுவான இலகுவான வழியில் அமைதி, அன்பு, பேரானந்தம் உண்மையை உணர்ந்து **"உங்களை நீங்களே அறிந்து கொள்ள"** ஓர் அரிய தியானப்பயிற்சி! அனைவரும் வாரீர்! பாடசாலை மாணவர்களிற்கு சிறப்பான வழிகாட்டுதல்கள் வழங்கப்படும் அனுமதி இலவசம்

**அருள்மிகு அன்னை ஸ்ரீநிர்மலாதேவி**

சஹஜ இல்லம். பழைய இல.07, புதிய இல.19

பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

**T.P - 021 222 8212, 021 205 7010**

செவ்வாய்க்கிழமை தோறும் மாலை 4.30 மணி

ஞாயிற்றுக்கிழமை தோறும் காலை 9.00 மணி

குறிப்பு: உங்கள் பாடசாலைகளில் நிகழ்த்த அதிபர்கள் எம்மை நேரடியாக தொடர்பு கொள்ளவும். (4105)

**விற்பனை பிரதிநிதிகள் ( Sales Rep) தேவை**

எமது ஐஸ்கிறீம் மற்றும் Ready to cook உணவு வகைகளை வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், தீவகம், வன்னி ஆகிய பகுதிகளுக்கு விற்பனை செய்யக்கூடிய விற்பனை பிரதிநிதிகள் ( Sales Rep ) உடன் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் மற்றும் கமிசன் என்பன வழங்கப்படும். விற்பனை துறையில் அனுபவமுள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

**Sylo Food & Baveareges pvt Ltd**
**No 76, Amman Kovil Road, Kokuvil**
**Phone : 0777 710785** (4145)

**தேசிய அபிவிருத்தி லொத்தர்**

07.04.2016 அன்று இடம்பெற்ற மகாஜன சம்பத தேசிய லொத்தர் சீட்டிழுப்பில் இருபது லட்ச ரூபா முதல் பரிசு யாழ்ப்பாணத்தில் வெல்லப்பட்டுள்ளது.

S.கனகலிங்கம் முகவர் ஊடாகவே இவ் லொத்தர் விற்பனை செய்யப்பட்டு வெற்றி கொள்ளப்பட்டுள்ளது. நீங்களும் இன்றே S.கனகலிங்கம் முகவர் லொத்தர் கூடாரங்களில் லொத்தர்களைப் பெற்று பரிசுகளை அள்ளிச் செல்லுங்கள்.

**கனகலிங்கம் திலகவதி**
**முகவர், யாழ்ப்பாணம்** (4152)

**முதியோர் சுகவாழ்வு கழக கூட்டம் -09.04.2016**

எமது முதியோர் சுகவாழ்வு கழகம் கடந்த கால கொடிய உள்நாட்டு யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட முதியோர்களுக்கு நஷ்டஈடு, இழப்புக்கள், நிவாரணம் பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கும் நோக்கத்திற்காக கழகத்தினால் நடாத்தும் இன்றைய கூட்டத்தில் சமுகமளித்து பயன்பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இடம் : *சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் மண்டபம் வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.*

காலம் : *09.04.2016 இன்று சனிக்கிழமை பி.ப 4.00 தொடக்கம் 6.00 வரை*

கழகத்தினால் வெளியிட்ட முதியோர் சுகவாழ்வுக்கான பத்திரிகை, சஞ்சிகைகள் பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர் : 0776068658**
**காரியதரிசி : 0773553002** (4154)

**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி**

**1ஆவது சாரண அணியினரின் அறிவித்தல்**

**(1916 -2016)**

எமது சாரண அணியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சாரணிய வரலாற்றினை ஆவணப்படுத்தி நூற்றாண்டு மலர் ஒன்றினை வெளியிடவுள்ளோம். அதற்காக 1916 -2016 வரையான காலப்பகுதியில் பணியாற்றிய பொறுப்பாசிரியர்கள், ஜனாதிபதி சாரண விருது பெற்றோர், ராணி சாரண விருது பெற்றோர், பச்சை நாடா விருது பெற்றோர், எமது சாரணியத்தில் சாதித்தவர்கள் போன்றோர் தமது விப்ரங்களை ஆதாரத்துடனும், புகைப்படங்களுடனும் 05.05.2016க்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக எமது கல்லூரிக்கு அனுப்பி வைக்கப்படும் பட்சத்தில் அவர்களுடைய விபரங்கள் எமது நூற்றாண்டு மலரில் உள்ளடக்கப்படும் என்பதை அறியத் தருகின்றோம்.

*அனுப்ப வேண்டிய முகவரி :* அதிபர்
C/O சாரணிய பொறுப்பாசிரியர்,
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(4144)

# குழந்தையை கொலை செய்த பெற்றோர்

பிறந்த குழந்தையை கொலை செய்த குற்றச்சாட் டின் பேரில் பெற்றோர் நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பெற்றோர் குழந் தையை கொன்று மிகவும் இரகசியமான முறையில் புதைத்துள்ள்தாகவும் பொலிஸாரின் முதற்கட்ட விசா ணைகளி லிருந்து தெரிய வந்துள்ளது.

இவர்கள் கொச்சிக்கடை யில் உள்ள அத்கல பகுதி யை சேர்ந்தவர்கள் எனவும் 5குழந்தைகளின் பெற்றோர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-5)

# பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி சைவ வாலிப சங்கத்தின் 99 ஆவது பரிசளிப்புவிழாநாளை 10ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அளவெட்டி மகாஜன சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பிக்கவுள்ளார். (இ

## மஹோற்சவம்

வட்டுக்கோட்டை அடைக்கலந் தோட்ட ஸ்ரீகந்தசுவாமி திருக்கோயில் வருடாந்த மஹோற்சவம் எதிர் வரும் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 7 மணி முதல் அபிஷேக ஆராதனையுடன் ஆரம்பமாகி முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றம் இடம்பெறும்.

தொடர்ந்து 10 தினங்கள் மஹோற்சவப் பெருவிழா இடம் பெறும். 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு இடப வாகனத்தில் மின்சார தீபங்களால் அலங்கரிக் கப்பட்ட சப்பரமும் 20 ஆம் திகதி புதன்கிழமை காலை 7.30 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையும் காலை 9 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறு நாள் 21 ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு தீர்த்தத் திருவிழா வும் நடைபெறும். (இ-17)






# இராசி பலன்

09.04.2016

(பங்குனி 27, சனிக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.07 மணிக்கு
துதியை பிற்பகல் 12.41 மணிவரை
பரணி பின்னிரவு 12.16 மணிவரை
சுபநேரம் 3.06-4.36 மணிவரை
இராகுகாலம் 9.06-10.36 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| சூரி, சுக் | புத, சந் | | |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் அத்தம், சித்திரை இரவு 5.45 இற்கு இட-சந் | | |
| | | | குரு ராகு |
| | சனி செவ் | | |

**மீனம்** வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள், பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், ரோக பயமுண்டு, சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மேடம்** திட்டமிட்ட காரியமொன்றில் புதிய திருப்பங்கள் ஏற்படலாம், குடும்பத்தினர் உங்களின் முயற்சிகளுக்கு பக்க பலமாக இருப்பர், போசன சுகமுண்டு.

**இடபம்** பொறுப்பாக வேலைகளைச் செய்தாலும் ஏதாவது பழிச் சொல்லுக்கு ஆளாகலாம், வெளியூர்த் தொடர்புகள் நன்மை தரும், சிந்தித்து செயற்பட வேண்டிய நாள்.

**மிதுனம்** பெரிய மனிதர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், காலை நேரத்திலேயே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம்.

**கும்பம்** வேலையில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம், எதற்காகவும் பிடிவாதம் செய்வதை தவிர்ப்பது நல்லது, மூத்த சகோதரர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர்.

**கடகம்** கண்ணியம் மிக்க ஒருவரின் சந்திப்பு இடம்பெறலாம், நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாகப் பார்ப்பர்.

**மகரம்** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், உறவினர் ஒருவர் உங்களுக்கு நல்ல யோசனைகளைச் சொல்லலாம், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**சிம்மம்** உள்ளன்போடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும், எதிர்ப்புகள் அகன்று வியாபார விருத்தி ஏற்படும், திடீர் பயணங்கள் இடம்பெறலாம்,

**தனுசு** மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும் நாள், புத்திசாதுரியமாக நடந்து காரியம் சாதிப்பீர்கள், மைத்துனர் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம்.

**விருச்சிகம்** பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், ஆரோக்கியம் சீராகும், பகைவர்கள் விலகுவர், உங்களின் கருத்துக்களுக்கு மற்றவர்களின் மத்தியில் மரியாதை கிடைக்கும்.

**துலாம்** பொதுநலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், உறவினர் வருகையால் உற்சாகம் பெருகும் நாள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**கன்னி** மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், ஒருவகையில் வந்த வரவுகள் மற்றொரு வகையில் செலவாகலாம், தேகநலனில் அக்கறை காட்டுவீர்கள்.

## கடற்படையினருக்காக காணி சுவீகரிப்பதை எதிர்த்து

# முற்றுகைப் போராட்டம்





(யாழ்ப்பாணம்)

**கடற்படையினரின் தேவைக்காக வேலணைப் பகுதியில் உள்ள பொதுமக்களின் காணிகளை சுவீகரிக்கும் நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்றையதினம் பொது மக்களால் முற்றுகை போராட்டம் ஒன்று திருநெல்வேலி பலாலி வீதியில் அமைந்துள்ள பிரதேச நில அளவைத் திணைகளத்தின் முன் முன்னெடுக்கப்பட்டது.**

கடற்படையினரின் தேவைக்காக வேலணை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள மண்கும்பான் கிராமத்தில் 30 ஏக்கர் நிலப்பரப்பும் புங்குடுதீவு வல்லன் பகுதியில் 19 ஏக்கர் நிலப்பரப்பும் நேற்றைய தினம் நில அளவைத் திணைக்களத்தினரால் அளவீடு செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

குறித்த காணிகள் பொது மக்களுடைய உறுதிக்காணிகள் என்றும் இது, தொடர்பாக பிரதேச செயலர் மற்றும் கிராம சேவகர்களுக்கு தெரியப்படுத்தியிருந்தும் காணியின் உரிமையாளர்களுக்கு எந்தவிதமான அறிவித்தலும்வழங்காமல் அளவீடு செய்யப்படவுள்ளதை அறிந்த மக்கள் உடனடியாக குறித்த நடவடிக்கையினை நிறுத்துவதற்கு நேற்றையதினம்காலை 8.30 மணி முதல் நில அளவைத் திணைகளத்தை முற்றுகையிட்டு தமது எதிப்பினை தெரிவித்தனர்.

பொதுமக்களின் எதிர்ப்பு நடவடிக்கையை அடுத்து நேற்றைய தினம் மேற்கொள்ளப்படவிருந்த காணி அளவீடு செய்யும் நடவடிக்கை அதிகாரிகளால் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

இருப்பினும் காணி அளவீடு செய்யும் நடவடிக்கைகளை முற்றுமுழுதாக நிறுத்துவதற்கு தமக்கு உரிமை இல்லை என்றும் இவ்வாறு ஆர்ப்பாட்டங்களை பொது மக்கள் முன்னெடுக்கும் போது எம்மால் அளவீட்டு பணிகளை மேற்கொள்ள முடியாது என்றும் நில அளவை திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆதனை தொடர்ந்து அந்த இடத்தை விட்டு சென்ற ஆர்ப்பாட்டக்காரர்கள் யாழ்.மாவட்ட அரச அதிபர் மற்றும் வடமாகாண முதலமைச்சரை சந்தித்து குறித்த காணி அளவீடு தொடர்பான தமது ஆட் சேபனையை தெரிவித்து எதிர் வரும் திங்கட்கிழமை பாரிய போராட்டம் ஒன்றினை யாழ். மாவட்டச் செயலக முன்றலில் மேற்கொள்ளவுள்ளதாகவும் குறித்த விடயம் தொடர்பாக ஜனாதிபதிக்கு தெரியப்படுத்துவதற்கான மகஜரையும் கையளிக்கவுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

இந்த முற்றுகைப் போராட்டத்தில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன், வடமாகாணசபை உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், விந்தன் கனகரட்ணம், பா.கஜதீபன், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார பொன்னம்பலம், பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந் திரன் உட்பட பல பொது மக்கள் கலந்து கொண்டனர். (இ-9)

## நாடக ஆற்றுகை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக வெளிவாரி பட்டப்படிப்பு, நாடகமும் அரங்கியலும் மாணவர்களினால் நிகழ்த்தப்படும் நாடக ஆற்றுகை யானது இன்று கொக்குவில் இந்துக் கல்லூரியில் பி.ப.3 மணிக்கு நடைபெறும்.

இந்நாடக ஆற்றுகை, ''இருட்டறை, மனிதம் எங்கே, மீண்டும் தொடங்கும் மிடுக்கு'' என்னும் தலைப்புக்களில் நடைபெறும். (இ




### யாழில் இன்று நடைபெறும்

## கவனயீர்ப்புப் போராட்டத்திற்கு இலங். ஆசிரியர் சங்கம் ஆதரவு

(யாழ்ப்பாணம்)

போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மக்களுக்கு வழங்கவுள்ள 65,000 இரும்புப் பொருத்து வீட்டுத் திட்டத்தை மாற்றி கல்வீடுகளை வழங்குமாறு கோரியும் - திருகோணமலை சம்பூர் மக்களின் இருப்பையும் எதிர்காலத்தையும் சீர்குலைக்கும் வகையில் அமையவுள்ள அனல் மின்நிலையத் திட்டத்தை நிறுத்தி மாற்றுத் திட்டத்தைச் செயற்படுத்த வலியுறுத்தியும் - சுன்னாகம் நிலத்தடி நீரில் கலந்துள்ள கழிவு எண்ணெயால் ஏற்பட்டுள்ள பாதிப்பைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளைமுன்னெடுக்கக் கோரியும் சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பால் இன்று சனிக் கிழமை மு.ப. 10.30 மணியளவில் யாழ்ப்பாண மத்திய பேருந்து நிலையத்திற்கு முன்பாக நடைபெற வுள்ள கவனயீர்ப்புப் போராட்டத்துக்கு இலங்கை ஆசிரியர் சங்கம் தனது ஆதரவினைத் தெரிவித்துள்ளது.

போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மீள்குடியேற்ற, புனர் நிர்மாண அமைச்சினால் வழங்கப படவுள்ள 65,000 பொருத்து வீடுகள் நமது பிரதேச காலநிலைக்கும் - சமூக பண்பாட்டுச் சூழலுக்கும் - மக்களின் சுகாதாரத்திற்கும் - ஆரோக்கியத்திற்கும் முற்றிலும் பொருத்தமற்றனவாகும். எனவே, இத்தகைய இரும்புப் பொருத்து வீட்டுத் திட்டத்தை மாற்றி எமது காலநிலைக்கும், சமூக பண்பாட்டு வாழ்க்கை முறைக்கும் பொருந்தக் கூடிய நிரந்தர கல் வீடுகளை அமைத்து வழங்கும் திட்டத்தை முன்னெடுக்க வேண்டும்.

உலகின் அபிவிருத்தியடைந்த நாடுகள் உட்பட இந்தியா, சீனா போன்ற நாடுகளும் தத்தமது அனல மின் நிலையங்களை மூடுவதற்கான முன்னெடுப்புக்களை மேற்கொண்டுவரும் நிலையில் - திருகோணமலையின் சம்பூர் பிரதேசத்தில், மக்களின் மீள்குடியேற்றத்துக்குத் தடையாகவுள்ள திட்டத்துக்கு மாற்று நடவடிக்கையினை பரிசீலனை செய்ய வேண்டும். விவசாயம், மீன்பிடி மற்றும் கடல் வளம் நிறைந்த, நீலத் திமிங்கிலங்கள் வாழும் இக்கடற் பரப்பின இயற்கைச் சமநிலையைக் கெடுப்பதாக அமைகின்ற இச் செயற்பாடானது, உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். அத்துடன் இலங்கையின் வடக்கு, கிழக்கு, வட மத்தி, வடமேற்கு பகுதிகளுக்கு மழையைத் தரும் வடகீழ்ப் பருவப் பெயர்ச்சிக்காற்றின் நுழைவாயிலான கிழக்கு இலங்கையின் சம்பூர் பிரதேசத்தில் காற்றில் கலந்து விடப்படவுள்ள இம் மின்னுற்பத்தி நிலையத்தின்புகை, சாம்பல்கழிவுகள் எமது நாட்டின் வளிமண்ட லத்தை நாசப்படுத்தி உயிர்வாழ்வைக் கேள்விக்குறியாக்கவுள்ளமையையும் தடுத்து நிறுத்த வேண்டும்.

இன்னும் - நீண்ட காலமாகக் கவனிப்பாரற்ற நிலையில் இருக்கும் சுன்னாகமும் அதைச் சூழ உள்ள நான்கு பிரதேச செயலக பிரிவுகளிலும் உள்ள கிணறுகளில் கலந்துள்ள கழிவு எண்ணெய் மற்றும் ஆபத்தான பார உலோகங்கள் தொடர்பான பிரச்சினைக்கும் உரிய தீர்வினை வலியுறுத்தி நிற்கும் இக் கவனயீர்ப்புப் போராட்டத்துக்கு ஆதரவைத் தெரிவிக்கின்றோம் என அச்சங்கத்தின் யாழ். மாவட்ட செயலாளர் சி.சிவசுதன் அறிவித்துள்ளார். (இ)

## சாவகச்சேரி நகரில் பண்டிகைக்கால நடைபாதை வியாபாரத்துக்குத் தடை

சாவகச்சேரி நகராட்சி மன்றமானது 2016 ஆம் ஆண்டின் தமிழ் சிங்கள புத்தாண்டை ஒட்டி இது வரை காலமும் வழங்கி வந்த நடைபாதைக்கடைகளை இவ் வருடம் வழங்காது எனவும் புதிய நடைபாதை வியாபாரிகள் வேறு இடங்களுக்கு சென்று நடைபாதை வியாபாரத்தை நடத்துமாறும் அறிவித்தல் விடுத்துள்ளது. (இ-88)

# 20,000 ரூபாய் புலமைப்பரிசில்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் புலமைப் பரிசில் நிதியத்தின் ஊடாக வருமானம் குறைந்த விவசாய குடும்பத்தைச் சேர்ந்த உயர்தரம் கற்கும் மாணவர்களுக்கு தலா ரூபா 20 ஆயிரம் வீதம் புலமைப் பரிசில்கள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தகைமைகள்

1.முழுநேர விவசாய குடும்பத்தைச் சேர்ந்தவராகவும் பெற்றோரில் ஒருவராவது யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள ஏதாவதொரு கமக்காரர் அமைப்பில் உறுப்பினராகவும் இருத்தல் வேண்டும்.

2. 2014 ஆம் ஆண்டு நடைபெற்ற சாதாரண தரப் பரீட்சையில் சித்தியெய்தி 2017 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சை எழுதும் மாணவராக இருத்தல் வேண்டும்.

மேற்கூறிய தகைமையுடைய விண்ணப்பதாரிகள் தமது எல்லைக் குட்பட்ட கமநல சேவைகள நிலையத்தில் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று தத்தமது கமக்காரர் அமைப்பின் சிபாரிசுடன் உரிய கமநல சேவைகள் நிலைய கமநல அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் தமது சுய விபரங்கள் அடங்கிய விண்ணப்பத்தை தாம் கல்வி கற்கும் பாடசாலை அதிபரின் சிபாரிசு கடிதத்துடனும் குறித்த கிராம சேவை உத்தியோகத்தரின் சிபாரிசு கடிதத்துடனும் 2016.04.30 சனிக்கிழமைக்கு முன்பு நேரடியாக கையளிக்கும்படி கேட்டுக்கொள்வதாகவும் மேலும் மேற்படி திட்டத்தில் வறுமை, குடும்ப நிலை, பிள்ளையின் கல்வித்தரம், மீள்குடியமர்வு என்பன கருத்தில் எடுக்கப்பட்டு தெரிவு நடைபெறும் எனவும் கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் இ.நிஷாந்தன் தெரிவித்துள்ளார். (இ

# பிரதி அமைச்சரின் வாகனத்தை மோதிய 1000 சி.சி.மோட்டார் சைக்கிள்

**சந்தேக நபர்களை கைது செய்ய கோருகிறார் பிரதி அமைச்சர்**

கொழும்பு இராஜகிரிய பகுதியில் ஊடகத்துறை மற்றும்பாராளுமன்றவிவகாரபிரதி அமைச்சர் கருணாரத்ன பரணவிதானவின் வாகன பிற்பகுதி 1000 சிசி மோட்டார் சைக்கிளினால் மோதுண்டு விபத்துக்குள்ளான சம்பவம் தொடர்பாக சந்தேக நபர்கள் கைது செய்யப்பட வேண்டுமென பிரதி அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக நேற்று முன்தினம் தகவல் திணைக்களத்தில் கருத்து வெளியிட்ட அவர் 999 சிசி மோட்டார் சைக்கிள் WP BAK 2011 சாதாரண போக்குவரத்துக்கு பயன்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் மோட்டார் வாகனப் போட்டிகளில் மாத்திரம் பயன்படுத்துவதற்கு பாதுகாப்பு அமைச்சினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஓர் இடத்திலிருந்து இன்னோரிடத்திற்கு மோட்டார் சைக்கிள் கொண்டு செல்லப்பட வேண்டுமாயின் பிறிதொரு வாகனத்திலேயே கொண்டு செல்லப்பட வேண்டும். இதனை பிரதான வீதியில் செலுத்துவது சட்ட விரோதமானதாகும்.

இவ்வாறான மோட்டார் சைக்கிள்களை பிரதான வீதிகளில் செலுத்துவது மோட்டார் வாகன போக்குவரத்துச் சட்டத்தின் பிரகாரம் சட்ட விரோதமானதாகும்.

வாகனத்தின் பிற்பகுதி விபத்திற்குட்படுத்தப்பட்டமையானது வாகன விபத்தையடுத்து வாகனச் சாரதியின் தவறு அல்ல. விபத்தையடுத்து மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு இளைஞர்களும் வாகனத்தை தாக்க முற்பட்டதாகவும் இதனால் சாரதி உடனடியாக வாகனத்தை வெலிக்கடை பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு சென்றார் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்களா என்பது குறித்து இதுவரை தெரியவில்லை. இல்லாவிடின் அவர்கள் கைது செய்யப்பட வேண்டும் எனவும் பிரதி அமைச்சர் வலியுறுத்தியுள்ளார். (3)

# மகிந்த ராஜபக்ஷவின் நிலைப்பாடு தொடர்பில் பொலிஸார் அதிருப்தி?

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் நிலைப்பாடு தொடர்பில் பொலிஸார் அதிருப்தி வெளியிட்டுள்ளதாக கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும், கூட்டு எதிர்க்கட்சியினரும் பொலிஸ் திணைக்கள உத்தியோகத்தர்கள், அதிகாரிகள் தொடர்பில் கொண்டுள்ள அவநம்பிக்கை அதிருப்தி அளிப்பதாக பெயர் குறிப்பிட விரும்பாத உயர் பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பிற்கு அமர்த்தப்பட்டிருந்த படையினரை நீக்கி, பொலிஸாரிடம் அந்தக் கடமைகள் ஒப்படைக்கப் படவுள்ளன.

இந்த நடவடிக்கையை மகிந்த ராஜபக்ஷவும், கூட்டு எதிர்க்கட்சியினரும் கடுமையாக ஊடகங்களில் விமர்சனம் செய்து வருகின்றனர்.

இவ்வாறான விமர்சனங்களின் ஊடாக பொலிஸ் உத்தியோகத்தர்களின் திறமைகளை கூட்டு எதிர்க்கட்சியினரும், மகிந்த ராஜபக்ஷவும் இழிவுபடுத்துவதாக அந்த உயர் அதிகாரி சுட்டிக்காட்டியுள்ளார்.

பொலிஸ் உத்தியோகத்தர்களும், இராணுவ உத்தியோகத்தர்களுக்கு நிகரான தொழில்சார் தன்மையுடனேயே செயற்பட்டு வருகின்றனர்.

பல ஆண்டுகளாக பொலிஸார், பிரபுக்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருவதாக குறித்த பொலிஸ் அதிகாரி கொழும்பு ஊடகத்திடம் தெரிவித்தார். (இ-5)

**Waiters(உணவு பரிமாறுநர்கள்)**

எமது ஐஸ்கிறீம் மற்றும் உணவகத்திற்கு உணவு மற்றும் கிளீனிங் வேலைக்கு ஆட்கள் தேவை. திறமைக்கு ஏற்ப சம்பளம் வழங்கப்படும். தொடர்பு கொள்ளவும்.

**ஷைலோ ஐஸ்கிறீம் மற்றும் உணவகம்**
இல.442, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.077 771 0785
(4145)

# காஷ்மீரில் கனமழையால் 100 பேர் இதுவரை பலி!

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியிலுள்ள கில்கிட்-பல்டிஸ்தான் பகுதியில் கனமழை காரணமாக பெரும் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. இதன்காரணமாக அங்கு இதுவரை 100இற்கும் அதிகமானோர் பலியாகியுள்ளனர்.

பாகிஸ்தானின் கைபர் பக்துன்க்வா மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்புக் காஷ்மீரில் கடந்த சில நாட்களாகவே கனமழை பெய்து வருகிறது. இதனால், பல்வேறு இடங்களில் நிலச்ச்ரிவு ஏற்பட்டுள்ளது. நிலச்சரிவு காரணமாக சீனாவுடனான வீதித் தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளது. கில்கிட்டையும் ஜின்ஜியாங் மாகாணத்தையும் குஞ்செ ராப் கணவாய் வழியாக இணைக்கும் காராகோரம் நெடுஞ்சாலையில் 50 இற்கும் மேற்பட்ட இடங்களில் சேதமடைந்துள்ளது.

அஸ்டூர், கிஸெர் பகுதியை இணைக்கும் வீதியும் முடங்கியுள்ளது. இதனால், உணவு மற்றும் எரிபொருள் பற்றாக்குறை ஏற் பட்டுள்ளது.

கில்கிட்-பல்டிஸ்தான் பகுதியில் இதுவரை கனமழைக்கு 70 பேரும், கைபர் பக்துன்க்வா மாகாணத்தில் 30 பேரும் உயிரிழந்துள்ளனர். 48 மணி நேரமாக மின் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் மின்விநி யோகம் தடைபட்டுள்ளது. கோஹிஸ்தான் பகுதியில் ஏற்பட்ட நிலச்சரிவில் 20இற்கும் மேற்பட்டோர் கற்கு வியல்களுக்குள் சிக்கியுள்ளனர். உடைந்த பாலங்கள், வீதிகளைச் சீரமைக்கும் பணியில் பாகிஸ்தான் இராணுவம் ஈடுபட்டுள்ளது.

கோஹிஸ்தான், டியா மெர், நாகர், ஹன்ஸா பகுதி யில் 12இற்கும் மேற்பட்ட வெளிநாட்டு சுற்றுப் பயணிகள் சிக்கிக் கொண்டுள்ளனர். அவர்களுக்கு உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. (இ-5)

**ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலய வளர்ச்சி நிதிக்காக நடாத்தப்படும் மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி**

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 10.04.2016 அன்று பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகும் என்பதனை அனைத்து காளை உரிமையாளர்களுக்கும் அறியத் தருவதோடு, தவறாது கலந்து கொள்ளுமாறு மிகவும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**ஆலய நிர்வாகிகள்**
**ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலயம்** (4130)

# வீட்டுக்கிருத்திய அழைப்பு



**அமரர் சின்னத்துரை பரமேஸ்வரி**

தோற்றம் 12.09.1939 மறைவு 10.03.2016

கடந்த 10.03.2016 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று 09.04.2016 சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்களும் வருகை தந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

மின்சார நிலைய வீதி,
சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்.

இங்ஙனம்
குடும்பத்தினர்

(சி-4252)

**கணக்குப்பிள்ளை (Accountant) தேவை**

வியாபார கணக்கு வழக்குக்கள் நன்கு செய்யக் கூடிய நன்கு அனுபவமுள்ள Accountant ஒருவர் உடன் தேவை. ஆண்/பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம். அனுபவத்திற்கும் திறமைக்கும் ஏற்ப சம்பளம் வழங்கப்படும். தொடர்பு கொள்ளவும்.

**Sylo Food Bavareges pvt ltd**
**76, Amman Kovil Street**
**Kokuvil**
**Phone:- 077 771 0785**
(4145)

***யாரிடம் பேசுவது?***

நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் ஒன்றுமே முடியாது.
நான் என்ன செய்வது?
என்று எண்ணுகின்றீர்களா ......

*எம்முடன் பேசுங்கள்.*

**கை கொடுக்கும் நண்பர்கள்**

தினந்தோறும் காலை 9.00 முதல் பி.ப 1.00 மணிவரை
**104, 4**ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்
• மதசார்பற்றது • ரகசியம் பேணப்படும்
**021 222 8117, 077 900 8776**
*Sponsored by Enlightenment Circle, UK*
(C-3712)

# கணக்கீடு

A/L கணக்கீடு வீடு வந்து கற்பிக்கப்படும். (4148)
**தொடர்புக்கு:- 077 817 5794**

**காணி விற்பனைக்கு**

கே.கே.எஸ். வீதி முதலி கோவிலுக்கு அருகில் நில.பர 1 குளி 14.92 எனும் அளவுடைய காணி விற்பனைக்குண்டு.
**தொடர்புகளுக்கு:- 076 702 3565**
(4143)

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**தோற்றம் 11.02.1963 மறைவு 13.04.2013**

**அமரர் கணேஸ் மகேந்திரன் (சுட்டா)**

கண்ணீருக்கு தடை போட்டது போல
உன் நினைவுகளுக்கு தடை போட முடியவில்லை
உமை நினைப்பதை விட
எமக்கு வேறென்ன வேலை
நினைத்த மனங்களில் நீர்
உண்மை வடிவாய் நிலைத்திருப்பீர்
கனத்த மனத்துடன்-உம்மை
பிரிந்த துயரம் நிழலாட
ஆண்டுகள் மூன்று ஆகிவிட்டதே!

**கந்தசாமி கோயிலடி,**
**உரும்பிராய் மேற்கு,**
**உரும்பிராய்.**

**தாய் றோசம்மாவும்**
**உறவினர்களும்.**

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



தங்கராசா
விஜித்தா



தவராசா டல்சி

எமது சங்கானை ஐக்கிய நலன்புரிச் சங்க அங்கத்தவர்களின் பிள்ளைகளான செல்வி தவராசா டல்சி யாழ்.பல்கலைக்கழகத்தின் வெளிவாரியாக கலைமாணி பட்டத்தைப் பெற்றுக் கொண்டமையையும் மற்றும் செல்வி தங்கராசா விஜித்தா யாழ். பல்கலைக்கழக பௌதீக விஞ்ஞான துறைக்கு தெரிவு செய்தமையையும் இட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(4147)

**வாழ்த்துவோர்:**
**ஐக்கிய நலன்புரிச்சங்கம்**
**சங்கானை**

# ஆடைத் தொழிற்சாலை பணியாளர்கள் நேற்றுக்காலை பணிப் புறக்கணிப்பு

## மன்னார் மறை மாவட்ட குருமுதல்வர் தலையிட்டு சமரசம்



மன்னார்-தலைமன்னார் பிரதான வீதியில் அமைந்துள்ள ஆடைத்தொழிற்சாலையில் கடமையாற்றும் பெண்கள் தமக்கு உரிய முறையில் விடுமுறை வழங்கப்படுவதில்லை எனவும் தாம் அடிமைகள் போல் பயன்படுத்தப்படுவதாகக் கூறி குறித்த ஆடைற் தொழிற்சாலையில் கடமையாற்றும் பெண்கள் நேற்றுக் காலை முதல் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

தமிழ் -சிங்கள புத்தாண்டை முன்னிட்டு இன்று முதல் எதிர் வரும் 18 ஆம் திகதி வரை அனைவருக்கும் விடுமுறை வழங்குவதாக தெரிவித்து தொடர்ச்சியாக இரவு- பகல் பாராது வேலை செய்ய வேண்டிய நிலையில் தற்போது குறித்த விடுமுறை தொடர்ச்சியாக வழங்க முடியாது என ஆடைத் தொழிற்சாலை நிர்வாகம் தெரிவித்தது.

எனினும் அங்கு கடமையாற்றும் அதிகமான பெண்கள் குறித்த விடுமுறையை கட்டாயம் வழங்க வேண்டும் என கோரி இருந்தனர். இந்த நிலையில் குறித்த கோரிக்கை ஆடை தொழிற்சாலை நிர்வாகத்தினால் மறுக்கப்பட்டதாக பாதிக்கப்பட்ட பெண்கள் தெரிவித்தனர். இந்த நிலையில் நேற்றுக் காலை குறித்த ஆடைத் தொழிற்சாலைக்குச் சென்ற பெண்கள் கடமையினை மேற்கொள்ளாது தொழிற்சாலைக்குள் ஒன்று கூடி தமது எதிர்ப்பை தெரிவித்தனர்.

எனினும் குறித்த ஆடைத்தொழிற்சாலையின் முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வையாளர்கள் எமது கோரிக்கையினை ஏற்காது எங்களை கடமையில் ஈடுபட வற்புறுத்தினார்கள். இந்த நிலையில் நாங்கள் அனைவரும் ஒரே முடிவுடன் செயற்பட்டதாக பாதிக்கப்பட்ட பெண்கள் தெரிவித்தனர்.

குறித்த ஆடைத் தொழிற்சாலையின் பெண் மேற்பார்வையாளர் ஒருவரும், ஆண் மேற்பார்வையாளர் ஒருவரும் சில பெண்களைத் தாக்க முற்பட்டனர். இறுதியாக குறித்த பெண் மேற்பார்வையாளர், வேலை செய்ய முடிந்தால் நில்லுங்கள் இல்லாது விட்டால் அனைவரும் வெளியில் செல்லுங்கள் என கடும் தொனியில் தெரிவித்தனர்.

இந்த நிலையில் நாங்கள் அனைவரும் ஆடைத் தொழிற்சாலையினை விட்டு வெளியில் வந்தோம் என பாதிக்கப்பட்ட பெண்கள் தெரிவித்தனர்.

குறித்த ஆடைத் தொழிற்சாலையில் கடமையாற்றும் பெண்கள் தொடர்ச்சியாக மனரீதியாக பாதிப்புகளுக்கு முகம் கொடுத்து வருவதாக தெரிவிக்கின்றனர்.

மேலதிகமாக அதிக நேரம் கடமையில் ஈடுபட்டாலும் உரிய மேலதிக நேரக் கொடுப்பனவுகள் வழங்கப்படுவதில்லை என அவர்கள் தெரிவித்தனர்.

இந்த நிலையில் சம்பவ இடத்திற்கு சென்ற மன்னார் மறை மாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை, மன்னார் ஆயரின் செயலாளர் அருட்தந்தை எ.முரளிதரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான வைத்திய கலாநிதி ஜீ.கணசீலன், சட்டத்தரணி எஸ்.பிரிமூஸ் சிறாய்வா, றிப்கான் பதியுதீன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் பிரதிநிதி ஜஸ்ரின், மன்னார் பிரஜைகள் குழுவின் முக்கியஸ்தர் அந்தோனி சகாயம் உள்ளிட்ட குழுவினர் ஆடைத் தொழிற்சாலைக்கு வெளியில் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்ட பெண்களுடன் நீண்ட நேரம் கலந்துரையாடினர்.

அதன் பின் குறித்த குழுவினர் ஆடைத் தொழிற்சாலைக்குள் சென்று முகாமைத்துவ அதிகாரிகளுடன் நீண்டநேரம் உரையாடினர். பின் பகிஷ்கரிப்பில் ஈடுபட்ட பல நூற்றுக்கணக்கான பெண்கள், ஆண்கள், வருகை தந்த பிரதிநிதிகள் மற்றும் ஆடைத் தொழிற்சாலை நிர்வாகத்தினருக்கிடையில் சந்திப்பு இடம்பெற்றது.

இந்த நிலையில் பாதிக்கப்பட்ட பெண்கள் சார்பாக வருகை தந்த அருட் தந்தையர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளின் கோரிக்கைக்கு அமைவாக குறித்த பெண்கள் நேற்று முற்பகல் 10.45 மணியளவில் தமது பகிஷ்கரிப்பை கைவிட்டு மீண்டும் பணியில் ஈடுபட்டனர்.

குறித்த பெண்கள் முன் வைத்துள்ள அனைத்து பிரச்சினைகளுக்கும் உரிய தீர்வு முன்வைக்கப்படும் என ஆடைத் தொழிற்சாலை நிர்வாகம் உறுதியளித்த நிலையிலே குறித்த பணிப் பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-3-281)




# கிளிநொச்சி மக்களின் தேவைகள் இனங்காணப்பட்டு கிராமங்கள் தோறும் அபிவிருத்தி மேற்கொள்ளப்படும்

## மக்கள் சந்திப்பில் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் உறுதி



கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சில கிராமங்களிற்கு சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வர் விஜயம் மேற்கொண்டிருந்தார்.

கந்தபுரம், வன்னேரிக்குளம், அக்கராயன்குளம், கோணாவில், கண்ணகிநகர் உள்ளிட்ட கிராமங்களிற்கே நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்டிருந்தார்.

கிராமங்களிற்கு ஒரு மில்லியன் வேலைத்திட்டம் தொடர்பில் மக்களின் நிலைகளை கேட்டறிந்து கொண்ட அமைச்சர், மேலும் அத்திட்டத்தில் கிராமங்களிற்கு ஒரு மில்லியன் வேலைத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படக்கூடிய விடயங்கள் தொடர்பில் மக்கள் அபிப்பிராயங்களை கேட்டறிந்தார். மக்களின் தேவைகளை இனம் கண்டு, கிராமங்கள் தோறும் அபிவிருத்தி செய்ய உள்ளதாக அவர் மக்களிடம் குறிப்பிட்டிருந்தார்.

நல்லாட்சி அரசாங்கத்தில் இளைஞர் யுவதிகள் இராணுவ அச்சுறுத்தல் இன்றி சுதந்திரமாக நடமாடும் சூழலை ஏற்படுத்தி கொடுத்துள்ளதாக தெரிவித்த அமைச்சர் விஜயகலா, கிளிநொச்சி மாவட்டத்தில் வேலையற்ற இளைஞர் யுவதிகளிற்கு வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்தி கொடுக்க உள்ளதாக அவர் தெரிவித்தார். அத்துடன் கிளிநொச்சி மாவட்டத்திற்கு ஆயிரம் வீடுகள் வழங்கப்படவுள்ளதாகவும், 8 லட்சம் பெறுமதியான வீடாக அது அமைந்துள்ளதாகவும் தெரிவித்த விஜயகலா, கடந்த காலங்களை போலல்லாது தனிநபர், மாற்று திறனாளிகள் அனைவருக்கும் அவை கிடைக்கும் வகையில் வழங்கவுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (2-15)

# பொதுக்கூட்டமும் நிர்வாக தெரிவும்

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூயின் பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம் எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரி கலையரங்கத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில்பாடசாலையின் அபிவிருத்திக்கான திட்டங்கள் குறித்து ஆராயப்படவுள்ளது. அத்துடன் நடப்பாண்டிற்கான புதிய நிர்வாகத் தெரிவும் நடைபெறவுள்ளது.

ஆதலால் கல்லூரியின் பழைய மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கல்லூரியின் அதிபர் இ.ரவீந்திரன் அழைப்பு விடுத்துள்ளார். (2-3-302)

# இந்துபுரம் கிராம அபிவிருத்தி தொடர்பில் கலந்துரையாடல்



ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட இந்து புரம் கிராமத்தின் (ACTED) நிறுவனத்தின் அனுசரணையுடன் கிராம அபிவிருத்தி சம்பந்தமான பகுப்பாய்வு நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் இந்துபுரம் பொது நோக்கு மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் கிராம அபிவிருத்தி சங்கத்தினர், மாதர் சங்கத்தினர்,கமக்கார அமைப்பினர், சமுர்த்தி உத்தியோகத்தர், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது இந்துபுர கிராமத்தின் உட்கட்டமைப்பு,விவசாயம், சுகாதாரம், கல்வி சம்பந்தமான குறைபாடுகள், இவற்றை நிவர்த்தி செய்யும் வழிவகைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. (2-3-311)

# நெல் கொள்வனவு மட்டுப்படுத்தப்பட்டதால் வவுனியாவில் விவசாயிகள் பெரும் பாதிப்பு

வவுனியா மாவட்டத்தில் பெரும் போக நெற் செய்கைக்கான நெற் கொள்வனவை 4ஆயிரம் மெற்றிக் தொன்னாக அதிகரிக்குமாறு விவாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர.

வவுனியா மாவட்டத்தில் 15 ஆயிரம் வரையிலான விவசாய குடும்பங்கள் வாழ்ந்துவரும் நிலையில் ஏழாயிரம் பேர் அரசாங்கத்தின் உத்தரவாத விலையில் நெல்லினை விற்பனை செய்ய விண்ணப்பித்திருந்தனர். அரச சுற்று நிருபத்திற்கு அமைவாக விவசாயி ஒருவரிடம் இருந்து. 2ஆயிரம் கிலோ கிராம் வீதம் 3ஆயிரம் மெற்றிக் தொன் நெல்லினையே கொள்வனவு செய்ய முடியும். இதனடிப்படையில் ஆயிரத்து 500 விவசாயிகளே நெல்லினை அரசாங்கத்திற்கு கொடுக்க முடியும். இதனால் விண்ணப்பித்த பல விவசாயிகள் பாதிப்படைந்துள்ளனர்.

இதன்காரணமாக வவுனியா மாவட்டத்தில் 3ஆயிரம் மெற்றிக் தொன்னுக்கு மேலதிகமாக ஆயிரம் மெற்றிக் தொன் நெல்லினை கொள்வனவு செய்யுமாறு விவசாயிகள் அரசாங்க அதிபர் மற்றும் நெல் சந்தைப்படுத்தல் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை வவுனியாவில் கடந்த 6ஆம்திகதி புதன்கிழமை வரை ஆயிரத்து 636 விவசாயிகளிடம் 31 இலட்சத்து அறுபத்தெட்டாயிரத்து 587 கிலோ கிராமநெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளமை குறிப்படத்தக்கது.(2-3-250)

# வவுனிக்குளத்தின் கீழான சிறுபோக செய்கைக்குரிய விதைப்பு; நீர் விநியோக திகதிகள் அறிவிப்பு

## 2 ஆயிரத்து 373 ஏக்கரில் நெற்செய்கை மேற்கொள்ளப்படும்

(மல்லாவி)

**வவுனிக்குள நீர்ப்பாசன திணைக்களத்தின் கீழுள்ள வவுனிக்குளத்தின் கீழ் நடப்பாண்டில் சிறுபோக நெற்செய்கையாக 2ஆயிரத்து 373 ஏக்கரில் நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக வவுனிக்குள நீர்ப்பாசன திணைக்களத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் வவுனிக்குள நீர்ப்பாசனத் திணைக்களத்தின் ஒன்று கூடல் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற சிறுபோக நெற்செய்கை தொடர்பான கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இத்தீர்மானத்தின் போது வவுனிக்குளம் இடதுகரை பிரதான வாய்க்கால் பகுதியில் ஆயிரத்து 210 ஏக்கரும் வலது கரை பிரதான வாய்க்கால் பகுதியில் 925 ஏக்கரும் மத்திய துருசு வாய்க்காலில் 68 ஏக்கருமாக மொத்தம் 2 ஆயிரத்து 203 ஏக்கர் விவசாயிகளுக்கு தலா ஒரு ஏக்கர் வீதம் வழங்கப்படும்.

அத்துடன் பொது நிறுவனங்களின் தேவைகளுக்காக 170 ஏக்கருமாக மொத்தம் 2 ஆயிரத்து 373 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு விதைப்பு இறுதித் திகதி எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை ஆகும். நீர்விநியோகம் இறுதித்திகதி எதிர்வரும் ஜூலை மாதம் 25 ஆம் திகதி என தீர்மானிக்கப்பட்டது. அத்தோடு கால்நடைகளுக்கான கட்டுப்பாட்டுத் திகதி கடந்த 5 ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் ஒக்ஸ்ட் மாதம் 20 ஆம் திகதி வரை நடைமுறைப்படுத்தப்படும் என தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-3-15)

# அதிபர் தலைவராக இல்லாத பழைய மாணவர் சங்கங்கள் கலைக்கப்பட வேண்டும்

## வடக்கு கல்வியமைச்சு புதிய சுற்றுநிருபப்படி

(மல்லாவி)

வடக்கு மாகாண கல்வியமைச்சின் கீழுள்ள அனைத்து பாடசாலைகளிலும் நிறுவப்படும் பழைய மாணவர் சங்கங்களுக்கு தலைவராக அப்பாடசாலையின் அதிபர் மட்டுமே இருக்க வேண்டுமென அனைத்துப் பாடசாலை அதிபர்களுக்கும் சுற்றுநிருபம் ஊடாக வடக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அதில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

வடக்கு மாகாணத்தின் பெரும்பாலான பாடசாலைகளில் நிறுவப்பட்டுள்ள பழைய மாணவர் சங்கங்கள் பாடசாலைகளின் வளர்ச்சிக்குத் துணை நிற்கின்றன.

அந்த வகையில் பாடசாலைகளுக்கும் பழைய மாணவர் சங்கங்களுக்கும் இடையில் அதிக ஒத்துழைப்பையும் செயற்பாடுகளையும் மேம்படுத்தும் முகமாக பாடசாலைகளில் நிறுவப்படும் பழைய மாணவர் சங்கங்களுக்கு தலைவராக அப்பாடசாலையின் அதிபர் மட்டுமே இருக்க வேண்டும்.

செயலாளர், பொருளாளர் ஆகிய பதவிகளுக்கு பழைய மாணவர்கள் இருக்கலாம்.

பழைய மாணவர் சங்கத்தின் நிதி முகாமைத்துவ செயற்பாட்டில் அனைத்து காசோலைகளுக்கும் கையொப்பமிடும் முதலாவது ஒப்பம் தலைவராக (அதிபர்) இருத்தல் வேண்டும்.

இரண்டாவது ஒப்பம் செயலாளர், பொருளாளராக இருக்கலாம்.

அதிபர் தலைவராக இல்லாத பழைய மாணவர் சங்கங்கள் உடனடியாக கலைக்கப்பட்டு புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற வேண்டும்.

இதேவேளை அதிபர் தலைவராக இல்லாத வகையில் நடைமுறையில் உள்ள பழைய மாணவர் சங்கங்களின் யாப்பு உடனடியாக திருத்தி அமைக்கப்பட வேண்டும்.

காலாண்டிற்கு ஒரு தடவை பழைய மாணவர் சங்கங்களின் கணக்கு விபரங்கள் வடக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

பழைய மாணவர் சங்கத்தின் ஒத்துழைப்புடன் செய்யப்படும் வேலைகள் எதுவாக இருந்தாலம் வடக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளரின் முன் அனுமதியைப் பெற வேண்டுமென அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-3-15)




# சிதம்பரபுரம் முகாமில் வாழ்ந்த மக்களுக்கு காணி அனுமதிப்பத்திரங்கள், தற்காலிக வீடுகள்

## 19ஆம் திகதி வழங்கப்படும்

வவுனியா மாவட்டத்திலுள்ள சிதம்பரபுரம் முகாமில் வாழும் மக்களுக்கு அதே இடத்தில் காணிகள் வழங்கப்படவுள்ளதுடன் அதற்கான அனுமதிப் பத்திரங்களும் தற்காலிக வீடுகளும் வழங்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண புனர்வாழ்வு அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக உள்ளக மற்றும் இந்தியாவுக்கு இடம் பெயர்ந்து நாடு திரும்பியவர்களில் 193 குடும்பங்கள் கடந்த 20 வருடங்களாக சிதம்பரபுரம் முகாமில் வாழ்ந்து வருகின்றன. அடிப்படை வசதிகளின்றி வாழ்ந்து வரும் இவர்களின் நிலை தொடர்பில் வடக்கு மாகாண புனர்வாழ்வு அமைச்சின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதை அடுத்து இவர்களின் குடும்பமொன்றிற்கு தலா நான்கு பரப்பு காணி வழங்கப்பட்டுள்ளதுடன் அதற்கான காணி அனுமதிப்பத்திரமும் வழங்கப்படவுள்ளது.

காணி அனுமதிப்பத்திரங்களும், தற்காலிக வீடுகளும் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வடக்கு மாகாண புனர்வாழ்வு அமைச்சர் ப.சத்தியலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்துகொள்ளவுள்ளார். இவர்கள் குடியிருப்பதற்கான தற்காலிக வீடுகள் அமைப்பதற்கு மாகாண புனர்வாழ்வு அமைச்சு ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா 69 ஆயிரம் ரூபா நிதி வழங்கியுள்ளதாக அந்த செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-250)

# தொழில் அலுவலக புதிய கட்டடங்கள் திறப்பு விழா

தொழில் திணைக்களத்தி னால் புதிதாக அமைக்கப் பெற்ற கிளிநொச்சி, முல்லை த்தீவு ஆகிய மாவட்டங்களுக் கான தனித்தனி தொழில் அலு வலகங்களின் கட்டடத்திறப்பு விழா இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது. இதற்கமைய சகல வசதி களையும் உள்ளடக்கிய முல் லைத்தீவிற்கான தொழில் அலுவலகம் இன்று பிற்பகல் 2 மணிக்கு கிளிநொச்சிக்கான தொழில் அலுவலகம் இன்று முற்பகல் 10 மணிக்கும் திற ந்து வைக்கப்படும். இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினர்களாக தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர் டபிள்யூ.டி. ஜே.செனவிரத்ன, வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் இராஜாங்க அமைச்சர் ரவீந்திர சமரவீர, வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே ஆகியோர் கலந்து கொண்டு திறந்து வைக்கவுள்ளனர் என வடக்கு மாகாண பிரதித் தொழில் ஆணையாளர் திரு மதி நீலரோஜனி ஜெகதீஸ்வரன் அறிவித்துள்ளார். (2)




"விதை" குடும்பம் மற்றும் "Jaffna Today" அமைப்புக்களினால் புலம்பெயர் வாழ் உறவுகளின் உதவியுடன் வ/அருவித்தோட்டம் சிவானந்தா வித்தியாலய மாணவர் சிலருக்கு (மெனிக்பாம்) கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்ட போது...

# அசையாச் சொத்துக்களை மீட்டெடுப்பதற்கான சட்டமூலம் நிறைவேற்றியமை வரவேற்கத்தக்கது

## சாந்தி எம்.பி. பாராளுமன்றில் உரை

இந்த மண் எமது சொந்த மண்! ஆண்ட பரம்பரை மீண்டும் ஆள நினைப்பதில் என்ன தவறு என சாந்தி சிறீஸ்கந்தராஜா கேள்வியெழுப்பியுள்ளார். காணி உட்பட அசையாத சொத்துக்களுக்கு வழக்கு தொடுக்கும் சட்ட மூலத்தை வரவேற்று நாடாளுமன்றில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் அங்கு தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

இலங்கையில் இருந்த ஆயுதம் தாங்கிய குழுக்களின் செயற்பாடுகள் காரணமாக நீதிமன்றத்தில் தமது உரிமைகளை கோருவதற்கு அல்லது தம்மை பாதுகாத்துக்கொள்வதற்கு இயலாதிருக்கின்ற ஆட்கள்தொடர்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய விசேடசட்ட ஏற்பாடுகள் மற்றும் காணி உட்பட அசையாத ஆதாரங்களுக்காக வழக்கு தொடுப்பதற்கு உரிமை வழங்கும் சட்ட ஏற்பாடு என்பவை நல்லாட்சியின் ஓர் அறிகுறியாகவே நான் கருதுகிறேன்.

இறுதி யுத்தகாலத்தில் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக எம்மவர் பலர் புலம் பெயர்ந்து இன்றும் வெளிநாடுகளில் தலைமறைவாக வாழ்ந்து வருகின்றனர். தமது பூர்வீக நிலங்களை விட்டுச் சென்ற அதேவேளை வெளிநாட்டிலும் உரிமையை பெற்றுக்கொள்ளாது எமது மக்கள் இன்றும் அகதி வாழ்க்கையே வாழ்கின்றனர். அவ்வாறானவர்களுக்கு இன்றுசட்டத்தின் மூலமாகதமது சொத்துக்களை தமது உரிமைகளை கேட்டுப் பெறுவதற்கு ஒரு சட்டஏற்பாடு ஏற்படுத்தப்பட்டிருப்பது மிகவும் வரவேற்கத்தக்கது.

யுத்தகாலத்தில் தமிழீழ வைப்பகத்தில் வைக்கப்பட்ட நகைகளைவிட இலங்கை வங்கி, மக்கள் வங்கிபோன்றவற்றில் நகைகள், பணம் என்பவற்றை வைப்பிலிட்டதற்கானஆவணங்கள் இருந்தும் அவர்களுக்கு அவை மீளக் கிடைக்கவில்லை.

அதுமட்டுமன்றி யுத்தத்தின் போது தமது வாகனங்களைக் கைவிட்டு வந்ததவர்களும் ஆவணங்களை வைத்திருந்தும் கிடைக்காது இருக்கின்றனர். இப்படி அசையும் சொத்துக்கள் கிடைக்காதவர்களுக்கும் உரியவகையில் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும்,வன்னிப்பகுதியில் வகை தொகையின்றி சட்ட விரோத முறையில் காடழிப்பு இடம் பெறுகிறதனையும் உதாரணத்துடன் சுட்டிக்காட்டி மீள்குடியேறிய மக்கள் தமது பூர்வீக நிலங்களுக்கு, சொந்த வீடுகளுக்கு செல்ல முடியாது ஆகாரமின்றி, நீரின்றிவீதிகளில் நீதிகேட்டு அலைந்து திரிகின்றனர். இவர்களையும் கருத்தில் கொண்டு எமது மக்களுக்கு ஒரு இயல்பான நிலையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இதனைவிட எமது மக்களின் பூர்வீக நிலங்களை வனவளத்துறை சுவீகரிப்பதையும் உடனடியாக தடுக்க வேண்டும் என அவர் தனது உரையில் வலியுறுத்தினார். (2-3-281)

# உரமானிய கொடுப்பனவைப் பெறுவதற்கு 15 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குக

(மல்லாவி)

துணுக்காய் கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட நீர்ப்பாசன குளங்களின் கீழ் நடப்பாண்டில் சிறுபோக நெற்செய்கையில் ஈடுபடவுள்ள விவசாயிகள் உரமானிய கொடுப்பனவிற்கான விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்து எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தங்கள் பகுதி கமக்கார அமைப்புகளுக்கு ஊடாக துணுக்காய் கமநல சேவை நிலையத்திற்கு அனுப்பி வைக்குமாறு துணுக்காய் கமநலசேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் சி.பிரபாகரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது,

நடப்பாண்டில் துணுக்காய் கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட வவுனிக்குளம் வலது கரை, தென்னியன்குளம், கோட்டை கட்டியகுளம், அம்பலப்பெருமாள் குளம், மருதங்குளம், ஐயங்கன்குளம், பழைய முறிகண்டி, தேராங்கண்டல் குளம், கல்விளான் குளம் ஆகிய ஒன்பது நீர்ப்பாசனக் குளங்களின் கீழ் சிறுபோக நெற்செய்கையில் ஈடுபடவுள்ள விவசாயிகள் கமக்கார அமைப்புக்களிடம் வழங்கப்பட்டுள்ள உரமானிய விண்ணப்பப்படிவத்தைப் பெற்று பூரணப்படுத்தி எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னதாக கமக்கார அமைப்புக்களின் ஊடாக துணுக்காய் கமநல சேவை நிலையத்திற்கு அனுப்பி வைக்குமாறு அவர் கேட்டுள்ளார்.

இதேவேளை குறிப்பிட்ட திகதிக்கு பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பப்படிவங்கள் அனைத்தும் உரமானிய கொடுப்பனவுப் பட்டியலினுள் இணைக்கப்பட மாட்டாது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-3-15)

# சிங்கள பௌத்த மக்களுக்கு மட்டுமே உண்மையில் நல்லாட்சி உரித்தானது

## த.தே.ம.முன்னணி சுட்டிக்காட்டு

**நல்லாட்சி என்பது உண்மையில் சிங்கள பௌத்த மக்களுக்கு மட்டுமே தவிர தமிழ் மக்களுக்கு உரித்தான ஒரு விடயம் இல்லை என்பதை நாம் மிகத் தெளிவாக விளங்கிக் கொண்டு எதிர்காலத்தில் எமது உரிமைகள் தொடர்பாக அரசியலில் தீவிரமாக இயங்க வேண்டும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.**

கடற்படையினரின் தேவைக்காக வேலணைப்பகுதியில் உள்ள பொதுமக்களின் காணிகளை சுவீகரிக்கும் நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்றையதினம் பொதுமக்களால் முற்றுகை போராட்டம் ஒன்று பலாலி வீதியில் அமைந்துள்ள திருநெல்வேலி பிரதேச நில அளவைத் திணைக்களத்தின் முன் முன்னெடுக்கப்பட்டது. இதில் கருத்து தெரிவித்த அக்கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவிக்கையில்,

இந்த அரசாங்கம் தமிழ் மக்களுக்கு மிக முக்கியமாக பொறுப்புக்கூறல்மற்றும்இனப் பிரச்சினைக்குத் தீர்வு என்ற இந்த இரண்டு விடயங்கள் தொடர்பாக மிகத் தெளிவாக தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தி வருகிறது.

அதாவது தமக்கும் ராஜபக்ஷ அரசுக்கும் இடையில் எந்த வித்தியாசமும் கிடையாது என்றும் பொறுப்புக்கூறல் என்பது வெறும் கண் துடைப்புக்காக உள்ளக ரீதியாக செய்கின்ற நடவடிக்கை எனவும் இராணுவத்தின் நல்ல் பெயரை காப்பாற்றவும் நிரூபிப்பதற்காகவே என வெளிப்படையாக கூறிக் கொண்டு வருகின்றனர்.

ஒற்றையாட்சிக்குள் தீர்வு என்றும் சமஷ்டியை ஏற்க மறுப்பதாகவும் அவர்கள் ஆணித்தரமாக கூறிவருகின்றார்கள்.

தமிழ் மக்களின் உரிமை போராட்டம் என்பது மறுதலிக்க முடியாத ஒன்றாக இருக்கும் பட்சத்தில் அரசு எந்த விதமான ஒரு புரிந்துணர்வும் தமிழ் மக்களுடன் ஏற்படுத்தத்தயார் இல்லாத நிலையில் மகள் தமது உரிமைப் போராட்டத்துக்கு தள்ளப்படுவார்கள்.

இவ்வாறு ஒரு நிலைமை இருந்து வரும் நிலையில் கடந்த காலங்களில் அடக்கி ஒடுக்கப்பட்டிருந்த மக்களை மேலும் மட்டுப்படுத்தி வைபபதற்கு இராணுவத்தை கூட்ட வேண்டிய தேவையில் இருக்கின்றது. அந்த வகையில் தான் மிகத் தெளிவாக முன்னைய அரசுபோல் புதிய அரசும் இராணுவமயமாக்கல் திட்டத்தை பல்வேறு கோணங்களில் செய்து வருகிறது.

நல்லாட்சி என்பது உண்மையில் சிங்கள பௌத்த மக்களுக்கு மட்டுமே தவிர தமிழ் மக்களுக்கு உரித்தான ஒரு விடயம் இல்லை.

அதை நாம் மிகத்தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும். எதிர்காலத்தில் எமது உரிமைகள் தொடர்பாக அரசியலில் தீவிரமாக இயங்க வேண்டும்.

தற்போது விடுவிக்கப்பட்ட காணிகள் அனைத்தும் மகிந்த அரசு இணக்கம் தெரிவித்த காணிகள் தான் விடுவிக்கப்பட்டுள்ளன. புதிதாக எவையும் விடுவிக்கப்பட வில்லை. அதே போன்று தான் தற்போது அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகிறது. மகிந்த இணங்கியதைத்தான் நாம் செய்கிறோம் என்பதை சிங்கள மக்களுக்கு இந்த அரசு சுட்டிக் காட்டியுள்ளது. நல்லாடசியின் பிரதிபலிப்பை சரியாக விளங்கிக் கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பாக அக்கட்சியின் செயலாளர் கஜேந்திரன் தெரிவிக்கையில,

தமிழ் மக்களின் காணிகளை கடற்படையினருக்கு நிரந்தரமாக வழங்கும் முயற்சி மேற்கொள்ளப்படும் நிலையில் இந்த எதிர்ப்புப் போராட்டம் நடைபெறுகிறது. மைத்திரிபால ஒரு நல்லவர் என்று தான் மக்களை நம்பவைத்து அவர்களின் வாக்குகளை பெற்றார்கள். ஆட்சியை அமைத்தார்கள்.

அந்த நிலையில் தமிழ் மககளின் வாக்குகளைப் பெறறு ஆட்சிக்கு வந்தவர்கள் கூட தமிழ் மக்களின் நிலங்களை அபகரித்து அவர்களை நட்டாற்றில் தள்ளி தற்கொலைக்குள் தள்ளும் வேலையைத் தான் செய்து கொண்டு இருக்கின்றார்கள்.

தற்போது நயினாதீவில் பிரமாண்டமான புத்தர் சிலை வடிவமைக்கப்பட வுள்ளதாக அறிகிறோம்.

மகிந்தவின் கொடூர ஆட்சியை விட்டு நல்லாட்சியை கொண்டு வந்ததாக சொல்கிறார்கள்.ஆனால் நல்லாட்சிக்காக எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் சிங்கள பௌத்தமயமாக்கல் நடவடிக்கைகள் தான் அதிகளவாக நடைபெற்று வருகின்றது.

சிங்கள பௌத்தர்கள் மத்தியில் தனது செல்வாக்கை வழக்கும் செயற்பாட்டைத்தான் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செய்து வருகிறார்.

மைத்திரியை ஆட்சிக்கு கொண்டு வரவிரும்பியவர்கள் அத்தனை நடவடிக்கைககும் காரணமாக இருக்கிறார்கள். துரதிர்ஷ்டவசமாக தமிழ் தலைமைகள் கூட அவரின் நடவடிக்கைகளுக்கு மறைமுகமாக துணை போய்க்கொண்டு இருக்கிறார்கள். இரட்டை வேடத்தை காண்பித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இவ்வாறாக மக்களின் காணிகளை சுவீகரிக்கும் நடவடிக்கை தொடருமானால் இப்போராட்டங்கள் விஸ்வரூபம் எடுத்து விளைவுகள் விபரீதமாக நடக்கும் சூழ்நிலையும் ஏற்படலாம். எனவே இச்செயற்பாடுகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# பனாமா பத்திரங்கள் அம்பலம் குறித்து அரசு விசாரணைகளை ஆரம்பிக்கும்

பனாமா பத்திரங்கள் மூலம் அம்பலத்துக்கு வந்துள்ள சட்டவிரோத கம்பனிகளில் இலங்கையர்கள் எவருக்கும் தொடர்புகள் உண்டா என்பது குறித்து அரசாங்கம் வெளிப்படையாக விசாரணைகளை முன்னெடுக்குமென அரச தொழில் முயற்சிகள் பிரதி அமைச்சர் எரான் விக்கிரமரட்ன நேற்று முன்தினம் தெரிவித்தார்.

கடந்த அரசாங்கத்தின் உறுப்பினர்கள் சீஷெல்ஸ் நாட்டுடன் மிக நெருக்கமான உறவுகளைக் கொண்டிருந்தமையால் இது குறித்து விரிவாக ஆராய வேண்டிய தேவை ஏற்பட்டிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்று முன்தினம் தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்தபோதே பிரதி அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.


அரசாங்கம் என்ற வகையில் நாட்டின் சட்டங்கள், சர்வதேச சட்டங்கள், பணப் பரிமாற்றச் சட்டங்கள் என பன மீறப்பட்டுள்ளனவா என்பது குறித்து நாம் ஆராய்வோம் என்றும் அவர் தெரிவித்தார்.

"மில்லியன் கணக்கான பனாமா பத்திரங்கள் வெளிவந்துள்ளன. இதனடிப்படையில் 2 இலட்சத்திற்கும் அதிகமான சட்டவிரோத கம்பனிகள் பனாமா,சீஷெல்ஸ் போன்ற சிறிய நாடுகளில் இருப்பது அம்பலத்துக்கு வந்துள்ளது. இதில் சுமார் 11 நாட்டுத் தலைவர்கள் சம்பந்தப்பட்டிருப்பதாகவும் 128 அரசியல்வாதிகளுக்கு தொடர்புகள் இருப்பதாகவும் தகவல் கசிந்துள்ளது.

இருப்பினும் ஆசியாவைச் சேர்ந்த எவரும் இதனுடன் சம்பந்தப்பட்டிருக்கிறார்களா என்பது இதுவரை ஊர்ஜிதம் ஆகாதபோதும் முன்னாள் அரசாங்கத்தின் உறுப்பினர்கள் இதில் பங்கெடுத்திருக்கலாம் என்ற சந்தேகம் அரசாங்கத்துக்கு எழுந்துள்ளது" என்றும் அவர் தெரிவித்தார்.

இவை சட்டவிரோத நிதி நிறுவனங்களாகும்.

தனவந்தர்கள் தமது கறுப்பு பணத்தை பதுக்குவதற்காக இவ்வாறான கம்பனிகளை மேற்படி நாடுகளில் ஆரம்பித்துள்ளனர்.



சீஷெல்ஸ் நாட்டில் 14 ஆயிரம் சட்டவிரோத கம்பனிகள் இருப்பதாகவும் இதில் 204 கம்பனிகளின் உரிமையாளர்கள் மாத்திரமே அடையாளம் காணப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

# 2016 ஜனவரியில் மட்டும் 18 படையினர் கைதாகினர்

(கொழும்பு)

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்கீழ், 2016 ஆம் ஆண்டு ஜனவரி 14 ஆம் திகதியளவில் 10 படையினரும் ஏனைய சட்டத்தின் கீழ் 8 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று, சட்டமும் ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சு அறிவித்துள்ளது.

நாடாளுமன்றம் நேற்று நேற்று முற்பகல் 10.30 மணிக்கு சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் கூடியது. வாய்மூல விடைக்கான வினாக்கள் நேரத்தின் போது, நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில எழுப்பியிருந்த கேள்விக்கு அவையில் ஆற்றுப்படுத்தப்பட்டிருந்த பதிலிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த பதிலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"2016 ஆம் ஆண்டு, ஜனவரி 14 ஆம் திகதியளவில் பயங்கர வாதத் தடுப்புச் சட்டத்தின்கீழ் 7 தரைப்படையினரும் 3 கடற்படையினரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். விமானப் படையினரோ அல்லது பொலிஸாரோ குறித்த சட்டத்தின் கழ் கைது செய்யப்பட வில்லை.

அத்துடன், மேற்படி காலப் பகுதியில் ஏனைய சட்டத்தின் கீழ், 4 தரைப் படை யினரும், 4 பொலிஸ் அதி காரிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர். கடற்படையினரோ, விமானப் படையினரோ கைதாகவில்லை.

இதுவரையில், இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்ற சட்ட நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப் படாமையினால் கைது செய்யப்பட்ட அதிகாரிகளின் பெயர் விபரங்களை வெளியிடுவது முறையற்ற செயற்பாடாகும் என்றும் அந்த பதிலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதே வேளை, "பிரகீத் எக்னெலிகொட காணாமற்போனமையுடன் தொடர்புடையவர்களெனக் குற்றம் சாட்டப்பட்டு, கைது செய்யப்பட்டுள்ள இராணுவத்தினருக்கு, பொலிஸாரினால் தயாரிக்கப்பட்ட போலியான விடயங்கள் உள்ளடங்கிய கூற்றுகளில் கையொப்பமிடுமாறு, சில பொலிஸ் உத்தியோகத்தர்கள் பலவந்தப்படுத்துவதாக, நீதிமன்றத்துக்கும் பொலிஸ்மா அதிபருக்கும் முறைப்பாடு முன் வைக்கப்பட்டுள்ளதா?" என உதய கம்மன்பில எழுப்பியிருந்த கேள்விக்கு,"இல்லை.

அவ்வாறான தொரு முறைப்பாடு இதுவரையில் பொலிஸ் திணைக்களத்துக்கு கிடைக்கவில்லை என்றும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது" (இ-5)

# கிருலப்பனையில் நடைபெறும் மேதினக் கூட்டத்தில் அனைத்து எதிர்க்கட்சி உறுப்பினர்களும் திரள்வர்

## பிரசன்ன ரணதுங்க எதிர்பார்ப்பு

எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி கிருலப்பனையில் நடைபெறவுள்ள மே தினக் கூட்டத்தில் கூட்டு எதிர்க்கட்சி யின் அனைத்து உறுபபினர்களும் பங்கேற்பார்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு பத்திரிகை யொன்றிடம் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.அவர் மேலும் தெரிவிக்கையில்,

கூட்டு எதிர்க்கட்சியை பிரதிநிதித்துவம் செய்யும் அனைத்து உறுப்பினர்களுமகிருலப்பனையில் நடைபெறவுள்ள மே தினக் கூட்டத்தில் பங்கேற்பதற்கு தீர்மானித்துள்ளனர்.

உழைக்கும் மக்களுக்காகவே மே தினக் கூட்டம் நடத்தப்படுகின்றது. தற்போதைய நல்லாட்சி அரசாங்கம் உழைக்கும் வர்க்கத்தின் உரிமைகளை முடக்கியுள்ளது என பிரசன்ன ரணதுங்க குற்றம் சுமத்தியுள்ளார்.



இதேவேளை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு காலியில் நடத்தப்பட உள்ள மே தினக் கூட்டத்தில் பங்கேற்காத சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் கட்சியிலிருந்து நீக்கப்படுவர் என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மகிந்த அமரவீர எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதற்கு முன்னரும் கொழும்பு ஹைட் மைதானத்தில் நடைபெற்ற கூட்டு எதிர்க்கட்சியின் கூட்டத்தில் பங்கேற்றால் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க அறிவித்த போதிலும் கூட்டத்தில் பங்கேற்ற மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட உறுப்பினர்களுக்கு எதிராக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும் திட்டம் பின்னர் கைவிடப்பட்டிருந்தது.(இ-5)

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்–87

# வீட்டுத்தோட்டம் எனும் அட்சய பாத்திரத்தில் அனைத்துணவினையும் பெற வழியுண்டு



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

சுகநலத்தைப்பற்றி அனைவரும் பலமாக யோசித்துக்கொண்டிருக்கின்றோம். ஒருபக்கம் வீசியடிக்கும் தணல் காற்று, உடலை சுட்டெரிக்கும் நெருப்பு வெயில்.. இவற்றுக்கிடையில் சுவாத்தியம் பற்றியும் அவரவர் சுகநலம் பற்றியும் அளவளாவுவதும் தெரிகின்றது. நாம் உண்ணும் உணவும், அருந்தும் நீரும், சுவாசிக்கும் காற்றும், அன்றாடம் தியானமும், உடற்பயிற்சிகளும் இன்னும் மனதில் நினைக்கும் நல்லெண்ணங்களும் இறைபக்தியும் தான் என்றுமே எம்மை சுகதேகிகளாக வைத்திருக்கும். உண்ணும் உணவுநிறையுணவாக சுத்தமானதாக இருக்க வேண்டும் என்பதே அனைவரதும் எதிர்பார்ப்பு. நிறையுணவு என்னும் போது அனைத்து வகையான சத்துக்களும் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும். மாவுச்சத்து, புரதச்சத்து, நார்ச்சத்து இன்னும் விற்றமின்கள், கனியுப்புக்கள் என பலவகையானவை உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும். எமது உடலின் தேவைக்கேற்ப நிறைக் கொள்ள தவறக்கூடாது.

நிறையுணவைப் பற்றியும் சத்துணவினைப்பற்றியும் கலந்துரையாடிக் கொண்டிருக்கும் போது நாம் உட்கொள்ளும் அன்றாட உணவு இவ்விரண்டு சொற்களுக்கும் எவ்வளவு பொருத்தப்பாடாயிருக்கும் எனவும் நாம் கவனிக்க வேண்டும். இதற்குமுதல் நஞ்சற்ற உணவு என்பதும் முக்கியமானது. சமகால முக்கியமான பிரச்சினைகளுள் நஞ்சற்ற உணவு என்பது அனைவரும் ஒத்துக்கொள்ளக்கூடிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. இதற்கு நாம் பயன்படுத்திய இன்னும் பயன்படுத்துகின்ற பீடைநாசினிகள் மற்றும் அசேதன இரசாயனங்கள் காரணமாகும். தேவையற்ற முறையில் பரிந்துரைக்கப்பட்ட அளவினைவிட அதிகமாக இவற்றை பயன்படுத்தியதால் பயன்படுத்துவதால் இப்பிரச்சினைஉருவெடுத்துள்ளது. ஆனால் இதற்கு வலிந்து விடைகாண வேண்டிய நிர்ப்பந்தத்தில் நாம் அனைவரும் தள்ளப்பட்டிருக்கின்றோம்.

தற்போதுள்ள சூழ்நிலையில் எமக்கருகில் உள்ள சந்தையில் விற்கப்படுகின்ற மரக்கறிவகை லும் அவையனைத்தும் விழலுக்கிறைத்த நீராகி விடுவதை கண்ணாலேயே காண நேரிடுகின்றது. நாம் பணம் கொடுத்து மரக்கறிகளை வாங்கும் போது கூடவே அதில் விசிறியிருக்கின்ற நஞ்சிற்கும் சேர்த்து பணம் கொடுத்தே வாங்குகின்றோம். மரக்கறியை சந்தைப்படுத்துபவர் வாங்குபவருக்கு தீமை ஏற்படாது பாதுகாத்துக்கொள்ளவும் வேண்டும். ஆதாயம் மட்டுமே குறிக்கோளாக இருக்கக்கூடாது. பணம் கொடுத்து நஞ்சினை வாங்கி அதனாலேயே உயிரிழக்கும் நிலையேற்படுகின்றது. இதற்கு தீர்வு கிடைக்குமா எனப்பலரும் வினவுவதுண்டு. ஒவ்வொருவரும் தங்களது வாழ்க்கை பற்றி நிறைந்த கவனத்துடனே இருக்கின்றார்கள் என்னும் போது மகிழ்ச்சியாக இருந்தாலும் மற்றையவரைப் பற்றி எந்தவிதமான கவனத்தையுமே கொண்டிருக்கவில்லை எனும் போது மனதில் ஏதோ நெருடுவதைப்போல உணர்கின்றோம். போர்க்கால சூழ்நிலையிலிருந்து விடுபட்ட நாங்கள் அந்தவலியுடன் சேர்த்து பீடை நாசினிகளையும் உள்ளெடுத்துக் கொள்வது இன்னும் எங்களை மனதளவில் அளவுமில்லை. எப்படியும் அதனை உருவாக்கலாம். வீட்டுத் தோட்டத்தில் என்ன என்ன வைத்திருக்கப் போகின்றோம், எப்படி வைத்திருக்கப் போகின்றோம் என்பதுதான் இங்கே ஆழ்ந்து கவனிக்கப்பட வேண்டியனவாகும்.

வீட்டுத்தோட்டத்தில் பலவகையான பயிர்களை வளர்க்கலாம். நாளொன்றுக்கு உணவாக கிடைக்கக்கூடிய பழவகைகளை வளர்க்கலாம். குறிப்பாக பப்பாசி, வாழை, கொடித்தோடை என்பன திட்டமிடப்பட்டு வளர்க்கப்பட்டால் இப்பழங்களை நாம் கிழமைக்கேனும் உண்ண வாய்ப்புண்டாகும். இவற்றுடன் ஜம்பு,கொய்யா, அன்னமுண்ணா, பலா,மாதுளை,என பலவகை பழங்களை உற்பத்தி செய்யவழிகளுண்டு. இடவசதியைப் பொறுத்து இவற்றை நடவு செய்து தேவைப்படுகின்ற பழங்களை பெற்றுக்கொள்ளலாம். இவற்றுடன் சேர்த்து இலைக்கறி வகைகளையும் கவனத்திற் கொள்ளலாம். ஒரு கிழமைக்கென ஏழு இலைக்கறி வகைகளை நாம் நடவு செய்து பயன்பெறலாம். குறிப்பாக முசுட்டை, சிறுகீரை, வல்லாரை, பொன்னாங்காணி, புதினா, பசளி ஆகியனவற்றை

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 84

கேற்ப இவற்றின் அளவு நிர்ணயிக்கப்பட்டிருக்கும். சுகநலமான வாழ்க்கைக்கு அவரவர் உடலுக்கேற்பநிறையுணவை இன்னும் சத்துணவாக உள்ளெடுக்கவேண்டும். பொதுவாகவே நாம் கிடைக்கின்ற உணவை அதுவும் அவசர வாழ்க்கைக்குள் உள்ளார்ந்து விரைந்து வாயினுள் திணிக்கும் வழமைக்கு எம்மை பழக்கிக் கொண்டிருக்கின்றோம். திட்டமிட்ட உணவுப்பழக்கத்திலிருந்தும் விடுபட்டு விரைந்த உணவுக்குள் (Fast food) நம்மை நாமே திணித்திருக்கின்றோம். இதனால் எமக்குத் தேவையான அனைத்தையும் நாம் உணவினுள் உள்ளெடுக்க முடியாதிருக்கின்றது. நாளொன்றுக்கு ஒருபழத்தை உண்பதற்கே முடியாதிருக்கும் போது எப்படி மலச்சிக்கலுக்கு வழி தேடப்போகின்றோம். அதுவே வழக்கமாக வைத்தியரிடம் விரைந்து போய் மருந்தினை விழுங்கி உடனடி தீர்வும் காண விழைகின்றோம். அனைத்தையும் விரைந்து பெறும் கலாசாரத்தினுள் நாம் உள்ளார்ந்துவர எத்தனிப்பதனால் என்னவோ இப்பூமியையும் விட்டுவிரைந்து செல்வதற்கு எமக்கு நோய்களும் விரைவாகவந்து விடுகின்றன. மூதாதையர் வாழ்ந்த வயதை நாம் எண்ணிக்கூட பார்க்க முடியாதவர்களாகி விட்டோம். அனைத்தும் எமது வழமைக்கு மாறான பழக்கவழக்கத்தினால் என்பதனை இவ்விடத்திலேனும் நாம் ஒருதரம் உணர்ந்து



களை உற்றுநோக்கினால் அவை பொதுவாகவே பீடை நாசினி விசிறப்பட்ட பொருட்களாகவே இருக்கின்றன. அதிலும் அறுவடைக்கு முந்தியதினம் இவை விசிறப்பட்ட நிலையில் அறுவடை செய்யப்பட்டு விற்பனைக்காக விதம்விதமான நீர் தெளிக்கப்பட்டு தயார்படுத்தப்பட்டிருக்கும். உலக உணவு நிறுவனத்தின் வரையறையின்படி அசேதன இரசாயனத்தை விசிறி 14 நாட்களின் பின்னரேயே அவற்றை சந்தைப்படுத்த வேண்டும். மாறாக இந்த விதியை எவருமே கடைப்பிடிப்பதில்லை இன்னும் கண்டுகொள்வதில்லை. இது பற்றி பல கட்டுரைகளில் நான் எடுத்தியம்பினா நோயுற்றவர்களாகவே ஆக்கி விடும்.

நாமே உணவுற்பத்தி செய்து உண்பது என்பது இங்கே சாலப் பொருந்துவதாக அமைந்தாலும் அது அனைவருக்கும் சாத்தியமா எனவும் கவனித்துக் கொள்ள வேண்டும். இருக்கின்ற சிறிய இடவசதியை வைத்துக் கொண்டு சிறியளவில் திட்டமிட்டுக் கொள்ளலாம். சிறிய வீட்டுத் தோட்டமொன்றை உருவாக்க முயற்சி செய்யலாம். அதற்கு செவிசாய்க்க முடிந்தால் அதுவே எமது திட்டமிடலுக்கு கிடைத்த முதல் வெற்றியாகும். அனைவரும் நினைப்பதைப்போல வீட்டுத்தோட்டத்திற்கு என ஒரு வடிவமில்லை. கொள்கலன்களிலும் அகத்தி, முருங்கை,தவசி முருங்கை, ஆகியனவற்றை உயிர்வேலிகளிலும் நடவுசெய்து தேவையானவற்றை ஒருகிழமைக்கென பெற்றுக்கொள்ளலாம். இலைக்கறி வகைகளில் பெறப்படும் சத்துக்கள் மலிவானதும் சிறந்ததுமாக இருப்பதனால் ஒவ்வொரு வீட்டிலும் வீட்டுத் தோட்டமமைத்து அதில் இவ் விலைக் கறி வகைகளை உற் பத்தி செய்து பயனடையலாம். வீட்டுத் தோட்டத்திற்கென பல வகையான தாவரங்களை உற்பத்தி செய்ய முடியும். பல்வகைமையை உங்கள் வீட்டுத் தோட்டத்திலேயே உருவாக்குவதற்கு இதுவொருசிறந்த உதார ணமாகும்.

வீட்டுத்தோட்டத்தை உயிர்ப்புள்ளதாக மாற்றி அதிலிருந்து எமது வீட்டுக்குத் தேவையான அனைத்தையும் பெற்றுக் கொள்ளலாம். உங்கள் வீட்டிலுள்ள பாடசாலை செல்லும் பிள்ளைகளை வீட்டுத்தோட்டத்திற்கு தலைமையாளராக இன்னும் பொறுப்பாளராக நியமியுங்கள். அவர்களிடம் வீட்டுத் தோட்டத்தை திட்டமிட வழிவிடுங்கள். நீங்கள் அவர்களுக்கு திட்டமிடலில் உதவி செய்யலாம். இது அவர்களுடைய தலைமைத்துவத்தை வளர்க்க பெரிதும் உதவும். தாமே வளர்த்த தாவரங்களிலிருந்து பெற்ற மரக்கறிவகைகள் பழங்களை அவர்களே உண்ண பழக்குங்கள். தமது செயற்பாட்டால் பெற்ற இவ்வுணவு வகைகளை அவர்கள் விரும்பி உண்ண முற்படுவார்கள். சத்துணவை நிறையுணவை பிள்ளைகளுக்கு கொடுப்பதில் நாம் மிகவும் அக்கறை காட்ட வேண்டும். நாளைய சந்ததிக்கு நாம் சத்துணவுகளை கொடுத்து அவர்களது ஆற்றலை வளர்த்துவிட வேண்டும்.

வீட்டுத் தோட்டத்தில் மூலிகைத்தாவரங்களையும் வளர்த்துக் கொள்ளலாம். அவையனைத்தும் எமக்கு ஏதோ வகையில் பயன்தரக்கூடியவையாகும். மலச்சிக்கல் அனைவருக்கும் பொதுவான பிரச்சினையாகும். அதிலும் வெப்பநிலை அதிகரித்த இக் காலப்பகுதியில் நீரருந்துவது குறைவடையும் போது பல வகையான உபாதைகளுக்கு நாம் முகங் கொடுக்க வேண்டி ஏற்படுகின்றது. அவர்களுக்கு மரக்கறிவகைகள் எப்போதும் அவர்களது உணவில் இருக்க வேண்டும். அதனுடன் பழவகைகளும் மிகவும் அவசியமாகும். இவற்றை நஞ்சற்றதாக நாம் கொடுக்க முயற்சிக்க வேண்டும். வீடுகளில் அசேதன *இரசாயனங்கள் பயன்படுத்தாமல் உற்பத்தி செய்யும் பழவகைகளை நாம் வாங்கி பயன்படுத்தலாம். நாம் முயன்றால் எது நடக்காது. நாமே சோர்வாக இருக்கக் கூடாது. எப்போதும் சக்தியுள்ளவர்களாக ஆளுமையுள்ளவர்களாக இருக்க வேண்டும். இதற்கு சத்துணவும் நிறையுணவும் அனைவருக்கும் அவசியமாகும். வாருங்கள் எம்மால் முடியாதது எதுவுமில்லை.

# அப்பாவி பொதுமக்களை கேடயமாக பயன்படுத்தும் ஐ.எஸ் தீவிரவாதிகள்

ஈராக் மற்றும் சிரியாவின் சில பகுதிகளை கைப்பற்றி உள்ள ஐ.எஸ். தீவிரவாதிகள். தனி இஸ்லாமிய நாடாக அறிவித்து உள்ளனர். ஐ.எஸ். தீவிரவாதிகள் உலக நாடுகளுக்கு பெரும் அச்சுறுத்தலாக இருந்து வருகின்றனர். தங்களின் உயிரை காப்பாற்றிக் கொள்வதற்காக அப்பாவி பொதுமக்களை மனித கேடயமாக பயன்படுத்தி வருகின்றனர்.

இந்நிலையில் ஐ.எஸ். தீவிரவாதிகளின் பிடியில் மனித கேடயமாக உள்ளவர்கள் அனுபவிக்கும் துன்பங்கள் குறித்த தகவல்கள் தற்போது வெளியாகியுள்ளன.

ஈராக்கின் மக்மோரில் உள்ள அகதிகள் முகாமில் வசித்து வரும் அபு இஸ்ரா என்பவர் இது தொடர்பாக கூறியதாவது,

எங்கள் கிராமத்தை கைப்பற்றிய தீவிரவாதிகள் அங்குள்ள மக்களை கேடயமாக பயன்படுத்தி தங்களை தற்காத்துக்கொண்டனர்.



மேலும் ஏராளமான உத்தரவுகள் போட்டனர். ஆண்கள் கட்டாயம் நீளமாக தாடி வளர்க்க வேண்டும். தாடி சிறிதாக இருக்கிறது என்று என்னிடமே இருமுறை அபராதம் பெற்றுள்ளனர்.

அதேபோல் பெண்களுக்கு பர்தா கட்டாயம். எனது 12 வயது மகள் பர்தா அணியவில்லை என்பதற்காக அவளுக்கு கடும் தண்டனை அளித்தனர்.

அவர்களிடம் வேலை செய்பவர்களுக்கு சரியாக சம்பளம் தர மாட்டார்கள்.

ஒருநாள், நான் வேலையை விட்டு நிற்க போவதாக சொன்னதற்கு எனது தலையை தனியாக வெட்டி விடுவதாக மிரட்டினர்.

மேலும் அவர்கள் செய்யும் கொடூர கொலைகளை பார்க்க சொல்லி கட்டாயப்படுத்தினர். மேலும் எங்களை மனித கேடயமாகவும் பயன்படுத்தினர் என்று தெரிவித்துள்ளார். (இ-5)




## பாகிஸ்தானில் 6 தலிபான் தீவிரவாதிகள் கொலை

பாகிஸ்தானில் லாகூர் நகரில் கட்சி அபாடி பகுதியில் உள்ள தல்லாட் பூங்கா என்ற இடத்தில் பாகிஸ்தான் தலிபான் தீவிரவாதிகள் பதுங்கி இருப்பதாகவும், அவர்கள் அரசு அலுவலகங்கள் மீது தாக்குதல நடத்துவதற்கு சதித்திட்டம் தீட்டுவதாகவும் உளவு அமைப்புகளுக்கு ரகசிய தகவல்கள் கிடைத்தன.

இதையடுத்து அங்கு பொலிஸ் படை நேற்று முன்தினம்சென்று, தீவிரவாதிகள் பதுங்கி இருந்த இடத்தை சுற்றி வளைத்தது.

தீவிரவாதிகளை சரண் அடையுமாறு பொலிஸ் படையினர் கூறினர். ஆனால் அவர்கள் அதை கேட்காமல், பொலிஸ் படையினர் மீது சரமாரியாக துப்பாக்கியால் சுட்டனர். பொலிஸ் படையினரும் தங்கள் துப்பாக்கிளால அவர்களுக்கு சரியான பதிலடி கொடுத்தனர் முடிவில் 6 தலிபான் தீவிரவாதி கள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இருப்பினும் 3 அல்லது 4 தலிபான் தீவிரவாதிகள் தப்பித்து விட்டதாக அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன.

சம்பவ இடத்தில் இருந்து ஏராளமான ஆயுதங்கள், 5 கிலோ வெடி பொருட்கள், 3 மோட்டார்சைக்கிளகள், தோட்டாக்கள் ஆகியவற்றை பொலிஸ் படையினர் கைப்பற்றினர். தப்பி ஓடிய தலிபான் தீவிர வாதிகளை தேடிப்பிடிக்க வேட்டை முடுக்கி விடப்பட்டுள்ளது. (இ-5)

## பனாமாஆவணங்கள் வெளியீடு

# உண்மையை ஒப்புக்கொண்ட பிரிட்டன் பிரதமர் கமரூன்



தனது தந்தையின் வெளிநாட்டு நிறுவனங்களில் தனக்கு பங்கு இருந்தது உண்மைதான் என பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூன் ஒப்புக்கொண்டுள்ளார்.

"பனாமா லீக்ஸ்" என்றழைக்கப்படும் ரகசிய ஆவண தகவல்கள் உலகம் முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

சுமார் 12 நாடுகளின் இந்நாள், முன்னாள் அரசியல் தலைவர்களின் பெயர்கள் பனாமா லீக்ஸ் பட்டியலில் இடம்பெற்றுள்ளது.

அவர்களுக்குள் பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூனின் தந்தை இயன் கமரூனும் ஒருவர்.

கடந்த 2010ஆம் ஆண்டு இயன் இருந்த பிறகு வெளிநாடுகளில் உள்ள நிறுவனங்களில் இருக்கும் பங்குகள் மூலம் டேவிட் கமரூனும் பலன் அடைந்து வந்ததாக கூறப்பட்டது.

எனினும் இந்த தகவலை டேவிட் கமரூன் மறுத்தார்.

இந் நிலையில் தனது தந்தையின் வெளிநாட்டு நிறுவனங்களில் தனக்கு பங்கு இருந்தது உண்மை தான் என தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் டேவிட் கமரூன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியுள்ளதாவது, கடந்த காலங்களில் என்னிடம் பங்குகள் இருந்தன. எனது தந்தை ஒரு பங்கு தரகர் என்பதால் இது இயல்பான ஒன்று தான்.


எனினும் பிரதமர் வேட்பாளராக போட்டியிடுவதால் கடந்த 2010ஆம் ஆண்டே அவற்றை விற்றுவிட்டேன். எனக்கும் எனது மனைவிசமந்தாவுக்கும் 5000 யூனிட்கள் வரை பங்குகள் இருந்தன.

அதன் மதிப்பு 30 ஆயிரம் பவுண்டாக இருக்கலாம் என்று தெரிவித்துள்ளார். அவரது இந்த ஒப்புதல் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

உடனடியாக பிரதமர் பதவியில் இருந்து கமரூன் விலக வேண்டும் என்று எதிர்க்கட்சிகளும் பொது மக்களும் கூறி வருகின்றனர்.

வெளிநாட்டு நிறுவனங்களில் பங்கு இருந்தது உண்மைதான் தான் பிரதமரே ஒப்புக்கொண்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (இ-5)

# அதிநவீன செயற்கைக்கோளை விண்ணுக்கு ஏவியது சீனா



பூமிக்கு மீண்டும் திரும்பக் கூடிய அதிநவீன செயற்கைக் கோளை சீனா கடந்த 6 ஆம்திகதி வெற்றிகரமாக விண்ணுக்கு ஏவியது.

விண்வெளியில் உயிரினங்களின் வாழ்க்கை மற்றும் நுண்ணிய ஈர்ப்பு ஆகியவற்றை ஆய்வு செய்யும் வகையில் இந்த செயற்கைக்கோளை சீனா ஜியூகுவான் செயற்கைக்கோள் ஏவுதளத்தில் இருந்து செலுத்தியது.

லாங் மார்ச் 2 டி ராக்கெட் மூலம் செலுத்தப்பட்ட எஸ்ஜே 10 என்ற இந்த செயற்கைக்கோள் வெற்றிகரமாக அதன் வட்டப்பாதையில் நிலை நிறுத்தப்பட்டதாக சீன விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர்.

துப்பாக்கி குண்டு வடிவத்தில் உள்ள இந்த செயற்கைக்கோளால் விண்ணில் மிதந்தபடி விண்வெளி பொருட்கள், விண்வெளி கதிர் விளைவுகள், பயோ தொழில் நுட்பம் உள்ளிட்ட 19 வகையான சோதனைகளை மேற்கொள்ள முடியும்.

விண்வெளியில் மனித இனப் பெருக்கத்தின் வளர்ச்சியை அறிவதற்காக எலியின் ஆரம்ப கட்ட கரு முட்டைகள் அனுப்பி வைக்கப் பட்டுள்ளன.

மேலும் பழங்கள், பூச்சி இனங்கள் மற்றும் எலி செல்களின் மரபணு ஸ்திரத் தன்மையை விண்வெளி கதிர்வீச்சுகள் எந்த அளவுக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றன என்பது குறித்தும் ஆராயப்படவுள்ளது.

பூமிக்கு கவனமாக திரும்பக் கூடிய வகையில் இதுவரை 25 செயற்கைக்கோள்களை சீனா அனுப்பி வைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# விசேட அதிரடிப்படையினரின் தந்திரோபாய பயிற்சி



பயங்கரவாத தாக்குதல்களை எதிர் கொளள சவுதி விசேட அதிரடிப் படையினர் தந்திரோபாய பயிற்சிகளில் ஈடுபட்டுள்ளதாக அந்நாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன. சவுதி முடிக்குரிய இளவரசரும், பிரதமரும், உள்துறை அமைச்சரு மான முஹம்மத் பின் நாயப் ஆரம் பித்து வைத்த குறித்த இராணுவ பயிற்சியில் மூத்த அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர். (இ-5)





# சிரியாவில் ஐ.எஸ்.தீவிரவாதிகளால் 250 பேர் கடத்தல்



சிரியாவில் ஐ.எஸ். தீவிரவாதிகளில் ஜிகாத் பிரிவு கடந்த சில தினங்களுக்கு முன்பு சீமெந்து தொழிற்சாலை ஒன்றில் தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலின்போது அந்தப் பகுதியில் இருந்து சுமார் 250 பேரை காணவில்லை எனவும் அவர்கள் கடத்தப்பட்டு வட்டனர் எனவும் அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

சிரியாவின் தலைநகர் டமாஸ்கஸின கிழக்கு பகுதியில் உள்ள சீமெந்து தொழிற்சாலை ஒன்றில் ஐ.எஸ் ஜிகா பிரிவு தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். டமாஸ்கஸில் இருநது சுமார் 50 கிலோமீற்றர் தொலைவில் உள்ள டெமியர் என்ற பகுதியில் இந்த தாக்குதல் நடைபெற்றது.

சீமெந்து தொழிற்சாலையின் நிர்வாகி ஒருவர் கூறுகையில், 250 தொழிலாளர்களை கடந்த திங்கட்கிழமை முதல் அணுக முடியவில்லைஎன்று தெரிவித்தார். இதே போல் சீமெந்து தொழிற்சாலைகக வேலைக்கு சென்ற தங்கள் குடும்பத்தினர் குறித்து எவ்வித தகவலும் இல்லை என்று மாயமானவர்களின் உறவினர்கள் கூறியுள்ளனர். (இ-5)

## இந்தியா-பாகிஸ்தான் இடையேயான அமைதி நடவடிக்கைகள் நிறுத்தம்

### பாக்.தூதுவர் தெரிவிப்பு



இந்தியா-பாகிஸ்தான் இடையிலான அமைதி நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு விட்டதாக இந்தியாவுக்கான பாகிஸ்தான் தூதர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கான பாகிஸ்தான் தூதர் அப்துல் பாசித், நேற்று முன்தினம் டில்லியில் உள்ள வெளிநாட்டு நிருபர்கள் சங்க அலுவலகதில் நிருபர்களுக்கு பேட்டி அளிததார். அப்போது அவர் கூறியதாவது,

இந்தியா-பாகிஸ்தான் இடையிலான அமைதி நடவடிக்கைகள் தற்போது நிறுத்தி வைக்கப்படடுள்ளன.

மேலும், பதன்கோட் விமானப் படை தள தாக்குதல் சம்பவம் பற்றி விசாரணை நடத்த பாகிஸ்தான் கூட்டு விசாரணைக் குழு, இந்தியாவில் அனுமதிக்கப்பட்டது. அதற்கு பரஸ்பர நல்லெண்ண நடவடிக்கையாக, இந்தியாவின் தேசிய புலனாய்வு அமைப்பு (என்.ஐ.ஏ.), பாகிஸ்தானில் விசாரணை நடத்த அனுமதிக்கப்படும் என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது.

ஆனால், இது பரஸ்பர நல்லெண்ணம் சம்பந்தப்பட்ட விடயம் அல்ல: இது, ஒத்துழைப்பு சம்பந்தப்பட்ட பிரச்சினை. அந்த சம்பவத்தின் பின்னணியை கண்டறிய இரு நாடுகளும் ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பது சம்பந்தப்பட்ட பிரச்சினை ஆகும்.

இந்திய உளவாளி

பாகிஸ்தானில் உளவு பார்த்ததாக இந்திய விமானப்படை முன்னாள் அதிகாரி குல்பூஷன் யாதவ் கைது செய்யப்பட்டுள்ளார். இதுவே, பாகிஸ்தான் நீண்ட காலமாக சொல்லி வரும் குற்றச்சாட்டுக்கு மறுக்க இயலாத ஆதாரமாகும். பாகிஸ்தானில் கிளர்ச்சியை உருவாக்கவும், நாட்டை சீர்குலைக்கவும் முயன்று வருபவர்கள் யார் என்பது எங்கள் அனைவருக்கும் தெரியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## சுட்டெரிக்கும் வெயிலால் 111 பேர் பலி

(ஐதராபாத் )

ஆந்திரா மற்றும் தெலுங்கானா மாநிலங்களில் கடந்த சில நாட்களாக சுட்டெரித்து வரும வெயிலின் கொடுமை தாங்க முடியாமல் 111 பேர் உயிரிழந்து விட்டதாக அதிகாரிகள் தெரிவித் துள்ளனர்.

இதில் தெலுங்கானாவில் 66 பேரும், ஆந்திராவில் 45 பேரும் உயிரிழந்துள்ளனர். கடந்த ஒரு வாரத்தில் இந்த உயிரிழப்பு நிகழ்ந்திருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தெலுங்கானாவின் பேரிடர் மேலாண்மைத்துறையினர் கூறுகையில்,

மெஹபூபா மாவட்டத்தில்தான் அதிகளவில் உயிரிழப்பு நிகழ்ந்திருப்பதாகவும், இங்கு மட்டும் 28 பேர் பலியானதாகவும், மேடக் மாவட்டத்தில் 11 பேர் உயிரிழந்திருப்பதாகவும் தெரிய வருகிறது. (இ-5)

## ஐ.எஸ்.ஐ.எஸ்.தீவிரவாதிகள் நடத்திய இரசாயனத் தாக்குதலில் 23 பேர் பலி

### நூற்றுக்கும் மேற்பட்டோர் படுகாயம்

சிரியாவில் ஐ.எஸ். தீவிரவாதிகள் நடத்திய இரசாயன தாக்குதலில் 23 பேர் கொல்லப்பட்டதுடன், நூற்றுக்கும் அதிகமானவர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

வட மேற்கு பிராந்தியத்திலுள்ள அலேப்போ நகரில் வை.பீ.ஜீ என்ற குர்திஷ் மக்கள் பாதுகாப்பு பிரிவினரை இலக்குவைத்தே இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்த தாக்குதலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சுவாசக் கோளாறு மற்றும் உடல் சோர்வு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அலேப்போவின் ஷேய்க் மஹ்சூட் நகரில் மஞ்சள் நிற வாயு வெளியேறுவது போன்ற காணொலி இணையத்தளங்களில்வெளியாகியுள்ளது.

இரசாயன தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதை குர்திஷ் செம்பிறைச் சங்கமும் உறுதிப்படுத்தியுள்ளது. தாக்குதலின் பின்னர் மூச்சுத் திணறல் காரணமாக பலர் சிகிச்சைகளுக்காக வருகைதந்துள்ளதாக உள்ளூர் வைத்தியசாலையொன்றின வைத்தியர் தெரிவித்துள்ளார்.

கடந்த 2013 ஆம் ஆண்டு டமாஸ்கஸின் புறநகர் பகுதியில் ஐ.எஸ். தீவிரவாதிகள் நடத்திய தாக்குதல்களில் நூற்றுக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## மக்களிடையே பிரிவினையை பிரதமர் மோடி தூண்டுகிறார்



"பிரதமர் நரேந்திர மோடி வெளிநாடுகளில் இந்தியாவை பற்றி பெருமையாக பேசுகிறார், இங்கே வந்தவுடன் பிரிவினையை தூண்டி விடுகிறார். மதவாத சக்திகளிடம் அசாம் மக்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்" என்று காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி தெரிவித்தார்.

அசாம் மாநிலத்தில் முதற்கட்ட தேர்தல் முடிந்த நிலையில், 2ஆம் கட்ட தேர்தல் பிரசாரத்தில் தலைவர்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். லேயர் அசாமின் பர்பேடா மாவட்டத்தில் உள்ள சருகேட்ரி பகுதியில் காங்கிரஸ் சார்பில் நேற்று பிரசார பொதுக் கூட்டம் நடந்தது. இதில் சோனியா காந்தி பேசியதாவது,

மக்களிடையே பிரதமர் மோடி பிரிவினையை தூண்டி வருகிறார். நாக்பூரில் இருந்து கொண்டு (ஆர் எஸ் எஸ்) மதவாத அரசியலை இயக்கி கொண்டிருக்கின்றனர். எனவே மதவாத பா.ஜ.கவிடம் அசாம் மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். வெளிநாடு செல்லும் போதெல்லாம் இந்தியாவைப் பற்றி பெருமையாக பேசுகிறார் பிரதமர் மோடி. ஆனால், சொந்த நாட்டுக்கு திரும்பியவுடன் மக்களிடம் வெறுப்பை பரப்புகிறார்.

அன்பு, அமைதி, மத நல்லிணககம் ஆகியவற்றில் இருந்து மக்களை பிரிக்க சதி நடக்கிறது. மத நல்லிணக்கத்துக்கு மிகச்சிறந்த உதாரணமாக அசாம் மாநிலம் உள்ளது. இங்குள்ள மக்கள் சங்கர தேவா மற்றும் ஆஸான் பகிர் போதனைகளை பின்பற்றி சுமுகமாக வாழ்கின்றனர். ஆனால், மோடியும் அவரது சகாக்களும் பொய் வாக்குறுதிகளை அளித்து மக்களிடம் பிரிவினையை தூண்ட முயற்சிக்கின்றனர்.

பதினைந்து ஆண்டுகளுக்கு முன் அசாம் மாநிலம் பாதுகாப்பற்றதாக, ஸ்திரமற்ற நிலையில் இருந்தது. ஆனால் காங்கிரஸ் முதல்வர் தருண் கோகாய் பொறுப்பேற்ற பின்னர் மாநிலத்தில் அமைதி திரும்பவும், வளர்ச்சிப் பாதையில் செல்லவும் கடினமாக உழைத்திருக்கிறார். கல்வி நிறுவனாங்கள், இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகள் பெருகி உள்ளன.

அசாம் மாநிலத்தின் வளர்ச்சிக்கு தருண் கோகோயும் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங்கும் சிறநத பங்களிப்பை வழங்கியுள்ளனர. அந்தப் பணிகள் தொடர்ந்து நடைபெற, காங்கிரஸை ஆதரியுங்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## பகுதிநேரப் பேராசிரியராக முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங்

(ஐதராபாத்)

முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் மீண்டும் பேராசிரியர் பணிக்கு திரும்ப உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் தற்போது நாடாளுமன்ற மேல்சபை எம்.பி.யாக உள்ளார்.

இந்நிலையில், வீட்டில் ஓய்வு எடுத்துவரும் அவரை அண்மையில் சண்டிகரில் உள்ள பஞ்சாப் பல்கலைக்கழக நிர்வாகிகள் சந்தித்துப் பேசினர்.

இந்த சந்திப்பின்போது, பஞ்சாப் பல்கலைக்கழகத்தில் பகுதி நேர பேராசிரியராக பணியாற்ற வருமாறு அவரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். இதை மன்மோகன சிங் ஏற்றுக் கொண்டதாக கூறப்படுகின்றது.

அதன்படி, மன்மோகன் சிங் சண்டிகர் வரும் போதெல்லாம் நேரடியாக மாணவர்களுக்கு பாடம் நடத்துவார் என்றும், ஏனைய நேரங்களில் வீடியோ கான்பரன் சிங் மூலம் மாணவர்களின் சந்தேகங்களை தீர்த்துவைப்பார் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (இ-5)

# அரசியல் தீர்வுத் திட்ட வரைபு 16ம் திகதி சம்பந்தனிடம் கையளிப்பு

வடக்கு மாகாண சபையால் தயாரிக்கப்பட்ட அரசியல் தீர்வுத் திட்ட வரைபை எதிர்வரும் 16 ஆம் திகதி எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனிடம் கையளிக்கவுள்ளதாக வடமாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் 49 ஆவது அமர்வு கைதடியில் அமைந்துள்ள வடமாகாண சபை அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. அதில் வடமாகாண சபையால் தயாரிக்கப்பட்ட அரசியல் தீர்வுத் திட்ட வரைபு கையளிப்பது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைவர் எதிர்வரும் 16 ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கு வருவதாக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்தத் தீர்வுத் திட்ட வரைபை தனியாகக் கையளிக்க மாட்டோம். வடமாகாண சபை உறுப்பினர்கள் அனைவரும் அழைக்கப்பட்டு வடமாகாண முதலமைச்சர், வடமாகாண அவைத் தலைவர் மற்றும் வடமாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் ஆகிய மூவரும் இணைந்து கையளிக்கவுள்ளோம். யாழ் நூலகத்தின் கேட்போர் கூடத்தில் இந்த நிகழ்வு இடம்பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அங்கு சில கருத்துக்களை எமது உறுப்பினர்கள் நாகரிகமாகத் தெரிவிப்பதற்கான வாய்ப்பு கிடைக்கும் என நம்புகிறேன் எனத் தெரிவித்தார். (இ-9)

## நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை- 08.04.2016

| நாணயம் | நாடு | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| டொலர் | அமெரிக்கா | 142.75 | 146.55 |
| பவுண்ட் | பிரிட்டன் | 200.05 | 207.21 |
| ஈரோ | ஐரோப்பிய ஒன்றியம் | 161.20 | 167.65 |
| பிராங் | சுவிட்சர்லாந்து | 148.22 | 154.40 |
| டொலர் | கனடா | 108.10 | 112.63 |
| டொலர் | அவுஸ்திரேலியா | 106.49 | 111.52 |
| டொலர் | சிங்கப்பூர் | 105.12 | 109.15 |
| ரூபா | இந்தியா | 2.1578 | ------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 381.6976 |
| குவைத் | டினார் | 477.1220 |
| ஓமான் | ரியால் | 373.7614 |
| கட்டார் | ரியால் | 39.5167 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.3708 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.1789 |

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 50 | 30 | 70 | 40 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 90 | 80 | 70 | 80 | 80 | 100 | 80 |
| பச்சைமிளகாய் | 80 | 80 | 100 | 100 | 100 | 160 | 100 |
| தக்காளி | 60 | 50 | 60 | 40 | 60 | 100 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 40 | 40 | 50 | 80 | 50 |
| கோவா | 60 | 40 | 60 | 80 | 60 | 80 | 50 |
| கரட் | 100 | 100 | 80 | 80 | 100 | 140 | 100 |
| பூசணி | 30 | 30 | 15 | 40 | 40 | 60 | 40 |
| புடோல் | 40 | 30 | 25 | 40 | 40 | 60 | 50 |
| வாழைக்காய் | 40 | 30 | 35 | 50 | 40 | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 80 | 100 | 70 | 50 | 60 | 100 | 60 |
| பெரிய வெங்காயம் | 100 | 80 | 70 | 80 | 80 | 100 | 80 |
| பாகற்காய் | 120 | 120 | 120 | 80 | 100 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 50 | 120 | 60 | 120 | 80 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 50 | 80 | 70 | 120 | 100 |
| பயற்றங்காய் | 80 | 80 | 50 | 60 | 40 | 60 | 60 |
| லீக்ஸ் | 130 | 100 | 100 | 120 | 120 | 100 | 140 |
| பீற்றூட் | 80 | 100 | 50 | 80 | 80 | 100 | 70 |
| கறிமிளகாய் | 100 | 100 | 50 | 200 | 100 | 120 | 80 |
| முருங்கைக்காய் | 600 | 400 | 350 | 400 | 400 | 500 | 500 |
| போஞ்சி | 120 | 160 | 100 | 120 | 120 | 120 | 100 |
| கத்தரிதம்புள்ள | 50 | 30 | — | 60 | — | 60 | 50 |
| கீரை – 1பிடி | 40 | 30 | 20 | 40 | 40 | 30 | 30 |
| தேசிக்காய் | 220 | 200 | 180 | 200 | 200 | 400 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 30-50 | 30-40 | 50 | 40 | 30-40 | 40 |
| இராசவள்ளி | 150 | 200 | 110 | 140 | 140 | 120 | 150 |
| வெங்காயப்பூ | 260 | 200 | — | — | — | — | — |
| முள்ளங்கி | 60 | 50 | 20 | 40 | 40 | 80 | 40 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 20 | 30 | 40 | 30 | 25 |
| வல்லாரை | 20 | 20 | 20 | 10 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | 80 | — | 50 | — | — | — | — |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் சுட்டுக்கொலை 151

…அங்கு பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டு பிற்பகலில் யாழ்ப்பாணத்துக்கு கொண்டு போகப்பட்டன. அங்குள்ள செல்வநாயகம் நினைவு மண்டபத்தில் பொதுமக்கள் மரியாதை செலுத்துவதற்காக வைக்கப்பட்டன. அதன்பின் அரசு மரியாதையுடன் தகனம் செய்யப்பட்டன.

### பிரேமதாசா துயரம்

இலங்கை ஜனாதிபதி பிரேமதாசா அம்பாறை என்ற இடத்தில் நடந்த கூட்டத்தில் பேசுகையில், அமிர்தலிங்கமும் யோகேஸ்வரனும் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் எனக்கு பெரும் அதிர்ச்சியும் வேதனையும் அளிக்கிறது என்று கூறினார்.

கூட்டத்தில் இருந்தவர்கள் 2 நிமிடம் மௌனம் கடைப்பிடித்து அஞ்சலி செலுத்தினார்கள்.

### இந்தியா கண்டனம்

அமிர்தலிங்கமும் யோகேஸ்வரனும் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்திற்கு விடுதலைப் புலிகளே காரணம் என்று இந்தியா குற்றம் சாட்டியது.

டில்லியில் இந்திய வெளிவிவகார அதிகாரி ஒருவர் கூறுகையில், விடுதலைப்புலிகள் வன்முறையைக் கைவிட்டு சமாதான வழிக்குத் திரும்புவார்களா என்று பிரதமர் ராஜீவ்காந்தி சந்தேகப்பட்டார். சந்தேகம் இப்பொழுது உறுதியாகிவிட்டது என்றார்.

### யோகேஸ்வரன் மனைவி தகவல்

கொலை நடந்த சம்பவம் பற்றி விசாரணை நடத்திய நீதிபதியிடம் யோகேஸ்வரனின் மனைவி கூறியதாவது,

சுட்டவர்களில் 2 பேர்களை இதற்கு முன் பார்த்து இருக்கிறேன். அவர்கள் விடுதலைப் புலி இயக்கத்தை சேர்ந்தவர்கள். ஏற்கனவே என் கணவரைச் சந்திக்க வந்திருக்கிறார்கள். நான் உணவு தயாரித்துக் கொண்டிருந்தபோது துப்பாக்கி வெடிக்கும் சத்தம் கேட்டது. ஓடிப்போய் பார்த்த போது தலைவர்கள் இரத்த வெள்ளத்தில் கிடந்தனர்.

இவ்வாறு அவர் கூறினார்.

### கடை அடைப்பு

அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் மறைவிற்கு அஞ்சலி தெரிவித்து இலங்கையில் தமிழர் வாழும் பகுதிகளில் கடையடைப்பு நடந்தது. கொடிகள் அரைக்கம்பத்தில் பறந்தன.

தமிழீழ மக்கள் விடுதலை அமைப்பின் (பிளொட்) தலைவரான உமாமகேஸ்வரன் சுட்டுக் கொல்லப்பட்டார். அவரது உடல் ரயில் தண்டவாளத்தில் கிடந்தது.

இலங்கை தமிழர் கட்சி (தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி) தலைவர் அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் ஆகியோர் 13.7.1989 அன்று சுட்டுக் கொல்லப்பட்டனர்.

அதைத் தொடர்ந்து தமிழீழ மக்கள் விடுதலை அமைப்பின் (பிளொட்) தலைவர் உமா மகேஸ்வரனும் சுட்டுக் கொல் லப்பட்டார்.

### தண்ணவாளத்தில் பிணம்

இலங்கை தலைநகரான கொழும்பு நகரில் பம்பளப்பிட்டிய ரெயில் நிலையம் அருகே ரயில் தண்டவாளத்தில் அவர் பிணமாகக் கிடந்தார்.

அவர் உடல் குண்டுகளால் துளைக்கப்பட்டு இருந்தது. முகம் அடையாளம் தெரியாதபடி உருக்குலைந்து காணப்பட்டது.

16.7.1989 அன்று இரவு அவர் நடந்து சென்றபோது யாரோ பின்னால் இருந்து சுட்டுக் கொன்றிருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது.

### அடையாளம்

உமா மகேஸ்வரனின் உடல் கொழும்பு ஜெனரல் வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டது. உமா மகேஸ்வரனின் மனைவியும் சகோதரர்களும் உடலை அடையாளம் காட்டினார்கள்.

### இறுதி அஞ்சலி

அமிர்தலிங்கத்தின் மீது பற்றும் பாசமும் உடையவர் உமாமகேஸ்வரன்.

16.7 1989 அன்று காலை அமிர்தலிங்கம் உடல் மீது மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார். துயரம் தாங்காமல் கதறி அழுதார்.

அதற்கு சில மணி நேரத்துக்குப் பிறகு அவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.


அவர் வீட்டுக்குச் சற்று தொலைவில் தண்டவாளத்தில் கேட்பாரற்று கிடந்த உடலை பொலிஸார் எடுத்து வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர். அப்போது அவர் உமாமகேஸ்வரன் என்பது தெரியாது. மனைவி அடையாளம் காட்டிய பிறகு தான் தெரிந்தது.

### கொலைப்பட்டியல்

உமா மகேஸ்வரனின் கொலையை கண்டித்து ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எப்.) ஒரு அறிக்கை வெளியிட்டது.

இலங்கைத் தமிழர் தலைவர்களைப் படிப்படியாக அழிக்க சில சக்திகள் திட்டமிட்டு கொலை செய்யப்பட வேண்டியவர்களின் பட்டியலைத் தயாரித்து இருக்கிறார்கள்.

அந்தப் பட்டியலில் உள்ளவர்களை ஒவ்வொரு வராகக் கொலை செய்கிறார்கள் என்று அதில் கூறப்பட்டிருந்தது.



அமிர்தலிங்கத்தின் மனைவி மங்கையற்கரசி, அமிர்தலிங்கம், யோகேஸ்வரன்

(தொடரும்)

# புதிய தேசிய விவசாயச் சபையினை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்


## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

வருடாந்த வரவு செலவுத் திட்டத்தை தயாரிக்கும்போதும் விவசாயத்துறையுடன் தொடர்புடைய தீர்மானங்களை மேற்கொள்கின்றபோதும் விவசாய சமூகத்தின் கருத்துக்கள், முன்மொழிவுகளைப் பெற்று அவர்களின் நேரடிப் பங்களிப்பைப் பெற்றுக்கொள்ளும் வகையில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் ஒரு முன்மொழிவுக்கேற்ப புதிய தேசிய விவசாய சபையை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

எல்லா மாவட்டங்களினதும் விவசாய அமைப்புகளை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அச்சபையை அமைக்கவுள்ளதாகத் தெரிவித்த ஜனாதிபதி, திறைசேரி, விவசாய, நீர்ப்பாசன, மகாவலி அபிவிருத்தி அமைச்சுகளின் அதிகாரிகளினதும் பங்குபற்றுகையுடன் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை கூடும் அச்சபையில் நெல் கொள்வனவு, உரமானியம், உபகரணங்கள் கொள்வனவு மற்றும் சந்தைப்படுத்தல் போன்ற எல்லா விடயங்கள் குறித்தும் எடுக்கப்படும் தீர்மானங்களை வேறு எவரும் மாற்ற முடியாது என்பதோடு, அத்தீர்மானங்கள் கட்டாயமாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய விடயங்களாக சட்டமாக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

கடந்த 6 ஆம் திகதி பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில்



நடைபெற்ற தேசிய விவசாய மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார். (இ-5)

# தேசிய அரசில் 92 அமைச்சர்கள்

(கொழும்பு)

**தேசிய அரசாங்கத்தில் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களாக 92 பேர் நியமிக்கப்பட்டுள்ளதாக ஆளும தரப்பு பிரதம கொறடா அமைச்சர் கயந்த கருணாதிக நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.**

இதில் 47 கபினட் அமைசசர்கள், 20 இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் 25 பிரதி அமைச்சர்கள் அடங்குவதாகவும் அவர் தெரிவித்தார்.

புதிதாக மூன்று அமைச்சர்கள் நியமிக்கப்பட்டது தொடர்பில் மகிந்த தரப்பு அணியினர் சபையில் கேள்வி எழுப்பியிருந்தனர்.

இது தொடர்பில் ஏற்பட்ட சர்ச்சையின் போது, அமைச்சர்களின் தொகையை நேற்று முன்தினம் அறிவிப்பதாக நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ கூறியிருந்தார்.

பாராளுமன்றம் நேற்று முன்தினம் கூடியபோது இது தொடர்பில் ஐ.ம.சு.மு. பாராளுமன்ற உறுப்பினர் மகிந்த யாப்பா அபேவர்தன.கேள்வி எழுப்பினார்.

அமைச்சர்களின் தொகையை அறிவிப்பதாக அமைச்சர் ஒருவர் அறிவித்திருந்தார். அதன்படி அமைச்சர் தொகையை அறிவிக்குமாறு கோரினார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் கயந்த கருணாதிலக, தேசிய அரசாங்கம் என்பதால் இன்னும் சிலரை நியமிக்க முடியும்.

எதிர்ப்பக்கம் உள்ளவர்கள் அமைச்சு பதவி கோரி வருவதால் அமைச்சுப் பதவி வழங்குவது குறித்து மேலும் பேச்சுவார்த்தைகள் நடைபெறுகிறது.

யாப்பிற்கு உட்பட்டதாகவே அமைச்சர்களை நியமித்து வருகிறோம் என்றார்.

19 ஆவது திருத்தத்தினூடாக அமைச்சர்களின் தொகை மட்டுப்படுத்தப்பட்டது. ஆனால் தேசிய அரசாங்கம் அமைக்கப்படுகையில் அமைச்சு தொகையை அதிகரிக்க அனுமதிவழங்கப்பட்டிருந்தது.(இ-5)

# பொலிஸாருக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல்

எம்பிலிபிட்டிய பகுதியில் பொலிஸாருடன் ஏற்பட்ட மோதலில் சுமித் பிரசன்ன ஜெயவர்த்தன எனும் இளம் குடும்பஸ்தர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் 12 பொலிஸாருக்கு எதிராக குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக, தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் செயலாளர் ஆரியதாஸ குரே தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் குறித்து ஆராய தேசிய பொலிஸ்ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்ட குழுவினரே, குறித்த குற்றப் பத்திரிகையை தயாரித்துள்ளனர்.

எம்பிலிபிட்டிய பொலிஸ் நிலையத்தில் பணியாற்றிய 12 பேருக்கு எதிராகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# வீரவன்ச சோமவன்ச சமரசம்

(கொழும்பு)

ஜே.வி.பி. கட்சியின் முன்னாள் தலைவர் சோமவன்ச அமரசிங்க, முன்னாள் பிரசார செயலரும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவருமான விமல் வீரவன்சவுக்கு எதிராக தாக்கல் செய்திருந்த வழக்கு சமரசத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

ஜே.வி.பியில் இருந்து விமல் வீரவன்ச வெளியேறிய பின்னர் அவர் எழுதிய "நெத்த வெனுவட்ட அத்த" என்ற நூலுக்கு எதிராக அப்போதைய ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க 100 மில்லியன் ரூபாய் நட்டஈடு கோரி வழக்குத் தாக்கல் செய்தார்.

இந்நிலையில், வழக்கு விசாரணை இடம்பெற்றுக் கொண்டிருக்கும் நிலையில் அரசியல் ரீதியாக ஒன்றுபட்டு செயற்படும் இருவரும் தற்போது சமரசத்துக்கு செல்வதாக நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளனர். (இ-5)

# மகிந்தவுக்கு விஜேராமவில் உத்தியோகபூர்வ இல்லம்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு கொழும்பு 7, விஜேராம மாவத்தையில் உத்தியோகபூர்வ இல்லமொன்று வழங்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.பொதுநிர்வாக அமைச்சிற்கு சொந்தமான கட்டடம் ஒன்றே இவ்வாறு வழங்கப்பட்டுள்ளது.

விஜேராம மாவத்தை பீ 106 என்ற முகவரியைக் கொண்ட இல்லம் முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் பயன்பாட்டுக்காக வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்



துள்ளார்.

கடந்த 2015 ஆம் ஆணடு ஓகஸ்ட் மாதம் 28ஆம் திகதி முதல் இந்த இல்லம் முன்னாள் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளது என நாடாளுமன்றில் நேற்று முன்தினம் அமைச்சர் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனைத் தெரிவித்தார்.

எனினும், அரசாங்கம் முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்க வேண்டிய உத்தியோகபூர்வ இல்லத்தை இதுவரையில் வழ்ங்கவில்லை என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அண்மையில் குற்றம் சுமத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## இன்று ஒரு தகவல்

# கடன் தொல்லையா?

எதைப் பார்த்தாலும் அதை அடைய வேண்டும் அல்லது வாங்கி விட வேண்டும் என்ற ஆசை, திட்டமிடப்படாத பொருளாதாரக் கொள்கை, கடந்த காலம்–வருங்காலத்தைப் பற்றித் திட்டமிடாமல் நிகழ்காலத்தைப் பற்றி மட்டுமே கவலைப்படும் தன்மை, சிக்கனமின்மை, ஷோக்பேர்வழிகளின் பாதையில் போதல் ஆகிய தன்மைகளால் பணச்சிக்கல் ஏற்பட்டுத் திணறுவோர் பலர். நம்முடைய பொருளாதாரச் சிக்கல்களுக்கு நாமே பெரும்பாலும் காரணமாக இருக்கிறோம்.

ஒரு கடனை வாங்கும் போது அதைத் திருப்பிக் கொடுக்க திராணி இருக்கிறதா? என்று யோசிக்க வேண்டும். ஒரு வழி உண்மையில் இருக்கிறது என்று நம்பியே வாங்குகிறோம். ஆனால் தவறு எங்கே நடக்கிறது தெரியுமா? இருக்கிற அந்த ஒரே வழியும் எதிர்பாராத விதமாக அடைபட்டுப் போகிறது. ஆக, இந்த ஒருவழி போக மாற்றுவழி ஒன்றையும் ஏற்படுத்திக் கொண்ட பிறகே கை நீள வேண்டும்.

உரிய நேரத்தில் பணம் வராமல் போனால் கடன் கொடுத்தவரிடம் வலியச் சென்று காரணத்தைக் கூறிவிட்டு வரவேண்டும். ஒவ்வொரு முறையும் சளைக்காமல் செல்ல வேண்டும். இத்தகைய செயல் இவருக்குக் கடனைத் திரும்பக் கொடுக்கும் எண்ணம் இருக்கிறது. ஏதோ சூழ்நிலை காரணமாக முடியவில்லை பாவம் என்ற இரக்க எண்ணத்தைக் கடன் கொடுத்தவர்களுக்கு ஏற்படுத்தும். இத்தகைய எண்ணத்தை ஏற்படுத்தாமல் வீட்டில் இருந்து கொண்டே இல்லையென்று சொல்வது அல்லது பொய்யைக் கூறுவது அல்லது எரிச்சல் அடையும் வகையில் பதில் சொல்வது ஆகிய செயல்கள் இருக்கின்றனவே அவை கடன் கொடுத்தவர்களது நம்பிக்கையைக் குறைக்கின்றன. கடன் கொடுத்தவர்களைத் தொல்லை செய்யத் தூண்டுகின்றன. விபரீதச் செயல்களில் வேகத்துடன் இறங்க வழிவகுக்கின்றன.

யாருக்குக் கடன் இல்லை? நூற்றுக்குத் தொண்ணூற்று ஒன்பது பேருக்கு இருக்கிறது. ஆனால் அவர்களில் சிலர் நிம்மதியாக இருக்கிறார்கள். தொல்லைப் படுபவர்கள் பெரும்பாலும் மேற்கூறிய வகையினர் தாம்.

முடிந்த வரை வட்டியில்லாமல்–நட்புக்கும் அன்புக்கும் தரப்படுகின்ற கடன்களையே பெற வேண்டும்.

வாசலில் வந்து கத்துகிற–கோர்ட்டுக்கு இழுக்கிற–கடன்களை வலிய வந்தாலும் ஏற்கக்கூடாது. இத்தகைய கடன்கள் தொல்லைகளின் மறு வடிவங்கள்.

வட்டி குட்டி போட்டு பேரன், பேர்த்தி எடுத்துப் பெருகுகின்ற சூழ்நிலை உருவாகி விட்டால் எதையாவது விற்று அடைத்து விட்டு மறு வேலை பார்க்க வேண்டும்.

கடன் தொல்லையற்ற வாழ்வே முழு வாழ்வு!

லேனா தமிழ்வாணன்



# சிறுவர் அரங்கம்

1405

## இரும்பைத் தின்ற எறும்பு!



மாடசாமி ஒரு ஏழை விவசாயி. தனக்கிருந்த சிறிய நிலத்தில் விவசாயம் பார்த்து வந்தார். மாடசாமியின் மனைவி பார்வதியும் தன் கணவரோடு சேர்ந்து விவசாய வேலைகளைக கவனித்து வந்தார்.

மாடசாமியின் பக்கத்து வீட்டுக்காரன் குப்புசாமி. மகா கில்லாடி. கூசாமல் பொய் சொல்வார். எந்த வேலைக்கும் போகாமலேயே பிறரை ஏமாற்றிப் பிழைத்து வந்தார்.

யாரிடமாவது இரவலாக ஏதாவது ஒரு பொருளைக் கேட்டு வாங்குவார். இரவல் கேட்கும்போது, மிகவும் தயவாகப் பணிந்து கேட்பார்.

'அய்யோ பாவம்!' என்று யாராவது மனமிரங்கிக் கொடுத்து விட்டால், போச்சு அவ்வளவுதான். திருப்பி வாங்கவே முடியாது. பொருத்தமான பொய் ஒன்றைச் சொல்லி, தப்பித்து விடுவான்.

குப்புசாமியின் போக்குப் பிடிக்காமல் அவனது மனைவியும் பலமுறை சொல்லிப் பார்த்தாள். அவன் கேட்பதாயில்லை.

'நீயெல்லாம் ஒரு மனுசனா இதெல்லாம் ஒரு பொழப்பா?' என்று அவள்கோபித்துக்கொண்டு, தன் பிறந்த வீட்டுக்கே போய் விட்டாள்.

ஆனாலும், குப்புசாமி திருந்துவதாயில்லை.

ஊரில் மூன்று நாட்கள் மழை கொட்டோ கொட்டோவென்று கொட்டித் தீர்த்தது. எங்கும் ஒரே தண்ணீர்க் காடு.

விவசாயிகள் முகத்தில் பெரு மகிழ்ச்சி. அவரவர் தோட்டத்து வேலைகளை ஆர்வமாகச் செய்யத் தொடங்கினார்கள்.

குப்புசாமிக்கும் இருப்பு கொள்ளவில்லை. செலவுக்கும் கையில் காசில்லை. என்ன செய்வது? யோசித்தான். சட்டெனப் பக்கத்து வீட்டுக்கு ஓடினான்.

"ஏம்பா, மாடசாமி. என்னோட நிலத்தில தண்ணீ ரொம்பிக் கிடக்கு. வரப்பில இருந்த மரமெல்லாம் வேற விழுந்து போச்சு. கொஞ்சம் மண்வெட்டியும, கோடாரியும் கொடேன். சாயந்தரமா திருப்பித் தந்துடுறேன்!" என்று கேட்டான் குப்புசாமி.

இவனைப் பற்றித் தெரிந்திருந்த தால், கொடுக்கலாமா, வேண்டாமா என்கிற குழப்பத்தில் மாடசாமி இருந்தான்.


மாடசாமியைப் பார்வதி உள்ளே கூப்பிட்டாள்.

"ஏங்க, பாத்தா ரொம்ப பாவமா இருக்கு. ஏதோ அவசரத்துக்குக் கேக்கிறாரு. கொடுங்க" என்று மண்வெட்டியையும் கோடாரியையும் எடுத்துக் கொடுத்தாள் பார்வதி.

இரண்டையும்வாங்கிக்கொணட குப்புசாமி, "ரொம்ப நன்றிப்பா. நாளைக்கி திருப்பித் தர்றேன்" என்றான்.

ஒரு மாதமாகிவிட்டது. மண்வெட்டியையும் கோடாரியையும் குப்புசாமி திருப்பித் தரவேயில்லை. (தொடரும்)

### சதாம் உசேன்



சதாம் உசேன் அப்த் அல்-மஜித் அல்-திகரிதி 1937 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி பிறந்தார். ஈராக் நாட்டின் முன்னாள் ஜனாதபதியாவார். ஜூலை 16, 1979 இல இருந்து 2003 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 9 ஆம் திகதிவரை அமெரிக்க தலைமையிலான ஈராக படையெடுப்பு வரையில் இவர் அந் நாட்டின் ஜனாதிபதியாக இருந்தார்.

ஈராக்கின் பாத் கட்சியின் முக்கிய நபரான சதாம் 2 1968 இல் அக் கட்சி நடத்திய அதிகார கைப்பற்றலில் முக்கிய பங்கு வகித்தார். தனது நெருங்கிய உறவினரான ஜெனரல் அகமது பாக்கரின் கீழ் துணை ஜனாதிபதியாகப் பணியாற்றிய சதாம், அரசுக்கும் ஆயுதப் படைகளுக்கும் இடையேயான பிரச்சினைகளை கடுமையாக அடக்கி ஆண்டு, அரசு இயந்திரத்தின் மீதான தன் கட்டுப்பாட்டை வலுவாக்கிக் கொண்டார்.

ஜனாதிபதியாகப் பொறுப்பு வகித்த சதாம், யதேச்சாதிகார அரசை நடத்தினார். ஈரான்- ஈராக் போர் (1980-1988) மற்றும் பெர்சியக் குடாப் போர் (1991) நடந்த காலங்களிலும் அதிகாரத்தை தன் கைப் பிடியில் வைத்திருந்தார். இக்காலகட்டங்களில் ஈராக் மக்களின் வாழ்க்கைத் தரம் குறைந்ததோடு அவர்களின் மனித உரிமைகளுக்கும் பங்கம் ஏற்பட்டது. சதாமின் அரசு, விடுதலை அல்லது தன்னாட்சியை வலியுறுத்திய, இனம் அல்லது சமயம் சார் இயக்கங்களை மட்டுப்படுத்தியது.

மேலை நாடுகளிடம், குறிப்பாக ஐக்கிய அமெரிக்க மாநிலங்களிடம், அவர் காட்டிய எதிர்ப்பை மெச்சி, பல அரேபிய மக்கள் அவரை ஒரு பிரபலத் தலைவராகக் கருதினாலும், அனைத்துலக சமுதாயத்தினர் பலரும் அவரை சந்தேகக் கண்கொண்டே நோக்கினர். அதுவும் 1991 பெர்சிய குடாப் போருக்கு அடுத்து சில ஈராக் குழுக்கள் சதாமின் பாதுக்காப்பு படை குறித்த அச்சத்துடன் வாழ்ந்தனர்.

ஐக்கிய அமெரிக்க மாநிலங்கள் மற்றும் அதன் கூட்டாளிகள் இணைந்து மேற்கொண்ட 2003 ஈராக் போருக்கு பிறகு சதாமின் ஆட்சி கவிழ்க்கப்பட்டது. டிசெம்பர் 13, 2003 அன்று திக்ரித்துக்கு வெளியே உள்ள பாதாள அறை ஒன்றில் ஒளிந்திருந்த சதாமை அமெரிக்கப் படையினர் கைது செய்தனர். பல மனித உரிமை மீறல் வழக்குகள் தொடர்பாக இடைக்கால ஈராக் அரசு அமைத்திருக்கும் சிறப்பு நீதிமன்றத்தில் சதாம் விசாரிக்கப்பட்டார். நவம்பர் 5, 2006 இல் அவருக்கு தூக்குத் தண்ட னைத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

டிசெம்பர் 26, 2006 இல் சதாமின் மேன்முறையீடு நிராகரிக்கப்பட்டு மரணதண்டனை உறுதி செய்யப்பட்டது. டிசெம்பர் 30, 2006 உள்ளூர் நேரம் 06:05 மணிக்கு அவர் தூக்கிலிடப்பட்டார்.

04.2016
09

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1241 - மங்கோலியப் படைகள் போலந்து மற்றும் ஜேர்மனியப் படைகளைத் தாக்கி தோற்கடித்தனர்.
- 1413 - ஐந்தாம் ஹென்றி இங்கிலாந்து மன்னனாக முடிசூடினான்.
- 1865 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: ரொபேர்ட் லீ தனது 26,765 பேருடனான படைகளுடன் வேர் ஜீனியாவில் சரணடைந்ததில் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தது.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: நோர்வே, மற்றும் டென்மார்க் மீது ஜேர்மனி தாக்குதலைத் தொடுத்தது.
- 1953 - வார்னர் பிறதேர்ஸ் நிறுவனம் முதல் முப்பரி மாணத் திரைப்படமான "ஹவுஸ் ஒவ் வக்ஸ்" (House of Wax) இனை வெளியிட்டது
- 1959 - மேர்க்குரித் திட்டம்: ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது விண்வெளி வீரர்கள் ஏழு பேரின் பெயர்களை நாசா அறிவித்தது.
- 1984 - யாழ்ப்பாணம் அடைக்கல மாதா கோயில் இராணுவத்தினரின் றொக்கட் தாக்குதலுக்கு உள்ளானது.
- 1991 - ஜோர்ஜியா சோவியத் ஒன்றியத்திலிருந்து விடுதலையை அறிவித்தது.
- 1992 - முன்னாள் பனாமா ஜனாதிபதி மனுவேல் நொரியேகாவுக்கு ஐக்கிய அமெரிக்காவின் சமஷ்டி நீதிமன்றம் 30 ஆண்டுகால சிறைத் தண்டனை அளித்தது.
- 1999 - நைஜர் ஜனாதிபதி இப்ராகிம் மைனசாரா படுகொலை செய்யப்பட்டார்.
- **2003 - ஈராக்கை அமெரிக்கக் கூட்டுப் படையினர் கைப்பற்றினர். சதாமின் 24 ஆண்டுகால ஆட்சி முடிவுக்கு வந்தது.**

### பிறப்புகள

- 1968 - ஜெய் சந்திரசேகர், அமெரிக்க நடிகர்

### இறப்புகள்

- 1626 - சேர். பிரான்சிஸ் பேகன், ஆங்கில தத்துவவாதி (பி. 1561)
- 1959 - பிராங்க் லாய்ட் ரைட், அமெரிக்கக் கட்டடக் கலைஞர் (பி. 1867)

# இந்தியாவிலும் இலங்கையிலும் ஆபத்தான புகையிரதப் பயணம்



(கொழும்பு)


இந்தியாவையடுத்து இலங்கையிலும் புகையிரத பயணிகள் புகையிரதத்தில் எங்கு இடமுள்ளதோ அங்கும் அமர்ந்து பயணத்தை மேற்கொண்டுள்ள காட்சி பதிவாகியுள்ளது.

களனி - பியகம வீதியின் களுபாலத்தின் கீழ் கொள்கலன் பாரவூர்தியொன்று விபத்துக்குள்ளானதால் புகையிரத சேவைகள் தாமதமாகின.

குறித்த விபத்தினால் இரு புகையிரத பாதைகள் சேதமடைந்து, பிரதான புகையிரத சேவைகளின் போக்குவரத்தில் பாதிப்பு ஏற்பட்டன.

இதனால் புகையிர நிலையத்தில் புகையிரதத்திற்காக காத்து நின்றவர்கள் வேறு புகையிரதங்களில் ஏறி பயணத்தை தொடர்ந்ததை அவதானிக்க முடிந்தது.

இதேவேளை, இந்தியா, பங்களாதேஷ் போன்ற நாடுகளில் பயணிகள் இவ்வாறு புகையிரதத்தில் பயணித்ததை கடந்த காலத்தில் அவதானிக்கக் கூடியதாக இருந்தது, இந்நிலையில் கொழும்பில் இவ்வாறு புகையிரதத்தில் பயணிகள் ஆபத்தான முறையில் பயணித்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)



கொட்டடி கிராம அபிவிருத்திச்சங்கமும் கொட்டடி சனசமூக நிலையமும் இணைந்து நட்த்திய சர்வதேச மகளிர்தின நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இதன்போது நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட தேசிய சேமிப்பு வங்கி யாழ்.நாவலர் வீதிக்கிளை முகாமையாளர் திருமதி துஸ்யந்தி அருளானந்திற்கு நிலையத்தலைவர் லயன் கலாநிதி நா.தனேந்திரன் நினைவுப் பரிசினை வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

# வலயக்கல்வி அதிகாரிகளுக்கு தெரியாமல் இடம்பெறும் ஆசிரியர் இடமாற்றங்கள்

## கல்குடா வலயக்கல்விப்பணிப்பாளர் கவலை

மட்டக்களப்பு கல்குடா கல்வி வலயத்தில் ஆசிரியர்கள் அரசியல்வாதிகளால் இடமாறறம்செய்யப்பட்டுள்ளனர்.

கல்வி அதிகாரிகளைப் புறந்தள்ளி உருவெடுத்து வரும் இந்தப் போக்கு வலயத்தின் கல்வி நிலையில் பாதிப்பை ஏற்படுத்தும் என வலயக்கல்விப் பணிப்பாளர் சிறி கிருஷ்ணராஜா தெரிவித்துள்ளார்.

மொறக்கொட்டாஞ்சேனை தேவபுரம் கஜமுகன் வித்தியாலத்தின் பரிசளிப்பு நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கல்குடா கல்வி வலயம் ஊழியர் பற்றாக்குறை யினால் சிரமங்களை எதிர் கொ ண்டிருக்கின்றது. ஆயிரத்து 710 ஆசிரியர்கள் பணியாற்ற வேண்டியுள்ள இடத்தில் 1307 ஆசிரியர்கள் பணியாற்றி வருகின்றனர். இவர்களில் 80 வீதமானவர்கள் பெண்களாவர். இதில் 48 ஆசிரியர்கள் பிரசவ விடுமுறையில் உள்ளனர். இதனால் ஆசிரியர்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவி வருகிறது.

இந்தக்கல்வி வலயத்தில் 324 ஆண் ஆசிரியர்கள் உள்ளனர்.

பெண் ஆசிரியர்கள் கஷ்டப் பிரதேசங்களில் பணியாற்றுவதற்கு மறுக்கின்றனர். அநேகமான ஆண் ஆசிரியர்கள் நீண்ட காலமாக கஷ்டப்பிரதேசங்களில் பணியாற்றுகின்றனர். அவர்களை அந்தப் பிரதேசங்களிலேயே தொடர்ந்து பணியாற்றுமாறு விட்டுவிடுவது நீதியானது அல்ல.

சுற்று நிருபத்தின் பிரகாரம் ஆசிரியர் இடமாற்றம் அதிபர்கள் மற்றும் வலயக்கல்விப் பணிப்பாளர்கள் ஊடாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

எமது வலயத்தில் இடமாற்றம் தேவைப்படும் ஆசிரியர்கள் நேரடியாக அரசியல்வாதிகளிடம் செல்கின்றனர்.

வலயக்கல்வி அதிகாரிகளுக்குத் தெரியாமலேயே ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்படுகின்றார்கள். இது வலயத்தின் கல்வி அபிவிருத்தியில் எதிர்காலத்தில் மிகப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்று அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (3)

# சிறைச்சாலைகளில் கடும் இடநெருக்கடி; சந்தேகநபர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

இலங்கையின் பல பாகங்களிலும் காணப்படும் சிறைச்சாலைகளில் கடும் இடநெருக்கடி ஏற்பட்டுள்ள்தாக தெரிய வந்துள்ளது.

இலங்கை முழுவதும் உள்ள அனைத்துச் சிறைகளையும் ஒன்றிணைத்தால் சுமார் எட்டாயிரம் கைதிகளை அடைத்து வைக்கும் அளவுக்கே இடவசதி உள்ளது. கொழும்பில் உள்ள சிறைகளில் மட்டும் ஆயிரத்து ஐந்நூறு பேருக்கான இடவசதி உள்ளது.

எனினும் தற்போது சுமார் 18 ஆயிரம் வரையான் கைதிகள் இலங்கையின் பல்வேறு சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் சுமார் 7ஆயிரம் பேர் வரையானோர் கொழும்பில் உள்ள சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களாக கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகளின் எண்ணிக்கை அதிகரிப்பின் காரணமாகவே சிறைச்சாலைகளில் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது. (இ-5)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 687

வின் யக்ஷன்



நெய்மார் உஷாந்தன்





சர்மி சர்மிளா




அச்சு




தர்மசிலன்




ரூபன் லிங்கா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# இலங்கையின் யுத்தக்குற்ற விசாரணைக்கு வெளிநாட்டு நீதிபதிகள் தேவையில்லை!

## ஜனாதிபதியின் பிடிவாதம்–உடன்பாட்டை மீறும் அதர்மம்!

## தொடரும் "ஐ.நா.மனித உரிமை சபை" அமர்வுகள்:

ஜனாதிபதியவர்களுக்கு உள்ளூர் நீதிபதிகள் மீது நம்பிக்கையிருந்தாலுங்கூட தமிழ் மக்களின் நிலைமை அப்படியாக இல்லை, பொறிமுறையின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு வெளிநாட்டு நீதிபதிகளை அவர் வரவழைக்க வேண்டும் என்றே பிரேமச்சந்திரன் கூறுகிறார். பொறுப்புக்கூறலுக்கான பொறிமுறையில் வெளிநாட்டு நீதிபதிகளின் பங்களிப்பு இல்லையெனில் போரினால் பாதிப்பிற்குள்ளாகிய தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்காது என்றும் அவர் கூறுகிறார்.

கடந்த மாதத்திலுங்கூட இலங்கையின் போர் சம்பந்தமான பொறுப்புக்கூறல் விடயங்கள் மட்டில் நம்பகமான விசாரணை நடத்தப்பட வேண்டுமென ஐ.நா. மீண்டும் அறைகூவல் விடுத்திருந்தது. இலங்கையின் மேற்படி விசாரணைகளின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்தும் வழிகாட்டி நடைமுறைகள் எவையென ஐ.நா. தெளிவுபடுத்தியிருப்பதாக அதன் செயலாளர் நாயகத்தின் பிரதிப் பேச்சாளராகிய ஃபாஹென்ஹாக் கூறுகிறார். போர்க்குற்ற விசாரணைகளின் பின்னர் இடம்பெறும் நீதியியல் நடைமுறைகளில் வெளிநாட்டு நீதிபதிகள் சம்பந்தப்படுவதை தான் வரவேற்கப்போவதில்லை என்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினது அண்மைக் கால கூற்று பற்றி அவரிடம் எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலாகவே அவர் இவ்வாறு கூறியிருந்தார்.

"இது விடய சம்பந்தமாக நடைபெற்றுக் கொண்டிருப்பவை பற்றி பகுப்பாய்வினூடாக மதிப்பீடுகள் செய்துகொள்ள மனித உரிமைகள் சபையினால் முடியுமென்றாலுங்கூட இதுமட்டில் நம்பகமான விசாரணை மேற்கொள்ளப்படுவதை உறுதிசெய்து கொள்ளவே நாம் விரும்புகிறோம் என்பதுடன் மேற்படி விசாரணைகளின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கான வழிகாட்டி நடைமுறைகள்– எவையென நாம் அவர்களுக்கு தெளிவுபடுத்தியுமுள்ளோம் என்பதால் அது நடைமுறைப்படுத்தப்படுவது நிச்சயமாகும் வரை எமது உரையாடல்களும் தொடரும்" என்பதே அவரது கூற்றாக இருக்கிறது.

போர் விடயங்கள் சம்பந்தமான விசாரணைகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் போதே சர்வதேச ரீதியிலான பங்காற்றல் பற்றிய விருப்பத்துடன் அதுபற்றி தான் கருத்திற்கொண்டிருந்ததாக வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர கடந்த மாதத்தின் போது கூறியிருந்தார்.

"புதிய நீதிமன்றங்களூடாகவே நியாயமான பொறுப்புக்கூறலும் தமக்கான நீதியும் கிடைக்கும் என்ற உத்தரவாதம் உருவாகும் என்ற எதிர்பார்ப்பினையே பாதிக்கப்பட்ட மக்கள் கொண்டிருந்தார்கள் என்பதால் அதுவே நியாயமுமாகுமென்றே நான் எண்ணுகிறேன். அதனாலேயே இந்த விதமான சர்வதேச பங்காற்றல் ஒன்று குறித்து நாம் விருப்பத்துடன் கூடிய அக்கறை கொண்டிருக்கிறோம்" என வோஷிங்டனில் இடம்பெற்ற கருத்தமர்வொன்றின்போது சமரவீர குறிப்பிட்டுக் கூறியதாக 'றியூட்டஸ்' செய்தி கூறுகிறது.

இலங்கை மீதான ஐ.நா. தீர்மான வரைபில் சம்பந்தப்பட்ட முக்கிய காரணர்களாக இருக்கும் 'US, UK' ஆகிய தீவிர செயற்பாட்டு நாடுகளிரண்டுமே விசாரணைகளில் வெளிநாட்டு நீதிபதிகளின் பங்காற்றலை வலியுறுத்தி வருகின்றன. ஜெனிவாவிலுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கான அமெரிக்க தூதுவரான கெய்த் ஹார்பர் அண்மையில், "இலங்கையின் பொறுப்புக்கூறல் செயன்முறைகளில் வெளிநாட்டு நீதிபதிகளின் பங்காற்றல் இருக்குமானால் மட்டுமே இது நம்பிக்கைக்குரியதாயிருக்கும்" என்று கூறியிருந்தார்.

**விசாரணையின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கான வழிமுறை**

இலங்கையின் இறுதிப் போர் நடவடிக்கைகள் மட்டிலான அதன் உள்ளூர் பொறுப்புக்கூறல் செயன்முறைகளின் நம்பகத்தன்மையை நியாயமான முறையில் உறுதிப்படுத்துவதற்கு வெளிநாட்டு நீதிபதிகளின் தேவை அவசியமானதென பிரித்தானிய அரசாங்கமும் வலியுறுத்திக் கூறியுள்ளது. ஐ.நா. மனித உரிமை சபை தீர்மானத்தின்படி இலங்கையின் நீதியான பொறுப்புக்கூறல் பொறிமுறைகளில் பொதுநலவாய மற்றும் ஏனைய வெளிநாட்டு நீதிபதிகளுடன் வழக்காளிகள் மற்றும் குற்றவாளிகள் தரப்பு சட்டவாளர்கள் போன்றோரது பங்காற்றலின் முக்கியத்துவம் குறித்து வலி யுறுத்தப்பட்டிருப்பது பற்றி வெளிநாடுகள் மற்றும் பொதுநலவாய அமைப்பிற்குமான பிரிட்டிஷ் இராஜாங்க அமைச்சர் ஹியூகோஸ்வையல் பிரித் தானிய பாராளுமன்ற உறுப் பினர் குழுவொன்றுக்கு கடந்த ஒக்டோபரில் எழுதிய கடிதமொன்றில் சுட்டிக்காட்டியிருந்தார். இவ்விடயம் சம்பந்தமான பிரிட்டிஷ் அரசின் உறுதிப்பாட்டினையே அவர் மீண்டும் இங்கு பிரதிபலிக்கிறார்.



> **சண்டேலீடர்பத்திரிகையில் "இலங்கையின் யுத்தக் குற்ற விசாரணைக்கு வெளிநாட்டு நீதிபதிகள் தேவையில்லை; ஜனாதிபதியின்பிடிவாதம்-உடன்பாட்டைமீறும் அதர்மம்!" எனும் தலைப்பில் ஈஸ்வரன்ரட்ணம் எழுதிய அரசியல் கட்டுரையின் தமிழாக்கம்...**

தமிழர்கள் மற்றும் ஏனைய இலங்கையர்களும் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் அனைத்துக் கட்சி உறுப்பினர்களுக்குமே அவர் இவற்றைக் குறிப்பிட்டு எழுதியுள்ளார்.

நாட்டிற்கும் அதனது மக்களுக்குமான தனது சொந்த கடப்பாடுகளை பயனுள்ள விதமாக நடைமுறைப்படுத்தும் விதத்தில் இலங்கை அரசானது தனது உள்ளக நீதிச்சட்டங்களில் சீர்திருத்தம் மேற்கொள்ள வேண்டும் என்றே ஐ.நா. தீர்மானம் தெளிவாக சுட்டிக் காட்டி அறைகூவல் விடுக்கிறது. இச்சீர்திருத்தங்கள் மனித உரிமைகள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல்கள் போன்ற பல்வேறு சட்டவிரோத மற்றும் துஷ்பிரயோக நடவடிக்கைகளில் ஆகக்கூடுதல் பொறுப்பு வாய்ந்தவர்கள் மட்டில் குற்றவியல் விசாரணைக்கும் பொருத்தமான தண்டனைகளுக்கும் இடமளிப்பதாகவே இருக்கவேண்டும். அத்துடன் இந்நடவடிக்கைகள் மட்டில் இலங்கை அடையும் முன்னேற்றங்கள், குறைகள் பற்றிய மதிப்பீடுகளும் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகராலயம் 'OHCHR' மற்றும் ஐ.நா. மனித உரிமை சபையினூடாகவும் தொடர்ந்து மேற்கொள்ளப்படுவதுடன் அவதானிக்கப்படவும் வேண்டும்.

(முற்றும்)

-தமிழில்-யோகர்-

# மூத்தோர் பராமரிப்பின் சவால்களும் அதற்கான தீர்வுகளும்

கைதடி அரச முதியோர் இல்லத்தில் சிவராத்திரியை முன்னிட்டு அறிவியல் கருத்துப் பகிர்வுக்களம் ஒன்றின் முகவுரைகள் முகவரிகளாகக் கொள்கின்றன. மூத்தோர் பாரமரிப்பின் சவால்களும் அதற்கான தீர்வுகளும் என்ற தலைப்பு ஆர்வமேலீட்டில் மிகையாகிக் கொள்கின்றது. ஆர்வலர்களின் ஆக்கிரமிப்பில் கருத்துக்களம் விரிந்து கொள்கின்றது. அனைத்து வயதினரும் தமது கருத்துக்களை விதைப்பதற்காக நாற்காலிகளில் அமர்ந்து கொள்கின்றார்கள். குளிரூட்டப்பட்ட திரையரங்கின் மண்டபம் களைகட்டிக் கொள்கின்றது. இல்ல மூத்தவர் ஒருவரின் இறைதுதிப்பாடல் அனைவரின் சிந்தனைகளுக்கும் இறக்கைகளாகிக் கொள்கின்றது.

இலங்கையில் மூத்தோர் எண்ணிக்கை சனத்தொகையில் 2024 இல் 24 % ஆகப் போகின்றது. முதல் வார்த்தைகள் அனைவரையும் நிமிர்ந்து உட்கார வைக்கின்றது. மூத்தவர்கள் பராமரிப்பு முதியோர் இல்லங்களிலும் சமூகத்திலும் பெரும் சவாலாகவே உள்ளது என்ற கருத்துப்பகிர்வும் சூழலை நிரப்பிக் கொள்கின்றன. வாழ்வியலில் கூட்டுக்குடும்ப அமைப்பின் இடப்பெயர்வும் மூத்தோரின் அனுபவங்களை நாடும் வீதங்களில் வெறுமையும் குடும்பங்களில் வறுமையை ஏற்படுத்தி துயரங்களை இருப்பாக்கிக் கொண்டுவிட்டன. ஆக்ரோசமான கருத்து சிந்தனைப் பகிர்வுக்கு வந்தனையாக அமைந்து கொள்கின்றது.

மூத்தவர்கள் அறுபது வயதின் மேல் ஒரு கட்டத்தில் மரண பயத்திற்கு ஆட்படுகின்றார்கள். இதனால் குழப்படிக்காரர்களாக அவர்களுக்கு சிலகாலம் அமைகின்றது. பிடிவாதம், பயம், கோபம், வெறுப்பு இவையெல்லாம் இருப்புக்களாக அமைந்து விடுவதால் பொறுப்பில்லாதவர்கள் என வெறுப்பு வருகின்றது. இத்தகைய வளர்ந்த குழந்தைகளின் செய்கைகளால் பாரமரிக்க முடியாத நிலையில் குடும்பங்களிலிருந்து மூத்தோர் வெளியேற்றப்படுகின்றார்கள். இந் நிலையை கடக்கும் போது ஆத்மீகத்தில் நாட்டம் வந்து மற்றவர்களை திரும்பிப் பார்க்கச் செய்கின்றார்கள்.

முதியோர் இல்லங்களில் ஐந்து வருடத்திற்கு மேல் ஒரு முதியவரை பராமரிப்பதென்பது சவாலானது. அனைத்து உறவுகளும் அறுக்கப்பட்ட நிலையில் தேவையற்ற பொருட்களை எல்லாம் உடைமைகளாக்கிக் கொள்வதில் ஆசை வந்து விரக்தியில் வாழ்கிறார்கள்.

கோபப்படுபவர்களாகவும் தமது உறவுகளை தேடுபவர்களாகவும் காணப்படுகின்றனர். எவ்வளவு வசதிகள் ஏற்படுத்தினாலும் உறவைத் தேடுவதில் அவர்களின் நாட்டம் மிகையாகிக் கொள்கின்றது.

தேடலின் உச்சக்கட்டத்தில் மனநிலைபாதிப்புக்கள்வெளிக் கிளம்பிக் கொள்கின்றன. மூத்தோருக்கு மனநிலை பாதிப்புக்கள் ஏக்கங்களாகி சொந்தமாகிக் கொள்கின்றன. எழுபது வயதின் மேல் மனிதனின் வயது மீண்டும் ஒன்றிலிருந்து தொடங்கிக் கொள்கின்றது. குழந்தைப் பருவம் நடத்தையிலும் தோற்றத்திலும் வெளிப்படத் தொடங்குகின்றது. ஆனாலும் மூப்பு என்பது ஆப்பு அல்ல என்ற கருத்து சலசலப்பை அவையில் வரவழைத்துக் கொண்டது.

ஐம்பது முதல் அறுபது வயதுவரை ஒரு மனிதன் நேரிடையான எண்ணங்களை நிரப்பிக் கொள்வதன் மூலம் உடல், உள ஆத்மீக சமூக ரீதியில் ஆரோக்கியமான வாழ்வின் பயணத்தில் இணைந்து கொள்கின்றான். இதன் மூலம் ஆரோக்கியம் ஏற்பட்டு சுகமாக முதுமையடைய முடிகின்றது. சுகமான முதுமையால் மனிதர்கள் எத்தகைய சமூகத்திலும் தன்னை நிலைநிறுத்தி வாழக்கூடிய பக்குவத்தை பெறுகின்றான் என்பது சமூகவியல் ஆய்வுகளின் முடிவாகும். இந்நிலை கூர்ப்பில் நின்று நிலைக்கக் கூடிய சமூக வலுவூட்டலை ஏற்படுத்துகின்றது.

பிரச்சினைக்குரியவர்கள் என நினைக்கும் சில மூத்தவர்களை சமூகத்தில் அடக்கி வைப்பதற்கும் அவர்களின் உரிமைகளை மளுங்கடிப்பதற்கும் ஆயுதமாக சிலருக்கு பைத்தியம் என்ற பட்டம் சூட்டப்படுகின்றது. நூறு வீதம் நேர்மையானவர்கள் மாற்றுக்கருத்துக்களை அதிகம் கொண்டவர்கள், இந்த பகுதியில் சொந்தக்காரர்களாக இருக்கின்றார்கள். முதுமையில் ஊரோடு ஒத்தோட முடியாதவர்களின் இருப்பு கேள்விக்குறியாக இருக்கின்றது. இத்தகையவர்களுக்கு சில இடங்களில் குடும்ப உறுப்பினர்கள் பொறுப்புடன் காவல் காப்பவர்களாக இருக்கிறார்கள்.

முதுமை என்பது பழைய நினைவுகளை மீட்டுப்பார்க்கும் பருவம். சொன்ன விடயங்களை மீண்டும் சொல்லிக்கொள்ளும் நிலைமைகளை தாராளமாக தன்னகத்தே கொண்டது இந்தப்பருவம். மந்திபோல் குந்தி நடந்தாலும் முதுமையில் மனவலிமையும் மனமகிழ்வும் குறைவின்றி இருந்தால் இளமைப் பருவம் கூட வழிவிட்டு நிற்குமாம் கூறியபடி அட்டகாசமாக தனது வாயைத்திறந்து சிரித்துக் கொண்டார் வந்திருந்த ஒரு முதியவர். இத்தனை சவால்களுக்கும் எத்தனை தீர்வுகள் உண்டு?

இலங்கையில் 271 முதியோர் இல்லங்கள் இருக்கின்றன. 03 அரச முதியோர் இல்லங்கள் இருக்கின்றன. இலங்கையின் முதலாவது அரச முதியோர் இல்லமாக 1954 இல் கைதடி அரச முதியோர் இல்லம் உள்ளது. முதியோர் இல்லங்கள் அதிகரிக்கும் முதியோர் சனத்தொகைக்கு தீர்வு அல்ல. மூத்தோர்கள் சமூகத்தில் வைத்து பிள்ளைகளால் அல்லது உறவுகளால் பாதுகாக்கப்பட்டு பராமரிக்கப்பட வேண்டும்.

பதினொருபேர் இணைந்து முதியோர் சங்கம் உருவாக்கி முதியோர் பகல் நிலையம் என்ற பரிணாமத்தில் பல வசதிகள் ஏற்படுத்தும் செயற்பாடுகள் உள்ளன. தமது அனுபவங்களைபகிரவும்மனஉழைச்சலைப் போக்கவும் பகலில் ஒன்றுகூடும் நிலையமாக இது ஒவ்வொரு கிராமங்களிலும் அமைக்கப்படும் ஏற்பாடுகள் உள்ளன. மூத்தோருக்கான மாற்று வலுவுள்ளோர் பயன்படுத்தும் உபகரணங்கள் வறிய மக்களுக்கு சமூக சேவைத் திணைக்களத்தினால் வழங்கும் ஏற்பாடுகளும் உள்ளன.

சுயதொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத்திட்டம் மூலம் ஓய்வூதியர்களாக முதுமையில் மாறிக்கொள்ளும் ஏற்பாடுகள் உள்ளன. இவை எல்லாம் பிரதேச செயலகங்களில் சமூக சேவைகள் உத்தியோகத்தர் மற்றும் முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் என்பவர்களின் வழிகாட்டுதலில் அமுலாகிக் கொள்கின்றன.

மூத்தோர் பராமரிப்பு சேவைத் தொண்டர்களின் உருவாக்கம் எதிர்காலத்தில் தேவையுள்ளதொன்றாக அமையப்போகின்றது. வைத்திய சாலைப் பராமரிப்பு வீடுகளில் மூத்தோர் பராமரிப்பு என்பன கிராக்கியான தொழில்களாக இருக்கப்போகின்றன. மூத்தோர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க அல்லது குறைக்க முதியோர் பகல் நிலையங்கள் விளங்க வேண்டும் என்பதற்கான திட்டங்கள் முனைப்பாகியுள்ளன.

மூத்த பிரஜைகள் தமது எதிர்பார்ப்புக்களை நிறைவாக்கக்கூடிய விதத்தில் ஆலோசனைபெறும்மையமாக இன்று வடக்கில் அரச முதியோர் இல்லம் கைதடியில் செயற்படுகின்றது. மூத்தோர் பராமரிப்பில் உளவளத்துணை உடற்பயிற்சிகள், ஆத்மீக சுற்றுலாக்கள், அனுபவ பகிர்வுக் களங்கள் என்பன மைல்கற்களாக அமைகின்றன.

மூத்தோரிடத்தில் அன்பாகவும் பண்பாகவும் பேசுங்கள் அவர்களின் அனுபவங்களை பகிர்வதற்குரிய ஏற்பாட்டாளர்களாக, இருங்கள், மகிழ்வான நேரிடையான சிந்தனைகளை விதைப்பவர்களாக இருங்கள். தன்னம்பிக்கையும் சுய கௌரவமும் பேணுபவர்களாக இருங்கள். கருத்துக் களத்தின் பதிவுகள் என்னுள் கனதியாக இறங்கிக் கொள்கின்றன.



மூத்தோரின் மறதி, புரிந்து கொள்ளாமை, கோபப்படுதல் என்பன முதுமையில் சாதாரணமானவை. ஆனால் இவைநிலையானவை அல்ல. உடல் உறுப்புக்களின் செயல் இழப்புக்களின் வெளிப்பாடுகளாக இவை அமைந்து விடுகின்றன. சுகமான முதுமையடைதல் சுகமான மரணத்தையும் தந்துவிடும்.

பிறக்கும் போது பூமிக் காற்றுப்பட்டு வீரிட்டு அழும் குழந்தை வளர்ந்து இளமைப் பருவத்தை கடந்து முதுமையடைகின்றது. இந்த முதிர்ந்த மனிதன் வளர்ந்த குழந்தையாக வந்ததும் அழுதுதான் இறக்கவும் வேண்டுமா? நாங்கள் தான் தீர்மானிக்க வேண்டும். கலந்துரையாடலில் பங்குபற்றியவர் கணீர் என்ற குரலோசையில் தனது எண்ணங்களை பதிவாக்கிக் கொள்கிறார்.

2000 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க முதியோரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்டத்தின் நூல்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

அன்பான உணர்வுகளால் பண்பாக கோவில் கட்டி கோவிலின் மூலஸ்தானத்தில் மூத்தோரை இருத்தி முகாரி இராகங்களை நிறுத்தி காத்திரமான பயணத்தில் நாங்களும் ஒரு பாத்திரமாகி பத்திரமாக பயணிக்க வேண்டும்.

அன்பான வேண்டுகோள் இது! அர்ச்சிக்கும் வார்த்தைகள் கர்ச்சிக்கும் தோறணையில் கருத்துப் பகிர்வுக்களத்தின் முற்றுப்புள்ளிக்கு வித்திட்டுக் கொள்கின்றன.

**த.கிருபாகரன்**
அத்தியட்சகர்
அரச முதியோர் இல்லம்
கைதடி.

# செய்தித்துளிகள்

## வர்த்தக நிலையம் உடைத்து 50 ஆயிரம் ரூபாய் திருட்டு

(கரணவாய்)

கரணவாய் தெற்குப்பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்று உடைக்கப்பட்டு அங்கிருந்த ரூபா 50 ஆயிரம் பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

கடந்த புதன்கிழமை இரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் வர்த்தக நிலையத்தின் ஓட்டைப் பிரித்து உள்நுழைந்த திருடர்கள் பிஸ்கட்,பால்மா உள்ளிட்ட பெருமளவு பொருட்களைத் திருடிச் சென்றுள்ளனர்.

இது தொடர்பில் மறு நாள் நெல்லியடிப்பொலிஸில்முறையிடப்பட்டுள்ளது. (இ-60)

## உற்சவகால இசை சொற்பொழிவுகள்

புன்னாலைக்கட்டுவன் தெற்கு தாழையடி அருள் மிகு ஸ்ரீஅன்ன மகேஸ்வரர் திருக்கோயில் வருடாந்த அலங்கார உற்சவம் இன்று சனிக்கிழமை முதல் 20 ஆம் திக்தி புதன்கிழமை வரை பன்னிரு தினங்கள் நடைபெறும். இக்காலங்களில் தினமும் இரவு 8மணிக்கு நல்லைக்குருமணியின் பிரதம வாரிசு ''கானகதாவாரிதி'' பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்த சர்மா ''சிவலீலை'' பற்றி தெய்வீக தொடர் இசைச் சொற்பொழிவு நிகழ்த்துவார் என ஆலயப் பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர்.(இ

## கைத்தொலைபேசியை பறித்த மூவரில் ஒருவர் கைதானார்

ஒருவரைத் தாக்கி அவரிடமிருந்த கைத்தொலைபேசியைப் பறித்துச் சென்ற மூவரில் ஒருவரைக் கைது செய்துள்ளதாக நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த புதன்கிழமை இரவு வதிரிப் பகுதிக்கு சென்ற மூவர் கல்யாணத்தரகர், ஒருவரின் வீட்டில் அவரை வெளியில் கூப்பிட்டு அவரைத் தாக்கியதுடன் தொலைபேசியையும் பறித்துச் சென்றுள்ளனர்.

இது தொடர்பாக நெல்லியடிப் பொலிஸாருக்கு உடனடியாக அறிவிக்கப்பட்டதையடுத்து வதிரிப் பகுதியைச் சேர்ந்த 22வயதுடைய இளைஞரைப் பொலிஸார் கைது செய்தனர்.மற்றைய இருவரையும் பொலிஸார் தேடிவருகின்றனர். (இ-60)


## கல்வி நிலைய வேலி தீக்கிரையானது

மட்டக்களப்பு செங்கலடி நகரில் தனியார் கல்வி நிலையம் ஒன்றில் அமைந்திருந்த வேலி தீப்பற்றி எரிந்துள்ளது.

இரண்டு வகுப்புக்களைப் பிரிப்பதற்கு என அமைக்கப்பட்டிருந்த பொலித்தீனும் வேலியும் தீக்கிரையாகியுள்ளது.இது தொடர்பாக உரிமையாளரினால் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

உடனடியாக பொலிஸார் பொதுமக்களின் உதவியுடன் தீயை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர். (3)

## பொலிஸாருக்கிடையே பல்வேறு போட்டிகள்



(கரணவாய்)

புதுவருடத்தை முன்னிட்டு நெல்லியடிப் பொலிஸாரின் ஏற்பாட்டில் பொலிஸாருக்கிடையிலான பல்வேறு போட்டிகள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் நடைபெற்றது.

யானைக்கு கண் வைத்தல், கயிறு இழுத்தல்,கை மடித்தல்,மரதன்ஓட்டம்,கிரிக்கெட், விநோதஉடைப்போட்டி, தலையணைச் சண்டை என்பன நடைபெற்று பரிசில்களும் வழங்கப்பட்டன.(இ-60)

# வார பலன்கள்-08.04.2016-14.04.2016

### கற்பனைச் செறிவு மிகுந்த மேட ராசி அன்பர்களே!

***காரியங்கள் சிலவற்றில் தீவிர முயற்சியால் வெற்றி பெறுவீர்கள். சிக்கனமாக இருக்க நினைத்தாலும் செலவு அதிகரிக்கும்.***




உத்தியோகஸ்தர்களில் ஒரு சிலர் தாங்கள் பார்த்த வேலையை விட்டு விட்டு ஆதாயம் தரும் வேறு வேலைக்குச் செல்ல முடிவெடுப்பார்கள். சொந்தத்தொழில் செய்வோர் ஒருவரின் அவசரம் காரணமாக அவரது வேலையை உடனே செய்து முடிப்பீர்கள். கூட்டுத் தொழிலில் வியாபாரம் நன்கு நடைபெறும். எதிர்பார்க்கும் இலாபம் கிடைக்கலாம். பங்குச்சந்தை வியாபாரத்தில் சுமாரான இலாபம் ஏற்படும். கலைஞர்கள் பிரபல நிறுவனங்களில் இருந்து வரும் புதிய ஒப்பந்தங்களில் பங்குபெற வெளியூர் பயணங்களை மேற்கொள்ள நேரலாம். குடும்பத்தில் அவ்வப்போது சிறு சிறு பிரச்சினைகள் ஏற்பட்டாலும் நன்றாகவே நடைபெறும். பெண்கள் கவனமாக இருப்பது நல்லது. ஆஞ்சநேயருக்கு வெற்றிலை மாலை சூட்டி வழிபாடு செய்ய தடைகள் விலகும்.

---

### கவலைகளை மறந்து களிப்பு காட்டும் இடப ராசி அன்பர்களே!

***காரியங்கள் பலவற்றில் வெற்றி அடைவீர்கள். நீண்ட காலமாக எதிர்பார்த்த முக்கிய தகவல் வந்துசேரும்.***




உத்தியோகஸ்தர்களில் சிலருக்கு பதவி உயர்வும், சம்பள உயர்வும் கிடைக்கக்கூடும். மனஸ்தாபத்துடன் பிரிந்து சென்ற ஒரு அதிகாரி உங்களைத் தேடி வந்து பாராட்டுவார். சொந்தத்தொழிலில் முன்னேற்றமான சூழ்நிலை அமையும். புதிய வாடிக்கையாளர்களால் தொழில் ரீதியான முன்னேற்றமும் ஏற்படலாம். கூட்டுத்தொழில் நன்றாக நடைபெறும். புதிய கிளைகளை தொடங்க முயற்சிப்பீர்கள். பங்குச்சந்தையில் கணிசமான இலாபம் ஏற்படும். கலைஞர்கள், பிரபல நிறுவனத்தின் புதிய படைப்புக்கான ஒப்பந்தம் கிடைத்து மகிழ்வார்கள். சகக்கலைஞர்கள் எப்போதும் உறுதுணையாக இருப்பார்கள். குடும்பம் சீராக நடைபெறும். கடன் தொல்லைகள் தீரும். பூர்வீக சொத்துகளிலிருந்த வில்லங்கம் சரி செய்யப்பட்டு உங்கள் பங்கு வந்துசேர முயற்சிகளை மேற்கொள்வீர்கள். தட்சிணாமூர்த்திக்கு வியாழக்கிழமை வில்வ மாலை அணிவித்து வழிபடுவது புகழை உண்டாக்கும்.

---

### உறுதியான உள்ளம் கொண்ட மிதுன ராசி அன்பர்களே!

***எடுக்கும் காரியங்கள் சிலவற்றில் முயற்சியோடு முன்னேறுவீர்கள். மற்றவர்களிடம் பொறுப்புகளை ஒப்படைக்காமல் இருப்பது நல்லது.***




உத்தியோகஸ்தர்கள் தங்கள் வேலைகளில் கவனமாக இல்லாவிட்டால் தவறுகள் ஏற்பட்டு, மேலதிகாரிகளின் கோப பார்வைக்கு இலக்காக நேரலாம். சொந்தத்தொழிலில் வேலைப்பளு கூடும். புதிய வாடிக்கையாளர்களால் பொருளாதார உயர்வும் ஏற்படும். கூட்டுத்தொழிலில் முன்னேற்றமான போக்கை காண்பீர்கள். பங்குச்சந்தையில் எதிர்பார்க்கும் இலாபம் இருக்கும். புதிய பங்குகளை வாங்க முயற்சிப்பீர்கள். கலைஞர்கள் புதிய வாய்ப்புகள் கிடைக்கப்பெற்று, பணிகளில் உற்சாகமாக ஈடுபடுவார்கள். சிலருக்கு பயணத்தின் வாயிலாக இலாபம் உண்டாகக்கூடும். குடும்பத்தில் அமைதியான போக்குத் தென்பட்டாலும், சிறுசிறு பிரச்சினைகளும் வந்துபோகும். சகோதர வழியில் குடும்பச் சொத்துக்கள் மூலம் சிறு மனத்தாங்கல் ஏற்படக்கூடும். முருகப்பெருமானுக்கு செவ்வாய்க்கிழமை நெய் தீபமேற்றி வழிபட்டால், செல்வமும், சிறப்பும் தேடி வரும்.

---

### தெளிவான சிந்தனை கொண்ட கடக ராசி அன்பர்களே!

***நீங்கள் எடுக்கும் சில காரியங்களில் வெற்றியடைவீர்கள். எதிர்பார்க்கும் ஆதாயம் தாமதமாகக் கிடைக்கக்கூடும்.***




உத்தியோகத்தில் உள்ளவர்கள் உயர் அதிகாரிகளின் ஆதரவோடு சில சலுகைகளை பெறுவீர்கள். சிலருக்கு அலுவலகம் மூலமாக, எதிர்பார்க்கும் கடன் கிடைக்கலாம். சொந்தத்தொழில் பரபரப்பாக நடைபெறும். வாடிக்கையாளர்கள் விருப்பப்படி அவசரமான பணியை உடனடியாக செய்து கொடுக்க நேரிடும். கூட்டுத்தொழிலில் பணிச்சுமை கூடும். பங்குச்சந்தை வியாபாரம் சுமாராக நடைபெறும். கலைஞர்கள், தங்களைத் தேடிவந்த புதிய வாய்ப்புகளில் சுறுசுறுப்பாக ஈடுபடுவார்கள். பண வரவுகள் உற்சாகம் தருவதாக இருக்கும். குடும்பம் சீராக நடைபெறும். சிறுசிறு பிரச்சினைகளை சுலபமாகச் சமாளித்துவிடுவீர்கள். சகோதர வழி உறவுகளில் ஏற்படும் மனவேறுபாடுகள் பெரியோர்களின் தலையீடு காரணமாக சரியாகும்.

---

### ஆற்றல் மிக்கவராக செயறபடும் சிம்ம ராசி அன்பர்களே!

***கொடுக்கல், வாங்கலில் சிறு திருப்பத்தைச் சந்திக்க நேரிடும். ஆன்மிக பயணத்தால் மனசாந்தி பெறுவீர்கள்.***




உத்தியோகத்தில் இருப்பவர்கள், நாளை செய்யலாம் என்று தள்ளி வைத்த பணியை உடனடியாக செய்ய வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாவார்கள். சொந்தத்தொழில் செய்பவர்கள், சிரமத்தின் மூலமே காரியங்களைச் செய்து முடிக்க வேண்டியதிருக்கும். கூட்டுத்தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு, பணியாளர்களின் சுறுசுறுப்பால், வியாபாரம் நன்றாக நடைபெறும். பங்குச்சந்தை வியாபாரத்தில் சுமாரான இலாபம் ஏற்படலாம். கலைஞர்கள், மிகுந்த சிரமத்திற்கிடையே புதிய ஒப்பந்தங்களைப் பெறுவார்கள். சகக்கலைஞர்கள் மூலம் பிரபல நிறுவனங்களில் இருந்து வாய்ப்புகளைப் பெற முயற்சிப்பீர்கள். குடும்பத்தில் சிறுசிறு பிரச்சினைகள் இருந்து வரும். கடன்கள் தொல்லை தராது. நண்பர்களிடமும், உறவினர்களிடமும் சுமுகமாக நடந்துகொள்வது அவசியம்.

---

### கலை ஆர்வம் மிகுந்த கன்னி ராசி அன்பர்களே!

***வெள்ளி, சனி ஆகிய இரு தினங்களும் சந்திராஷ்டமம் உள்ளதால் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும்.***




உத்தியோகஸ்தர்கள் வேலை பார்க்கும் இடத்தில் கவனமாக இருப்பது நல்லது. சிலருக்கு எதிர்பாராத இடமாற்றங்கள் ஏற்படலாம். சொந்தத் தொழில் செய்பவர்கள் கவனமாக இருக்க வேண்டியது அவசியம். பொறுமையை கையாள வேண்டியது அவசியம். கூட்டுத்தொழில் சுமாராக நடைபெறும். புதிய திட்டங்களுக்கான பணவரவு தள்ளிப்போகும். பங்குச்சந்தை வியாபாரத்தில் வழக்கமான இலாபம் குறையாது. கலைஞர்கள், புதிய ஒப்பந்தங்களைப் பெற கடுமையாக போராட வேண்டியதிருக்கும். பழைய ஒப்பந்தங்களின் மூலம் சுமாரான வருமானம் வந்து கொண்டிருக்கும். குடும்பத்துக்கு தேவையான நவீன மின்னணு சாதனங்களை வாங்கிக் கொடுப்பீர்கள். அண்டை அயலாரிடம் சுமுகமாகப் பழகுவது நல்லது.

### நட்பைப் போற்றும் துலாம் ராசி அன்பர்களே!

***ஞாயிறு முதல் செவ்வாய் காலை 9 மணி வரை சந்திராஷ்டமம் உள்ளதால் சிறுசிறு தடைகள் தோன்றும்.***




உத்தியோகத்தில் உள்ளவர்களில் சிலருக்கு பதவி உயர்வும், சம்பள உயர்வும் கிடைக்கும். ஏமாற்றங்கள் விலகிச் செல்லும். சொந்தத் தொழில் செய்பவர்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கும். கூட்டுத் தொழிலில் வழக்கமான இலாபம் இருக்கும். பணப்பொறுப்பில் உள்ளவர்களை கண்காணிக்காவிட்டால் பிரச்சினைகளைச் சந்திக்க நேரலாம். பங்குச்சந்தை வியாபாரத்தில், இலாபம் சுமாராகவே காணப்படும். கலைஞர்களுக்கு பரிசும், பாராட்டும் வீடு தேடி வரும். புதிய ஒப்பந்தங்கள் கிடைத்து, அதில் சுறுசுறுப்பாக செயறபடுவார்கள். குடும்பத்தில் அவ்வப்போது ஏற்படும் கடன் பிரச்சினைகளை பெண்கள் தங்கள் சிறு சேமிப்புகளால் சரிசெய்து விடுவார்கள்.

---

### சிந்தித்து சிறப்பான முடிவெடுக்கும் விருச்சிக ராசி அன்பர்களே!

***செவ்வாய் காலை 9 மணி முதல் வியாழன் மதியம் 2 மணி வரை சந்திராஷ்டமம் உள்ளதால் தடை ஏற்படலாம்.***




உத்தியோகத்தில் இருப்பவர்கள், பணிகளில் கவனமாக இருப்பது பிரச்சினைகளைத் தவிர்க்கும். அலுவலகத்தில் செல்வாக்கு அதிகரிக்கும்.சொந்தத் தொழிலில் ஈடுபடுவோருக்கு, புதிய வாடிக்கையாளர் வருகையால் தொழில் ரீதியான முன்னேற்றங்கள் ஏற்படும். கூட்டுத்தொழில் வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருந்தாலும், வியாபாரம் நன்கு நடைபெறும். பங்குச்சந்தை வியாபாரம் சுமாராக நடைபெறும்.கலைஞர்கள், சகக்கலைஞர்களின் வாயிலாக புதிய வாய்ப்புகளைப் பெறுவார்கள். பணவரவு அதிகரிக்கும். குடும்பத்தில் அமைதியான சூழ்நிலை காணப்பட்டாலும், சிறுசிறு பிரச்சினைகளும் இருக்கும். தந்தை வழி உறவுகளில் நடைபெறும் மங்கல நிகழ்வுகளில் கலந்துகொள்வீர்கள். பேச்சுகளில் நிதானம் அவசியம்.

---

### தான தருமங்களில் ஈடுபாடு காட்டும் தனுசு ராசி அன்பர்களே!

***வியாழன் மதியம் 2 மணி முதல் சந்திராஷ்டமம் உள்ளதால் சில விடயங்களை செய்வதற்கு முன் திட்டமிடுதல் அவசியம்.***




உத்தியோகஸ்தர்கள், சக பணியாளர்களிடம் சுமுகமாக நடந்து கொள்வது நல்லது. தள்ளிவைத்த வேலையொன்றை உயர் அதிகாரிகளின் விருப்பப்படி உடனே செய்ய வேண்டியதிருக்கும். சொந்தத் தொழில் செய்பவர்கள், வேலைகளில் சுறுசுறுப்பாக ஈடுபடுவார்கள். பொருளாதார வசதி மேம்படும். கூட்டுத்தொழில் சிறப்பாக நடைபெற்று, எதிர்பார்க்கும் இலாபம் வந்துசேரும். பங்குச்சந்தை வியாபாரத்தில் முன்னேற்றமான சூழ்நிலை ஏற்படும். கலைஞர்கள் பிரபல நிறுவனத்தில் இருந்து வந்த அழைப்பை ஏற்று, பணிகளில் மகிழ்வாக ஈடுபடுவார்கள். கடின பணிகளில் நேரடியாக பங்கேற்பதை தவிர்ப்பது நல்லது. குடும்பம் சீரான முறையில் நடைபெறும். கடன் பிரச்சினைகள் இருக்காது. விலகி இருந்த உறவினர்கள் தங்கள் செயலுக்கு வருந்தி உங்களைத் தேடி வருவார்கள்.

---

### முன்னேறத் துடிக்கும் மனம் கொண்ட மகர ராசி அன்பர்களே!

***தீவிர முயற்சியால் சில காரியங்களில் வெற்றிபெறும் வாரம் இது. தளர்வடையும் காரியங்களில் நண்பர்களின் உதவியுடன் வெற்றி பெறுவீர்கள்.***




உத்தியோகஸ்தர்கள் செய்த சிறு தவறும் உயரதிகாரிகளின் பார்வையில் பெரிதாகத் தெரியும். எதையும் யோசித்துப் பேசுவது நல்லது. சொந்தத்தொழில் செய்பவர்கள், புதிய நபர் மூலம் பொருளாதாரத்தில் முன்னேற்றமும், தொழிலில் அபிவிருத்தியும் அடைவார்கள். கூட்டுத்தொழிலில் இலாபம் அதிகரிக்கும். பங்குச்சந்தை வியாபாரத்தில் இலாபம் பெற பொறுமை தேவை. கலைஞர்கள், கடுமையான முயற்சியின் பேரில் புதிய வாய்ப்புகளை பெறுவார்கள். எதிர்பார்க்கும் வருமானம் இல்லாவிட்டாலும், திருப்தி காணப்படும். குடும்பம் நன்றாக நடைபெற்றாலும், அவ்வப்போது சிறுசிறு பிரச்சினைகளும் ஏற்படலாம். விலை உயர்ந்த பொருட்களை பாதுகாப்பாக வைத்துக் கொள்வது அவசியம்.

---

### கம்பீரமான தோற்றம் கொண்ட கும்ப ராசி அன்பர்களே!

***செய்யும் பணிகளில் சிரமங்கள் இருந்தாலும், அதில் சிந்தனையோடு செயறபட்டு முன்னேறுவீர்கள். விரயங்களைத் தவிர்க்க விழிப்பு தேவை.***





உத்தியோகஸ்தர்கள் தங்கள் பணிகளில் கவனமாக இருந்தால், பிரச்சினைகளை தவிர்த்து விட முடியும். சக நண்பர் பணியையும் சேர்த்துச் செய்யும் நிலை ஏற்படலாம். சொந்தத் தொழிலில், உழைப்புக்கு ஏற்ற ஆதாயம் கிடைக்கும். கூட்டுத்தொழிலில் முன்னேற்றமான போக்கு காணப்படும். பங்குச்சந்தை வியாபாரத்தில் வழக்கமான இலாபம் குறையாது. கலைஞர்கள் புதிய ஒப்பந்தம் பெற்று மகிழ்ச்சி அடைவார்கள். எதிர்பார்க்கும் ஆதாயம் இல்லாவிட்டாலும், செய்யும் வேலையில் திருப்தி இருக்கும். குடும்பத்தில் ஏற்படும் சிறுசிறு பிரச்சினைகள், கடன் தொல்லை போன்றவற்றை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். வடதிசையில் இருந்து நல்ல தகவல் வந்து சேரலாம்.

---

### அறிவாற்றலுடன் செயற்படும் மீன ராசி அன்பர்களே!

***முயற்சிகளில் தீவிரமாக இருந்தாலும், எடுத்த காரியங்கள் சிலவற்றில்தான் முன்னேற்றமான பலன்கள் கிடைக்கும்.***




உத்தியோகஸ்தர்கள் சிலருக்கு, எதிர்பாராத இடமாற்றம் உண்டாகலாம். அலுவலகத்தில் இருந்த சிறுசிறு தொல்லைகள் மறையும். சொந்தத் தொழிலில் எதிர்பார்க்கும் முன்னேற்றம் காணப்படும். புதிய நபர்களின் அறிமுகம் இருக்கும். கூட்டுத்தொழில் வியாபாரம் நன்றாக நடைபெற்றாலும், இலாபம் சுமாராகவே காணப்படும். புதிய கிளை தொடங்க இது ஏற்ற காலமில்லை. பங்குச்சந்தை வியாபாரம் சுமாராக நடைபெறும். கலைஞர்கள் புதிய வாய்ப்புகளைப் பெற தீவிர முயற்சிகளில் ஈடுபடுவார்கள். வரவேண்டிய வரவுகள் தள்ளிப்போகும். குடும்பத்தில் அவ்வப்போது சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும், அவைகள் பெண்களால் சமாளிக்கப்படும். தாய்வழி சீதனங்கள் வீடுதேடி வரக்கூடும். இல்லத்தில் மங்கலகரமான ஒரு விடயம் முடிவாகும்.

**ஜோதிட 'சிம்மம்' கண்ணன்**

காலம் உண்மையைக் கண்டுபிடித்து உலகிற்கு வெளிப்படுத்தி விடும்.
- லத்தீன் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வடக்கு மாகாண சபை உறுப்பினர் எழுப்பிய நியாயமான கேள்வி

அரசியல் தீர்வுத்திட்ட வரைபு ஒன்றை வடக்கு மாகாண சபை நேற்றுமுன்தினம் சபையில் முன்வைத்து விவாதத்துக்கு விட்டுள்ளது.

குறித்த தீர்வுத்திட்ட முன்வரைபு தொடர்பிலான வாதப் பிரதிவாதங்கள் இனிமேல் நடைபெறவிருக்கின்ற நிலையில், இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்ட வரைபு ஒன்றை தயாரிக்க வேண்டும் என்ற முடிவுக்கு வடக்கு மாகாண சபை வருவதற்குக் காரணம் தமிழ் மக்கள் பேரவை என்பது மறுக்க முடியாத உண்மை.

தமிழ் மக்கள் பேரவை தீர்வுத்திட்ட வரைபு ஒன்றை முன்வைத்த நிலையில், விழிப்படைந்த வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் சிலர் நாங்களும் தீர்வுத்திட்ட வரைபு ஒன்றை முன்வைக்க வேண்டும் என நினைத்தனர்.

அவர்களின் முன்வருகை தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத்திட்டத்தை முறியடிப்பதாக இருந்த போதிலும் வடக்கு மாகாண சபையில் இருக்கக்கூடிய, தமிழ் மக்களின் மனநிலையை உணர்ந்த உறுப்பினர்கள் சிலர் கடுமையாகப் பாடுபட்டு தீர்வுத்திட்ட வரைபு ஒன்றை தயாரித்துள்ளனர்.

வடக்கு மாகாண சபையில் நேரத்தை விரயம் செய்து கொண்டிருந்த உறுப்பினர்கள் சிலர் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் தங்களோடு இருப்பதாகக் காட்டுவதற்காக தீர்வுத்திட்டம் ஒன்றை வடக்கு மாகாண சபையும் தயாரிக்க வேண்டும் என எடுத்த முடிவு இப்போது அரங்கத்துக்கு வந்துள்ளது.

இந்நிலையில் வடக்கு மாகாண சபையின் உறுப்பினரும் இலங்கை தமிழ் அரசுக் கட்சி சார்ந்தவரும் சபையில் நியாயத்தை துணிந்து எடுத்துரைப்பவருமாகிய அன்ரனி ஜெகநாதன் அவர்கள் வடக்கு மாகாண சபை தயாரித்த தீர்வுத்திட்டம் தொடர்பில் ஒரு நியாயமான கேள்வியை முன்வைத்துள்ளார்.

அதாவது குறித்த தீர்வுத்திட்டத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைகள் ஏற்றுக் கொள்ளுமா? என்பதே அவர் முன்வைத்த நியாயமான கேள்வியாகும்.

வடக்கு மாகாண சபை நிறைவேற்றிய தீர்மானங்கள் அனைத்தையும் அலட்சியம் செய்யும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு மாகாண சபை தயாரித்த தீர்வுத்திட்டத்தை மட்டும் ஏற்கப் போகிறதா என்ன?

ஆக, கூட்டமைப்பின் தலைமையின் முடிபு என்ன? என்பதை முதலமைச்சரும் அவைத் தலைவரும் அறிந்து சபைக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்றும் அன்ரனி ஜெகநாதன் கேட்டுள்ளார்.

இங்குதான் ஓர் உண்மை வெளிப்படுகிறது. அதாவது தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத் திட்டத்தை முறியடித்து வடக்கு மாகாண சபையும் தீர்வுத்திட்டம் ஒன்றை தயாரித்தது என்பதைக் காட்ட வெளிக்கிட்ட கூட்டமைப்புத் தலைமையின் இராஜதந்திரம் பிசுபிசுத்துப் போகிறது.

தமிழ் மக்கள் பேரவையில் இருந்து முதலமைச்சரை பிரித்தெடுக்கும் இராஜதந்திரமாக வடக்கு மாகாண சபையும் தீர்வுத்திட்டத்தை தயாரித்தாக வேண்டும் என நினைத்து அதை அரங்கேற்றியவர்களுக்கு, தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் அன்ரனி ஜெகநாதன் ஓர் உண்மையான–தெளிவான–நியாயமான கேள்வியை எழுப்பியமை பேரதிர்ச்சியைக் கொடுத்துள்ளது.

வடக்கு மாகாண சபையின் செயற்பாட்டை கூட்டமைப்பு அலட்சியம் செய்து வருகிறது. சபையை கூட்டமைப்பு மதிப்பதில்லை என்ற உண்மையை தமிழரசுக் கட்சி சார்ந்த வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஒருவர் பகிரங்கப்படுத்தியமை உண்மை நிலையை மக்கள் அறிவதற்கு உதவியாகவுள்ளது.

### ஓய்வுபெற்றுச் செல்லவுள்ள

## பொலிஸ்மா அதிபருக்கு நேற்று இராணுவ அணி வகுப்பு மரியாதை

பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்கக்கோனுக்கு நேற்று இராணுவத் தலைமையகத்தில் வைத்து இராணுவத்தினரின் விசேட அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டுள்ளது. பொலிஸ்மா அதிபர் இலங்கக்கோன் எதிர்வரும்வாரத்துடன்பொலிஸ சேவையிலிருந்து ஓய்வுபெற்றுச் செல்லவுள்ளார்.

இதனை முன்னிட்டு நேற்று அவருக்கும் இராணுவத் தளபதி கிரிசாந்த சில்வாவுக்கும் இடையில் சம்பிரதாயபூர்வ சந்திப்பொன்று நடைபெற்றது.

இதன்போது விசேட இராணுவ அணிவகுப்புடன் வரவேற்கப்பட்ட பொலிஸ்மா அதிபருக்கு இராணுவ த்தளபதி நினைவுச் சின்னம் அளித்து கௌரவித்துள்ளார்.

அதனையடுத்து இருவரும் சுமார் அரைமணி நேரம் வரையில் சம்பிரதாயபூர்வ கலந்துரையாடல் ஒன்றையும் மேற்கொண்டிருந்தனர்.

இராணுவத் தலைமையகத்திலிருந்து விடைபெற முன்னர் முக்கிய இராணுவ அதிகாரிகள் பலரும் பொலிஸமா அதிபருக்கு பிரியாவிடை அளித்துள்ளனர். (செ-12)

## இருவேறு இடங்களில் இரண்டு சடலங்கள் மீட்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஆறு மற்றும் வாவி ஆகிய பகுதிகளில் இருந்து அடையாளம் காணப்படாத இரண்டு சடலங்களை மீட்டதாக மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர். மட்டக்களப்பு நகரிலுள்ள வாவியொன்றில் நேற்று வெள்ளிக்கிழமை 20 வயது மதிக்கத்தக்க இளைஞன் ஒருவருடைய சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நேற்று முன்தினம் வியாழக்கிழமை மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பட்டிருப்பு - பெரிய போரதீவு பிரதான வீதியில் உள்ள பாலத்தின் கீழ் இருந்து மற்றொரு ஆணின் சடலத்தை மீட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். குறித்த சடலத்துக்கு அருகில் துவிச்சக்கர வண்டியொன்று இருந்ததாகவும் பாலத்தில் பயணிக்கும் போது, கீழேவிழுந்து குறித்த நபர் பலியாகியிருக்கலாம் என்றும் பொலிஸார் சந்தேகிக்கின்றனர். இரு சடலங்களும் இன்னும் அடையாளம் காணப்படவில்லை என்றும் சடலங்கள் இரண்டும் பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் களுவாஞ்சிக்குடி பொலிஸார் தெரிவித்தனர். (செ-12)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து **யாழ். பிரதேசத்தில** அம்பலவாணர் வீதி, உடுவில், ஆர்க் லேன், ஸ்ரீலங்கா பாடசாலை வீதி, இராமலிங்கம் வீதி, சோமணான் தோட்டம், சங்கத்தானை, மீசாலை, வங்களாவீதி, அல்லாரை, வெள்ளாம்பொக்கட்டி, கெற்பெலி, கச்சாய், பாலாவி, கச்சாய் துறைமுகம், அம்மன் கோவிலடி, புத்தூர் சந்தி, இராமாவில், கொடிகாமம், நாவலடி, வறணி, கரம்பைக் குறிச்சி, வாழைத்தோட்டம், வேமபிராய், மந்துவில், தாவளை, இயற்றாலை, கலைவாணி, மிருசுவில் வடக்கு, சுட்டிபுரம், குளப்பிட்டி, ஆனைக்கோட்டை சந்தி, யாழ் வீதி மானிப்பாய், ஆறுகால்மடம், கூழாவடி, ஆனைக்கோட்டை VC, நவாலி, மூத்தவிநாயகர் கோவிலடி, சென் பீற்றர்ஸ் தேவாலயம, அரசடி, அட்டகிரி, வேலக்கை, குளப்பிட்டி ஆனைக் கோட்டைவீதி, பள்ளத்தடி, சாவற்காட்டுசந்தி, வராகி அம்மன் கோவிலடி, காக்கைதீவு, அராலி வடக்கு, கிழக்கு மற்றும் தெற்கு, களுவாத்துறை வைரவர் கோவில் பிரதேசம், அராலி குலணை பிரதேசம், ஐயனார் கோவில் பிரதேசம், கோணாந் தோட்டம், சிவன்பண்ணை வீதியில் ஒரு பகுதி, கே.கே.எஸ் வீதியில் முட்டாசுக்கடை சந்தியிலிருந்து துரையப்பா விளையாட்டரங்கு வரை, யாழ்ப்பாணம் 1ம், 2ம், 3ம், 4ம் குறுக்குதெருக்களின் ஒரு பகுதி, செப்பல் வீதி, வேமபடி வீதியின் ஒரு பகுதி, யாழ். பிரதான வீதியில் துரையப்பா விளையாட்டரங்கிலிருந்து விஜிதா கபேவரை, இலங்கை தொலைத் தொடர்பு நிலையம, யாழ்பொது நூலகம், மாவட்ட நீதிமன்றக்கட்டத்தொகுதி, தேசிய நீர்வழங்கல் வடிகால் சபையன் பிராந்திய முகாமையாளர் அலுவலகம், இலங்கை மின்சாரசபையின் பிரதிப் பொதுமுகாமையாளர் அலுவலகம் ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில்** இரணைமடு, திருவையாறு, முறிகண்டி, நெடுங்கேணி, தண்டுவன், நெடுங்கேணி பலநோக்கு கூட்டுறவுச சங்கம், இறம்பைக் குளம், மருதோடை, மரயிலுப்பை, குளவிசுடடான், கற்சிலைமடு, முத்தையன்கட்டு, நெடுங்கேணி பலநோக்கு கூட்டுறவுச்சங்கம், மத்தியவங்கி, இரணைமடு விசேட அதிரடிப் படை இராணுவ முகாம், MAS Active, யுனிச்செலா, பொறியியல்பீடம், விவசாய பீடம், North Cargill's Agri foods, 651ஆவது படைப்பிரிவு முகாம், 652வது படைப் பிரிவு முகாம், இராணுவ பாசறை I, இராணுவ பாசறை I, இராணுவ பாசறை, 7ஆவது படையணி இராணுவ முகாம் ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில** குஞ்சுக்குளம், மாதாகிரமம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## ரூபா 78 ஆயிரம் பணம் உணவகமொன்றில் திருட்டு

### துவிச்சக்கரவண்டியில் வந்து துணிகரம்

உரும்பிராய் சந்திக்கு அண்மையாக கோப்பாய் வீதியில் உள்ள உணவகமொன்றில் நேற்று முன்தினம் பிற்பகல் 4 மணியளவில் திருட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இச்திருட்டுச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது,

குறித்த உணவகத்தை சம்பவத்தன்று உரிமையாளர் சொந்தத் தேவை கருதி மூடியுள்ளார்.

எனினும் மாலை 4 மணியளவில் கடையினை திறந்து ரூபாய் 78 ஆயிரம் ரூபாய் மற்றும் தனது மோட்டார் சைக்கிள் ஆவணங்கள் அடங்கிய கைப்பை ஒன்றை கடை யின் மேசையில் வைத்து விட்டு கடையின் பின்புறம் சென்றுள்ளார். கடையின் ஒரு கதவு மட்டும் திறந்த நிலையில் இருந்துள்ளது.

அதனை அவதானித்த திருடன் ஒருவன் கடையினுள் சென்று குறித்த பணம் மற்றும் ஆவணங்கள் அடங்கிய கைப்பையை திருடிக் கொண்டு தனது துவிச்சக்கர வண்டியில் செல்லத் தயாராகியுள்ள சமயம் கடையின் உரிமையாளர் மேசையில் தனது கைப்பையை காணாது பதட்டத்துடன் கடைக்கு வெளியே ஓடிவந்தபோது, அவரது கைப்பையுடன் நபர் ஒருவர் செல்வதை கண்டு திருடன் என்று சத்தமிட்டவாறு அவனது துவிச்சக்கர வண்டியின் பின் பக்கமாக இழுத்துள்ளார்.

எனினும் திருடன் அவரை தள்ளி விழுத்திவிட்டு துவிச்சக்கரவண்டியில் வேகமாக சென்று மறைந்துள்ளான். சிறிது நேரத்தின் பின்பு திருடன் சென்ற திசைபக்கமாக பலர் துரத்திச் சென்றும் திருடனை பிடிக்க முடியவில்லை.

அத்துடன் மாலை 6 மணியளவில் திருட்டுப்போன கைப்பை மட்டும் இராசா வீதிக்கு அண்மையாக தெருவோரம் மீட்கப்பட்டுள்ளது. கைப்பையினுள் மோட்டார் சைக்கிள் ஆவணங்கள் மட்டும் கிடைத்துள்ளன. எனினும் 78 ஆயிரம் ரூபாய் பணம் பறிபோயுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக உணவகத்தின் உரிமையாளரால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (செ-87)

## ரத்துபஸ்வல சூட்டுச் சம்பவத்தில் காயமடைந்தவர்களுக்கு இழப்பீடு

(கொழும்பு)

ரத்துபஸ்வல சூட்டுச் சம்பவத்தில் காயமடைந்த 33 பேருக்கு இழப்பீடு வழங்கும் நிகழ்வு ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி.அபேகோன் தலைமையில் நேற்று பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

இதற்கமைய குறித்த சம்பவத்தில் பூரண அங்கவீனமுற்ற, பகுதியளவில் அங்கவீனமுற்ற மற்றும் காயமடைந்து சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட கம்பஹா பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட 24 பேருக்கும் மஹர பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட 09 பேருக்கும் இழப்பீட்டுத் தொகையாக ரூபாய் 4.68 மில்லியன் வழங்கப்பட்டது.

ரத்துபஸ்வல சூட்டுச் சம்பவத்தில் காயமடைந்த பொது மக்களுக்கு நியாயம் வழங்கும் பொருட்டு ஜனாதிபதி விசேட கவனம் செலுத்தியதுடன், அது தொடர்பாக கண்டறிந்து தேவையான பரிந்துரைகளை சமர்ப்பிப்பதற்காக கம்பஹா மாவட்ட செயலாளரின் தலைமையில் குழுவொன்றும் நியமிக்கப்பட்டது.

இக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் இவ் இழப்பீடு வழங்கப்படுகிறது.

இழப்பீடுகள் வழங்கும் இந்நிகழ்வில் பங்குபற்றிய ஜனாதிபதி, இழப்பீடுகளை பெற்றுக் கொண்டவர்கள் மற்றும் வருகை தந்திருந்தவர்களுடன் சுமுகமாக கலந்துரையாடியதுடன் பாதிக்கப்பட்ட ரத்துபஸ்வல மக்களை சந்திப்பதற்காக மிக அண்மையில் அப்பிரதேசத்திற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேல் மாகாண முதலமைச்சர் இசுறு தேவப்பிரிய, இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்ணான்டோ புள்ளே, பாராளுமன்ற உறுப்பினர் அஜித் மன்னம்பெரும ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (செ-12)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



அனைத்து பாவங்களையும் அனைத்துத் தீமைகளையும் பலவீனம் என்ற ஒரு வார்த்தைக்குள் அடக்கி விடலாம். தீய செயல்கள் அனைத்திற்கும் இயக்கும் சக்தியாயிருப்பது பலவீனமே. தன்னலம் முழுதிற்கும் மூலமாயிருப்பது பலவீனமே. மனிதரைப் பிறருக்குத் தீங்கிழைக்கச் செய்வதும் பலவீனமே. தாங்கள் உண்மையில் எதுவாக இல்லையோ அதை வெளிப்படுத்தும்படி மக்களைச் செய்வதும் பலவீனமே.

இயற்கைக்கு அப்பால் செல்லப் போராடிக் கொண்டிருக்குமளவிற்கு மனிதன் மனிதனாகிறான். இந்த இயற்கை அகம் புறம் இரண்டுமாகும். புற இயற்கையை வெல்வது நன்மையும் மிகுந்த பெருமையும்தான். ஆனால் அக இயற்கையை வெல்வதோ அதைவிடச் சிறப்பு வாய்ந்தது. நட்சத்திரங்களையும் கிரகங்களையும் அடக்கியாளும் விதிகளை அறிவது பெருமையும் நன்மையும்தான். ஆனால் மக்களின் ஆசைகளையும் உணர்ச்சிகளையும் மனவலிமையையும் அடக்கியாளும் விதிகளை அறிவது அளவில்லாப் பெருமை தரும் ஒன்றே.

# சென்றலைட்ஸ் - ஜொனியன்ஸ்
# கிறாஸ் கொப்பர்ஸ்-திருநெல்வேலி சி.சி

## கால் இறுதியில் நாளை பலப்பரீட்சை













கே.சி.சி.சி. வெற்றிக்கிண்ணத்துக்கான கொக்குவில் மத்திய சன சமூக நிலைய விளையாட்டுக்கழகம் வருடாவருடம நடத்திவரும் கிரிக்கெட் போட்டியின் 3 ஆவது மற்றும் 4 ஆவது கால் இறுதிப்போட்டி நாளை 10 ஆம் திகதி கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

காலை 8.30 மணிக்கு நடைபெறும் 3ஆவது கால் இறுதிப்போட்டியில் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து யாழ். ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழகமும் பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறும் 4 ஆவது கால் இறுதிப்போட்டியில் கிறாஸ் கொப்பர்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து திருநெல்வேலி சி.சி.விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (கு)

SPORTS விளையாட்டுச் செய்திகள்

# புதிய விடியல் உதைபந்தாட்ட தொடர் அரையிறுதியில் நவஜீவன்ஸ் வி.கழகம்

புதிய விடியல் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் காலிறுதி ஆட்டம் இளவாலை புனித ஹென்றியரசர் பாடசாலை மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இப்போட்டியில் பலாலி விண்மீன் வி.கழகத்தினை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம் மோதியது. விறுவிறுப்பாக இடம்பெற்ற போட்டியில் போட்டி ஆரம்பித்து 5 ஆவது நிமிடத்தில் நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக முன்கள வீரன் சுரேஸ் (மன்னன்) தனது அணிக்கான முதலாவது கோலினை பதிவுசெய்தார்.

முதல் பாதி ஆட்டத்தில் நவ ஜீவன்ஸ் விளையாட்டுக்கழகத்தின் ஆதிக்கமே மேலோங்கி காணப்பட்டது. தொடர்ந்து 2 ஆவது பாதி ஆட்டத்தில் விண்மீன் விளையாட்டுக் கழகத்தினர் நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகத்தின் கோல் பிராந் தியத்திற்குள் தமது ஆதிக்கத்தினை செலுத்தி 63 ஆவது நிமிடத்தில் முதலாவது கோலினை போட்டனர். ஆனாலும் நவஜீவன்ஸ்விளையாட்டுக் கழகத்தினர் விண்மீன் விளையாட்டுக்கழக பின்கள வீரரின் விளையாட்டு பாணியை ஏமாற்றி 83ஆவது நிமிடத்தில் தனது அணிக்கான 2 ஆவது கோலினையும் சுரேஸ் நுட்பமான முறையில் பதிவு செய்ய ஆட்ட நேர முடிவில் நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழகம் விண்மீன் விளையாட்டுக் கழகத்தினை 2:1 என்ற ரீதியில் வெற்றி கொண்டு அரையிறுதி போட்டிக்கு முன்னேறியது. (கு)

## அரையிறுதியில் வீனஸ்

இமையாணன் மத்திய விளையாட்டுக்கழகம் நடத்திய மாபெரும் மென்பந்து சுற்றுப்போட்டியில் முதல் போட்டியில் மட்டுவில் அணியையும் இரண்டாவது போட்டியில் கொக்குவில் காமாட்சி அணியையும் காலிறுதியில் இமையாணன் இளைஞர் அணியையும் வெற்றி பெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளது பருத்தித்துறை வீனஸ் விளையாட்டுக் கழகம். (கு)

## இறுதிப்போட்டிக்கு தீபஜோதி தகுதி

வடமராட்சி சந்திரோதயம் விளையாட்டுக்கழகம் நடத்தும் மாவட்ட ரீதியிலான மாபெரும் கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் தீபஜோதி அணி இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது. இப்போட்டி அண்மையில் நடைபெற்றது. தீபஜோதி அணி பலம் வாய்ந்த சங்கானை அணியை எதிர்கொண்டு வெற்றி வாகை சூடியது. (கு)





கோப்பாய் பிரதேச செயலக விளையாட்டுக்கழகங்களுக்கிடையிலான கிரிக்கெட் போட்டியில் சம்பியனான ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகத்தினையும் இரண்டாம் இடத்தினை பெற்ற அச்சுவேலி முரசொலி விளையாட்டுக்கழகத்தினையும் படங்களில் காணலாம்.

# கே.சி.சி.சி. வெற்றிக்கிண்ணம் - 2016
# கிறாஸ்கொப்பர்ஸ் கால்இறுதிக்கு தெரிவு

கே.சி.சி.சி வெற்றிக்கிண்ணத் திற்காக கொக்குவில் மத்திய சன சமூக நிலைய விளையாட்டுக்கழகம் வருடாவருடம் நடத்தும் 34 பந்து பரிமாற்றங்களை கொண்ட துடுப்பாட்ட சுற்றுப்போட்டியில் 2 ஆவது சுற்றில் கிறாஸ்கொப்பர்ஸ் அணி பற்றீசியன்ஸ் அணியை 133 ஓட்டங்களால் வெற்றி பெற்று கால் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கிறாஸ்கொப்பர்ஸ் அணி 27 ஓவர்களில் 7 இலக்குகளை இழந்து 252 ஓட்டங்களைப் பெற்றது. டினோஸன்-85, மதுஸன்-28, கோகுலதாஸ்-24, அஜித்-39, சரண்ராஜ்-11, கபிலன்-16 , ரசிகரன்-16 ஓட்டங்களை பெற்றனர்.

நோபோட் -03, கவஸ்கர்- 02, இலக்குகளையும் சுபநேசன்-01 இலக்கினையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பற்றீசியன் அணி 24 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 119 ஓட்டங்களை பெற்றனர்.

டேவிட்-13, மனோத-13, கவஸ்கர்-14, ரதிஸ்-24 ஓட்டங்களை பெற்றனர். ஜெரோம்-02, மதுஸன்-01, அஜித், யசின் தன் தலா 3 இலக்குகளை கைப்பற்றினர்.



இப்போட்டியின் மூலம் யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் நடத்தும் தரவரிசை பட்டியலுக்கு கிறாஸ் கொப்பர்ஸ் அணி 7.85 புள்ளிகளையும் பற்றீசியன்ஸ் அணி 1.89 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டது. (கு)

## இன்றைய போட்டிகள்

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வல்வெட்டித்துறை நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் நடப்பு வருடத்துக்கான வல்லவன் கிண்ணத்துக்கான காற்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வல்வெட்டித்துறை நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடை பெற்று வருகின்றது. இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் போட்டியில் கரவைச் சுடர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து விண்மீன் விளையாட்டுக்கழகமும் மாலை 4 மணிக்கு நடைபெறும் போட்டியில் வவுனியா நோர்த் ஸ்டார் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து முல்லைத்தீவு சென்.யூட்ஸ் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளது. (கு)

# கமக்கார அமைப்புகளுடன் எழுதுமட்டுவாளில் நாளை சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

கமக்கார அமைப்புகளுடனான கலந்துரையாடல் ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு எழுதுமட்டுவாள் சிறிகணேசா வித்தியாலயத்தில் நடைபெறும்.

இக் கலந்துரையாடலில் உசன், கரம்பகம், விடத்தல்பளை, எழுதுமட்டுவாள் தெற்கு, வடக்கு, மிருசுவில் ஆகிய இடங்களைச் சேர்ந்த கமக்கார அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் விவசாயிகளையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

குளம், வாய்க்கால் புனரமைப்பு; தென்னை பயிர்ச் செய்கை, வீட்டுத்திட்டம் உள்ளிட்ட விடயங்கள் இக் கலந்துரையாடலில் ஆராயப்படவுள்ளதுடன் இந் நிகழ்வில் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனும் பங்குபற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

# தீராத இனப்...

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற 1956 எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கவின் மக்கள் புரட்சி சுதந்திர வெற்றியின் 60ஆவது ஆண்டு விழா நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

சிறிமாவோ பண்டாரநாயக்க அவர்கள் ஒருபோதும் அதிகாரத்தை முறைகேடாக பயன்படுத்தவில்லை என்பதுடன், ஊழல் மோசடி மற்றும் முறைகேடுகளை முழுமையாக ஒழிப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்ட அவரிடம் காணப்பட்ட பொறுமை, அர்ப்பணிப்பு, நேர்மை மற்றும் சவால்களின் முன் அஞ்சாது முன்னோக்கிச் செல்லும் விசேட பண்புகள் தற்போது அரசியலில் ஈடுபடும் அனைவருக்கும் முன்மாதிரியாக காணப்படுவதுடன், இது தற்போது அத்தியாவசியமான ஒரு விடயமாக காணப்படுவதாக ஜனாதிபதி குறிப்பிட்டார்.

பண்டாரநாயக்க அம்மையார் நாட்டுக்காக மேற்கொண்ட வரலாற்றுப் பெறுமதிமிக்க கடமைப் பொறுப்பானது அப்போது இருந்த தேவைகளுக்கமையவும் சர்வதேச ரீதியிலும் மிக முக்கியமானதாக காணப்பட்டதாக தெரிவித்த ஜனாதிபதி நாட்டில் ஏற்பட்ட அரசியல் பிரச்சினைகளின் போது நாட்டுக்காகவும் கட்சிக்காகவும் அன்னார் கண்ணீர் சிந்திய சந்தர்ப்பங்களை தனது அரசியல் அனுபவங்களில் காணமுடிவதாக தெரிவித்தார்.

மேலும் நீண்டகாலமாக தொடர்ந்திருந்த கொடிய யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ள இந்த சூழ்நிலையில்,

இனப்பிரச்சினைக்கு இப்போதும் தீர்வு காணப்படாவிடின் எதிர்காலத்தில் நாட்டை பிரிப்பதற்கான ஆயுதம் தாங்கிய கிளர்ச்சிகள் தலைதூக்கும். எனவே இனப்பிரச்சினைக்கு நாம் விரைந்து தீர்வு காணவேண்டியது அவசியம் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் அரசாங்கம் நடத்துவதற்கு உடன்படிக்கையை செய்து கொண்டு வழிகாட்டியவர் மகிந்த ராஜபக்ஷவே ஆவர்ர் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

தொடர்ந்து ஜனாதிபதி உள்ளிட்ட குழுவினர் சிறிமாவோ பண்டாரநாயக்க அம்மையாரின் உருவச்சிலைக்கு மலர் அஞ்சலி செலுத்தியதன் பின்னர் நினைவுதின வைபவம் ஆரம்பிக்கப்பட்டது.

சிறிமாவோ நூலின் சிங்கள, தமிழ் பிரதிகள் சுனேத்திரா பண்டாரநாயக்கவினால் இதன்போது ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டதுடன், சிறிமாவோ பண்டாரநாயக்க இணையத்தளம் ஜனாதிபதியால் ஆரம்பித்து வைக்கப் பட்டது.

சிறிமாவோ பண்டாரநாயக்க அம்மையாரின் நூற்றாண்டு ஜனன தின வைபவத்திற்காக வெளியிடப்பட்ட நினைவு முத்திரையினை ஜனாதிபதியிடம் கையளிக்கும் நிகழ்வும் இங்கு இடம்பெற்றது.

சிறிமாவோ பண்டாரநாயக்க அம்மையாரின் நூற்றாண்டு ஜனன தின வைபவத்துடன் இணைந்ததாக நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கு ஜனாதிபதி பரிசில்களை வழங்கிவைத்தார்.

மகா சங்கத்தினர் உள்ளிட்ட சர்வமதத் தலைவர்கள், சபாநாயகர் கரு ஜயசூரிய உள்ளிட்ட அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, சுனேத்ரா பண்டாரநாயக்க, பண்டாரநாயக்க குடும்ப அங்கத்தவர்கள் மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆதரவாளர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (செ-12)

# இராணுவப்...

தெரிவித்து நேற்றையதினம் பொது மக்களால் முற்றுகை போராட்டம் ஒன்று திருநெல்வேலி பலாலி வீதியில் அமைந்துள்ள பிரதேச நில அளவைத் திணைக்களத்தின் முன் முன்னெடுக்கப்பட்டது.

அதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்களுக்கு சொந்தமான நிலங்களை அளந்து இராணுவத்துக்கு வங்கும் செயற்பாட்டை அரசு முன்னெடுத்து வருகிறது. குறிப்பாக யாழ்.மாவட்டத்தின் கடலோரமாக இருக்கும் பகுதிகளை கடற்படையினர் மற்றும் இராணுவத்தினருக்காக சுவீகரிக்கும் முயற்சிகளை இந்த அரசு எடுத்திருப்பது ஒரு நல்லாட்சியின் வெளிப்பாடா என மக்கள் கேள்வி கேட்கும் அளவு கடினமான செயற்பாட்டை அரசுசெய்து வருகிறது.

தமிழர்களுக்கு நல்ல மாற்றம் வரும் என எதிர்பார்த்திருந்த சூழலில் அரசு இவ்வாறு நடந்து கொள்வது அபாயகரமான செயற்பாடு ஆகும். இது வெளிப்படையான அபகரிப்பு. சிங்களம் பௌத்தம் என்ற சிந்தனையில் இருந்து மாறாமல் தமிழ் மக்களின் நிலங்களை அபகரித்து அந்த இடங்களில் இராணுவ முகாம்களை பலப்படுத்துவதோடு தொடர்ந்தும் இராணுவத்தின் பிடிக்குள் மக்களை வைத்திருக்க இந்த அரசு முயற்சிக்கிறது என்றார்.

தமிழ் தேசிய கூட்டமைப்பினால் ஏன் இன்னும் இவ்வாறான செயற்பாடுகளுக்கு அரசிடம் இருந்து தீர்வுகாண முடியவில்லை என ஊடகவியலாளர்களால் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போது,

நாங்கள் மத்திய அரசில் பங்காளிகள் அல்ல மத்திய அரசில் ஒத்துழைப்பு வழங்குபவர்களும் இல்லை இது ஒருதவறான எண்ணம் என நான் கருதுகிறேன்.

ஒரு எதிர்க்கட்சியாக பாராளுமன்றில் இருக்கிறோம். இனம் சார்ந்த கட்சியாக நாங்கள் பாராளுமன்ற நடைமுறைகளுக்கு அமைய அந்த பொறுப்புக்களை வகிக்கிறோமேதவிர அரசாங்கத்துக்கு ஒத்தூதுபவர்கள் இல்லை.

தமிழ் மக்களின் 70 ஆண்டுகால இனப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் எமது நல்லெண்ணத்தை பல தடவைகள் வெளிப் படுத்தியுள்ளோம். அந்த நல்லெண்ணங் களை வெளிப்படுத்தும் போதெல்லாம் அதை குழப்புகின்ற நடவடிக்கையில் அரசு ஈடு பட்டுவந்துள்ளது.

இன்று சமாதானத்தை பற்றி பேசுகின்ற பொழுது தமிழ் மக்களுடைய பிரச்சினைக்கு தீர்வுகாணபுதிய அரசியலமைப்பு தீர்வுத்திட்டங்கள் கொண்டுவரப்படுகிறது என்று சொல்லப்படுகின்ற நிலையிலும் அரசு இவ்வாறான நிலங்களை அபகரித்தல், இராணுவத்துக்கு நிலங்களை சேகரித்தல்,அதனை விடபல திணைக்களங்களின் தலைவர்களாக சிங்களவர்களை நியமித்தல், விகாரைகளை அமைத்தல், புத்த சிலைகள் அமைத்தல் போன்ற செயற்பாடுகளை செய்துவருகின்றது.

வெளிப்படையாகவே சமாதானத்தை குலைக்கும் செயற்பாடுகளை மேற்கொண்டு அதை மீண்டும் தமிழ் மக்களுடைய தலையில் போட்டு அவர்கள் தான் சமாதான த்தை குழப்புகிறார்கள் எனும் செய்தியை கொண்டு வரமுயற்சிக்கிறார்கள். ஆனால் இந்தமுறை அவர்களின் திட்டம் எடுபடாது மக்கள் தெளிவாகவும் நிதானமாகவும் உள்ளார்கள் .

நாங்கள் நல்லெண்ணங்களை வெளிப்படுத்துகிறோம் அதை சரியான முறையில அரசு பயன்படுத்த தவறினால் வரலாறு அவர்களுக்கு நல்ல மாற்றத்தை அல்லது அவர்களுக்கான வரலாற்றின் பாதையைபுரிந்து கொள்ள வேண்டியநிலை ஏற்படும் என மேலும் சிறிதரன் மேலும் தெரிவித்தார்.(செ 9)

# கடற்பரப்பில் கைதான 11 பேருக்கு தலா 1 இலட்சம் ரூபா ஆட்பிணை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை கடற்பரப்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட புத்தளம் வென்னப்புவ பகுதியை சேர்ந்த 11 பேரையும் தலா 1 லட்சம் ரூபாய் ஆட்பிணையில் செல்ல பருத்தித்துறை நீதவான் நீதிமன்றபதில் நீதவான் பா.சுப்பிரமணியம் நேற்றையதினம் உத்தரவிட்டுள்ளார்.

பருத்தித்துறை கடற்பரப்பில் கடந்த புதன் கிழமை ஒரு பெரிய படகு மற்றும் இரண்டு சிறிய படகுகளுடன் சந்தேகத்துக்கிடமான முறையில் சென்ற 11 பேரை இலங்கை கடற்படையினர் கைது செய்து காங்கேசன்துறைக்கு கொண்டு செல்லப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டனர்.

மேலதிக விசாரணைக்காக யாழ்.கடற்தொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகளிடத்தில் ஒப்படைக்கப்பட்டபோது குறித்த சந்தேகநபர்கள் புத்தளம் வென்னப்புவ பகுதியை சேர்ந்தவர்கள் என்றும் அவர்கள் பயணித்த பல நாட்கலனில் 30 சிலிண்டர்கள் மட்டுமே காணப்பட்டதாகவும் மீன்பிடிப்பதற்கான வேறு உபகரணங்கள் எவையும் இல்லை என்றும் பலநாட்கலனின் பதிவுச்சான்றிதழ் இல்லை என்றும் மீன்பிடி அனுமதிப் பத்திரம் மற்றும் சிறிய படகுக்கான பதிவுகள் இல்லை என்றும் விசாரணையின் போது தெரியவந்ததை அடுத்து இவர்கள் நேற்றையதினம் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

நீதவான் இவர்கள் 11 பேரையும் தலா ஒரு லட்சம் ரூபாய் ஆட்பிணையில் செல்ல அனுமதித்ததுடன் குறித்த வழக்கினை எதிர்வரும் 11ஆம் திகதிக்கு ஒத்தி வைத்துள்ளார். (செ-9)

# கார் மோதியதில் சிறுமி படுகாயம்

(யாழ்ப்பாணம்)

மைதானத்தில் விளையாடிவிட்டு வீதியினூடாக வீடு திரும்பிக் கொண்டிருந்த முன்பள்ளி சிறுமி மீது வேகக் கட்டுப்பாட்டை இழந்த கார் மோதியதில் அச் சிறுமி படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்று மாலை 6.00 மணியளவில் அராலி வீதி வசந்தபுரம் பொம்மை வெளிப்பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் அதே பகுதியினை சேர்ந்த ராஜ் மோகன் அபி (வயது5) என்ற முன்பள்ளி சிறுமியே படுகாயமடைந்தவராவார்.

காயமடைந்த சிறுமி உடனடியாக சங்கானை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவ் விபத்து தொடர்பாக பொலிசார் விசா ரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் (செ-30)

# வவுனியா...

புகையிரதம் சம்பவ இடத்தில் நிறுத்தப்பட்டு இறந்தவரின் சடலம் புகையிரத்தில் ஏற்றி வவுனியா புகையிரத நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டதன் பின்னர் புகையிரதம் யாழ்ப்பாணம் நோக்கி புறப்பட்டிருந்தது.

இதேவேளை இச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை வவுனியா பொலிஸார் முன்னெடுத்துள்ள நிலையில் சடலம் வவுனியா பொது வைத்தியாசலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (செ-250,281)

## மரண அறிவித்தல்

## இராமலிங்கம் சபாரட்ணம்



உரும்பிராய் கிழக்கை பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் சபாரட்ணம் (08.04.2016) நேற்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம்-அருளம்மா தம்பதிகளின் மகனும் சீதாலட்சுமியின் அன்புக் கணவரும் மோகனதாஸ், குகனதாஸ், கமலதாஸ், கௌரி, காலஞ்சென்ற லோகபூமி ஆகியோரின் தந்தையும், சிறிகரன், காஞ்சனாவின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான நாகம்மா, ராசம்மா, ரத்தினம் மற்றும் ஐயம்பிள்ளை, சின்னராசா ஆகியோரின் சகோதரரும் அபினேஷ், அபிநயா, மகஷ்வின், அஸ்வின் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10-04-2016) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கொட்டைக்காடு வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

தகவல்:
குடும்பத்தினர்

(4168)

## யானை தாக்கி...

உயிரிழந்தவராவார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

தனது வயலில் வேலையில் ஈடுபடச்சென்ற வேளை அவரை யானை தாக்கியதில் அவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக வவுனியா பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டு பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டள்ளது. (செ-2-28)

## பாம்பு தீண்டியதில்...

யரே உயிரிழந்தவராவார்.

இச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

பிரஸ்தாப நபர் அதிகாலை எழுந்து வீட்டின் பின்புறமாக சென்ற வேளை பாம்பு தீண்டியுள்ளது.

உடனடியாக அவர் முல்லைத்தீவு மாஞ்சோலை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டபோதும் செல்லும் வழியில் அவரது உயிர் பிரிந்துள்ளது.

சடலமானது பிரதே பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (செ-2-28)

## ஆணைக்குழு முன்...

றுக் கொள்வதற்காக இவ்வாறு அவர் அழைக்கப்பட்டிருந்ததாக ஆணைக்குழுவின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

விமான படைக்குச் சொந்தமான விமானங்களில் பயணம் செய்து பணம் செலுத்தவில்லை என பசில் ராஜபக்ஷ மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

முன்னதாக இது தொடர்பான இந்த விசாரணைகளில் பங்கேற்குமாறு பசில் ராஜபக்ஷவின் மனைவிக்கு அழைப்பு விடுக்கப்பட்ட போதிலும் நேற்று முன்தினம் அவர் விசாரணைகளில் பங்கேற்றிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (செ-12)

## அடையாளத்தை...

மூதூர் கிழக்கைச் சேர்ந்த பூர்வீக பழங்குடியின மக்கள் நேற்று முன்தினம் 7ஆம் திகதி சந்தோஷபுரம் சிவசக்தி வித்தியாலயத்திற்கு முன் தமது கவனயீர்ப்பை நடத்தி கையெழுத்து எடுக்கபட்ட கடிதம் ஒன்றையே நேற்று அனுப்பி வைத்துள்ளனர்.

அக் கடிதம் பின்வருமாறு,

ஜனாதிபதி அவர்களின் மேலான கவனத்திற்கு.

இலங்கைத் தீவில் வாழும் பூர்வீக பழங்குடிகளான நாங்கள் இயக்கர் நாகர் வழிவந்த வழித்தோன்றல்களாகக் எம்மைக் கருதுகிறோம். எம்மில் ஒரு பிரிவினர் மகியங்கனையை அண்டிய பகுதிகளில் ஒரு பிரிவாகவும் நாம் வாகரை, வெருகல் மற்றும் மூதூரை அண்டியும் சுமார் 35 கிராமங்களை உள்ளடக்கிய பகுதியிலும் வாழ்ந்து வருகின்றோம். எமக்கான பூர்வீக மொழி ஒன்றை நாம் பேச்சு வழக்கில் கொண்டுள்ளோம். எம்மில் சிலர் இன்னும் அதனைப்பேசி வருகின்றனர். ஆனாலும் நாம் தமிழ் மொழியையே பேச்சு மொழியாகக் கொண்டுள்ளோம்.

கடந்து போன வன்முறைச் சூழல் முழுவதும் யுத்தத்திற்கும் வறுமைக்கும் இடையில் சொல்லெணாத் துன்பங்களை அனுபவித்து தற்போது தான் நிம்மதிப் பெருமூச்சு விடுகின்றோம்.

எமது கிராமங்களைச் சுற்றியிருக்கும் வனப்பகுதியே எமக்கான பிரதான ஜீவனோபாய மார்க்கம் என்பதை தாங்கள் அறிவீர்கள். நீண்ட நெடுந்துயர் வாய்ந்த எங்கள் வாழ்க்கைக் காலம் தாங்கள் ஆட்சிக்கு வந்ததன் பின்பு மாற்றமடையும் என்கிற நம்பிக்கையில் எங்கள் நாளாந்த தொழில்களில் ஈடுபட்டு வந்தோம்.

ஆனாலும் கடந்த ஒரு மாத காலமாக எமது பகுதியில் மிகவும் பாரதூரமான செயற்பாடுகள் நடைபெற்று வருவது எமக்கு மிகுந்த வேதனையை அளிக்கிறது.

அனல்மின் நிலையம் ஒன்று இப்பகுதியில் அமைக்கப்படப் போவதாகவும் இனிமேல எங்களால் சமையலுக்கான விறகைக் கூட எமது வனப்பகுதியிலிருந்து பெறமுடியாதென்றும் கூறி எங்கள் பகுதியைச் சுற்றி பாரிய வேலிகளை அமைத்து வருகிறார்கள். தற்போது அடைக்கப்படும் இப்பகுதியின் வனம் முழுவதும் காலம் காலமாக எமது ஜீவனோபாயத்திற்கான வனப்பகுதியாகும்.

எங்களது குழந்தைகள் வறுமையிலும் செம்மையான எதிர்காலத்தைப் பெறவேண்டும் என்பதற்காக நாங்கள் முயற்சித்து எங்கள் பகுதியில் கட்டுவித்த கிறவல்குழி சிவசக்தி வித்தியாலயத்தின் வேலியோரமாக தற்போதைய வேலி அமைக்கப்படுகின்றது.

இம்முயற்சிகள் எமது இருப்பைக் கேள்விக்குறியாக்குவதுடன் எமது சந்ததியினரின் எதிர்காலத்தையும் சேர்த்து மண்தோண்டிப் புதைக்கும் நடவடிக்கையாகும்.

இம்மின்சார நிலையம் அமைப்பது தொடர்பாகவோ அல்லது அதனது பாதக சாதக அம்சங்கள் தொடர்பாகவோ எந்த ஒரு அரச அலுவலரும் இது வரையில் எம்முடன் பேசவில்லை.

எனவே நல்லாட்சிக்கான ஆணையை மக்களிடமிருந்து பெற்றுக் கொண்ட பெருந்தலைவர் என்கிற வகையிலும், இந்த நாட்டின உழைக்கும் ஏழை மக்களின் வாழ்க்கையை நன்குணர்ந்தவர் என்கிற வகையிலும் இந்த நாட்டிலே வாழுகின்ற பழங்குடியினர் ஏனைய நாடுகளைப் போலவே பாதுகாக்கப்பட வேண்டியவர்கள் என்பதை நன்குணர்ந்தவர் என்கிற வகையிலும் எமக்கான வனப்பகுதியை எமக்கென மீட்டுத்தந்து எமது ஜீவனோபாயத்தையும் எமது பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளை பாதிக்கும் செயற்பாடுகளை நிறுத்த உத்தரவிட வேண்டும்.

மேலும் எமது பிள்ளைகளின் எதிர்காலத்தையும் பாதுகாப்பதுடன் இயற்கையான வாழ்க்கையை வாழ்ந்து வரும் இப்பகுதி விவசாயிகளையும் மீனவர்களையும் கால்நடை வளர்ப்போரையும் எம்முடன் சேர்ந்து நிம்மதியாக வாழ வழிவகை செய்ய வேண்டும் என தங்களை மிகவும் வினயமாகக் கேட்டுக் கொள்கின்றோம் என பூர்வீக பழங்குடியின மக்கள் தமது கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளனர். (செ-12)

## தனிப்பட்ட வகை...

தில் தெரிவித்துள்ளார்.

சுன்னாகம் குடிநீர் பிரச்சினை தொடர்பான நேற்றைய வழக்கு விசாரணையின் போதே வட மாகாண விவசாய அமைச்சர், மல்லாகம் நீதவான் ஏ. ஜூட்சன் முன்னிலையில் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்தப் பிரச்சினைக்கு வட மாகாண சபையே பொறுப்பேற்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, சுன்னாகம் குடிநீர் பிரச்சினைக்கு மத்திய அரசாங்கமே பொறுப்புக் கூற வேண்டும் என நேற்றைய விசாரணையின் போது மத்திய சுற்றாடல் அதிகார சபை, மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

அதனைத் தொடர்ந்து சுன்னாகம் குடிநீர் பிரச்சினை தொடர்பான வழக்கு விசாரணை எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தால் மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (செ-12)

## அரசின் மீதான...

ஜேர்மனிய பாராளுமன்றத்தின் அங்கத்தவர்கள் உள்ளிட்ட 9 பேர் அடங்கிய குழுவினர் நேற்றைய தினம் யாழ் மாவட்டத்துக்கு வருகை தந்து யாழ் மறை மாவட்ட ஆயர் ஜஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசத்தை சந்தித்து கலந்துரையாடினர்.

இக் கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே ஆயர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜேர்மனிய பாராளுமன்றத்தில் அங்கத்தவர்களாக இருப்பவர்கள் இங்கு வந்து எமது நாட்டில் புதிய அரசு ஆட்சிக்கு வந்த பின்னரான நிலைமைகள் குறித்து ஆராய வந்துள்ளனர்.

அந்த வகையில் வடக்கில் எவ்வாறான செயற்பாடுகள் மாற்றங்கள் இடம்பெறுகின்றன என்பது தொடர்பில் என்னிடம் வினவியிருந்தனர்

நான் அவர்களிடம் சில விடயங்களை குறிப்பிட்டிருந்தேன். அதாவது வடபகுதி மக்கள் புதிய அரசில் நம்பிக்கை வைத்திருந்தார்கள். ஆனால் அந்த நம்பிக்கை தற்போது குறைவடைந்து கொண்டுபோகிறது. புதிய அரசின் மீது வடபகுதி மக்களின் நம்பிக்கை குறைவதற்கான காரணம் வடபகுதி மக்கள் பலர் 25 வருடங்களுக்கு மேலாக இடம்பெயர்ந்துள்ளார்கள். பலாலி, ஊறனி, மயிலிட்டி, காங்கேசன்துறை, வசாவிளான் போன்ற இடங்களில் இருந்து இடம்பெயர்ந்து வேறு இடங்களில் வாழ்கிறார்கள். அவர்களை மீள்குடியேற்றுவதற்கு தற்போதுள்ள புதிய அரசு முயற்சி எடுத்து வருகின்ற போதிலும் அந்த முயற்சி போதுமானதாக இல்லை.

அடுத்ததாக சிறையில் இருக்கும் எமது அரசியல் கைதிகள் அனைவரது பெயர்கள் விபரங்களையும அரசு வெளியிட வேண்டும். அவர்களின் வழக்குகளை துரிதப்படுத்த வேண்டும்.

காணாமல் போனவர்களின் விபரங்களை தெரிவித்து காணாமற்போனவர்கள் இருக்கின்றார்களா? அல்லது இறந்து விட்டார்களா? என்ற முடிவினை மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். இவற்றை அறிவதில் மக்கள் ஆவலாக இருக்கிறார்கள்

மேலும் போரினால் அதிகம் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள மக்களுக்கு அதிகளவான உதவிகளை பெற்றுக்கொடுத்து அவர்களை மறுபடியும் நல்வாழ்வுக்கு இட்டுச்செல்ல வேண்டும் என அவர்களுக்கு தெரிவித்துள்ளேன் என ஆயர் மேலும் தெரிவித்தார். (செ-9)

## நேற்றும் தமிழ்...

ஆனால் அந்த அணியின் எம்.பி.க்களான ரோஹித அபேகுணவர்தன, முன்னாள் எம்.பி. யான பண்டுபண்டார நாயக்க உட்பட மகிந்த அணி ஆதரவாளர்கள் சிலர் கலந்து கொண்டனர்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று வெள்ளிக்கிழமை 1956 இன் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவின் சுதந்திர வெற்றியின் மக்கள் புரட்சி என்ற தொனிப்பொருளில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 60 ஆம் ஆண்டு வருடாந்த நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, முன்னாள் பிரதமர் டி.எம். ஜயரத்ன மற்றும் சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும், அமைச்சருமான துமிந்த திஸாநாயக்க, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளருமான மகிந்த அமரவீர மற்றும் அமைச்சர்கள், ஆளுநர்கள் உட்பட ஐக்கிய தேசியக் கட்சி என பல கட்சிகளின் முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

நிகழ்ச்சி தொடங்குவதற்கு முன்பதாக மாநாட்டு மண்டபத்தில் முன்பாக உள்ள பண்டாரநாயக்க மற்றும் சிறிமாவோவின் உருவச்சிலைகளுக்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டதோடு, அதன்பின்னர் ஜனாதிபதியினால பண்டாரநாயக்க தொடர்பான புகைப்படக் கண காட்சி திறந்து வைக்கப்பட்டது.

நிகழ்ச்சியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் பண்டாரநாயக்க தொடர்பான ஆவணப் படம் காண்பிக்கப்பட்டது. அத்தோடு விசேட முத்திரையொன்றும் தபால் அமைச்சர் ஹலீமினால் வெளியிடப்பட்டு ஜனாதிபதிக்கு கையளிக்கப்பட்டது.

பண்டாரநாயக்க தொடர்பான சொற்பொழிவுகளை பேராசிரியர்களான ரோஹண லக்ஷ்மன் பியதாஸ, சரத் விஜேயசூரிய ஆகியோர நிகழ்த்தினர். ஆனால் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது அணியை சேர்ந்தவர்கள் பலர் கலந்து கொள்ளவில்லை.

தேசிய கீதம் நிகழ்ச்சி ஆரம்பமாவதற்கு முன்னதாக சிங்களத்திலும் அதனையடுத்து தமிழிலும் காணொளி மூலம் இசைக்கப்பட்டது. (செ-12)


சிகரம் ஹொட்டேல் கற்கை நிறைவுசெய்த மாணவர்கள் மலேசியா சென்றடைந்தனர்!

யாழ்ப்பாணத்திலேயே 6 மாதம் நிறைவுசெய்து April 1ம் திகதி SEGi University 3 வருட Diploma இல் இணைந்தனர்



O/L உடன்
Diploma in Hospitality Management
Leading to University of Sunderland UK
NO IELTS, Bank Balance, Interview

கற்கைநெறிக்காலத்திலேயே பகுதிநேர வேலைவாய்ப்பு.
6 மாதத்தில் வெளிநாட்டு விசா ஏற்பாடு.
கற்கைநெறி நிறைவில் யாழ்-கொழும்பு ஹொட்டேல்களில் வேலைவாய்ப்பு.
தொழிலில் இணைந்துகொண்டு உயர்கல்வியை தொடரும் வசதி.

April INTAKE அனுமதிகளுக்கு 077 3616 798 021 222 0011

SIKARAM ACADEMY Business · Hospitality · English
275-2/1 மணிக்கூட்டுக்கோபுர வீதி
யாழ்ப்பாணம் (வைத்தியசாலை பின்புறம்)
www.sikaram.lk
(சி-4264)

2மணித்தியாலத்தில் கணினி திருத்தம்
உங்களது வீடுகள் அலுவலகங்களுக்கே வந்து திருத்தி தருகிறோம். அழையுங்கள் 0779086737
கணினி திருத்தக் கட்டணம் 500/- Computer Repair
லப்டொப் டெஸ்க்டொப் கணினிகள் திருத்தம்
கணினிகள் விற்றல் பாவித்தகணினிகள் வாங்குதல்
GUNA BEST PC
CCTV Camera Sale Installation etc.
50/12, Hospital Road, Vairavar Kovil Lane, Jaffna.
கணினி பயன்பாட்டின் உச்ச அனுகூலங்களை எமது மக்கள் பெறவேண்டும் என்பதற்காக நிபந்தனையுடனான சேவைகளை வழங்குகிறோம்.
(4115)

LOGIC 2018
எஸ்.எஸ்.மனோகரன்
ஆரம்பம் :- 9.04.2016 10.00 மணி
BEACON யாழ்.நகர்
(C-4239)

ALLIANCE FRANÇAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக் கொள்ளுங்கள்
பிரெஞ்சு மொழி



● பிரான்ஸ் FOREIGN MINISTRY & FRENCH EMBASSY யின் கீழ் இயங்குகிறது. தலைமை நிறுவனம் FRANCE இல் உள்ளது.
● எமது CERTIFICATES & INTERNATIONAL DIPLOMA ( DELF A1) பெற்றால் பிரான்ஸில் உள்ள கட்டாய பரீட்சை தேவையில்லை.
● இலவசம்: படிக்கும் பாடங்களின் PHOTOCOPIES, படித்ததற்கான LETTRE, VISA FORM நிரப்புதல் CD, BOOKS பாவனை...
● யாழ், வன்னி, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் AF இல் படித்தே வெளிநாடு செல்கிறார்கள்



ஆரம்பம் - 17.04.2016 உடன் அழைத்துப் பதியவும்
021 222 8093 61, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
(4072)

SHAMROCK
ஈச்சமோட்டை, யாழ்
இரண்டாம் தவணைக்கான வகுப்புகள் யாவும் இன்று சனிக்கிழமை (09.04.2016) ஆரம்பமாகின்றன. விடுமுறை நாட்களில் விசேட வகுப்புகள் நடைபெறும்.
(4167)

வீடு வாடகைக்கு
உரும்பிராயில் வயதான பெண்களுக்கு வீட்டின் ஒரு பகுதி வாடகைக்கு கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு - 0776059613
(4151)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.04.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.